விலை
ரூபா 20

பக்கங்கள்
32

# உதயன்

சுடர் 31 கதிர் 230 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 29, புதன்கிழமை 13.07.2016

மகாராஜா பொதிகள் சேவை
DOOR TO DOOR SERVICE
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
ஜெர்மன் 700/=
லண்டன் 600/=
பிரான்ஸ் 700/=
உங்கள் வீட்டுக்கே சென்று கையளிக்கப்படும் சேவை
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
www.parcel.lk

# பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை தெளிவாகச் சொல்கிறது ஐ.நா. தீர்மானம்

### மங்களவின் கருத்தை மறுத்துரைக்கிறார் மனித உரிமைகள் சட்டத்தரணி

யாழ்ப்பாணம், ஜூலை 13
போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தில் தெளிவாகப் பரிந்துரைக்கப்பட்டது. தீர்மானத்தின் செயற்படு பந்தி ஆறில் நேரடியாகவும், பந்தி ஒன்றில் மறைமுகமாகவும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெனிவாத் தீர்மானத்தில் இந்த விடயம் குறிப்பிடப்படவில்லை என்று இலங்கை அரசு மறுப்பதானது, தீர்மானத்தை ஒருதலைப்பட்சமாக மீறும் செயற்பாடாகும்.

இவ்வாறு தெரிவித்தார் பன்னாட்டு சட்டங்களில் நிபுணத்துவம்பெற்றமனித உரிமைகள் ஆர்வலர் சட்டத்தரணி நிரான் அங்கிற்றல்.

போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகளை உள்வாங்குவதாக ஐ.நா. தீர்மானத்தில் குறிப்பிடப்படவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தெரிவித்தார். இதே கருத்தை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் சட்டத்தரணி நிரான் அங்கிற்றல் தெரிவித்ததாவது:
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட பக்.27

## மக்களுக்கு உதவி வழங்கச் சட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடக்கு மாகாண மக்களின் வறுமையைப் போக்கி நிரந்தர வருமானத்தைப் பெற்றுக் கொள்வதை நோக்காகக் கொண்டு, வடக்கு மாகாண வாழ்வாதார அபிவிருத்தி நியதிச் சட்ட வரைவு, சபையில் முதலாம் வாசிப்புக்காக நேற்று முன்வைக்கப்பட்டது.
சபையின் ஜூலை மாத முதல் அமர்வு நேற்று இடம்பெற்றது. பக்.27

## 15 அத்தியாவசிய பொருள்களின் புதிய விலை இன்று

கொழும்பு, ஜூலை 13
சீனி, பருப்பு, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய், கருவாடு, பாமொஉள்ளிட்ட 15 அத்தியாவசியப் பொருள்களின் விலைக் குறைப்பு பற்றிய அறிவிப்பு இன்று பக்.05

# சாம்பல்தீவில் விகாரை அமைப்பதால் பதற்றம்

### தெற்கிலிருந்து வந்த பிக்குகள் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13
திருகோணமலை நகரிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சாம்பல்தீவு புல்லைக்குளம் பாலத்தின் அருகில் 4 அடி புத்தர் சிலை வைக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்புடன் விகாரை அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.
"நேற்றுப் பகல் (நேற்று முன்தினம்) கொழும்பு, கண்டியிலிருந்து வந்த பௌத்த பிக்குகள் பாலத்தின் அருகில் அடாத்தாகப் புத்தர் சிலையை நிறுவினர். பக்.27


சாம்பல்தீவில் முன்தினம் நிறுவப்பட்ட புத்தர் சிலை.


2005ஆம் ஆண்டு திருகோணமலை பஸ் நிலையப் பகுதியில் நிறுவப்பட்ட புத்தர் சிலை

## ஓகஸ்ட் முதல் பஸ் கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 13
பஸ் கட்டணங்களை 6 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியது. ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பஸ் கட்டண அதிகரிப்பு நடை பக்.27

# ஆழ் கடலில் இறங்கிப் போராடும் நிலைக்கு எம்மைத் தள்ளாதீர்கள்

### திரண்டெழுந்த வடக்கு மாகாண மீனவர்கள் இந்திய - இலங்கை அரசுகளுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13
ஆழ் கடலில் இறங்கிப் போராடியவர்கள் நாங்கள். அதனை முடிந்தால் மறக்க வையுங்கள். மீண்டும் போராடும் நிலைக்கு எம்மைத் தள்ள வேண்டாம்.

இவ்வாறு இந்திய - இலங்கை அரசுகளுக்கு எச்சரித்தனர் வடக்கு மாகாண மீனவர்கள்.



இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கக் கோரும் இந்திய அரசின் யோசனையை உடனடியாக இலங்கை அரசு கைவிடவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். வடக்கு மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தி, வடக்கு மாகாண மீனவர்கள் நேற்று வடக்கு மாகாண சபையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

மகிந்தவின் கொடுமைக்காக வாக்களித்தே நல்லாட்சி என நம்பி இந்த சொல்லாட்சி அரசை உருவாக்கினோம். இவர்களும் வெறும் சொல்லுடன் மட்டும் நின்றால் இந்த அரசையும் தூக்கி எறிவோம். அது மக்களால் முடியும்" எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உரக்கக் குரல் எழுப்பினர்.

(விரிவு பக்கம் 8)

# தாண்டிக்குளம்தான் இடம் தீர்மானத்தில் மாற்றமில்லை

### வடக்கு மாகாண சபை நேற்றும் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வவுனியா பொருளாதார வலயம் தாண்டிக்குளத்தில் அமைக்கப்படவேண்டும் என்ற வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை. தீர்மானத்தில் மாற்றம் செய்ய முடியாது. மாகாணசபை விதிக்கு அமைவாக, சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது மற்றொரு தீர்மானம் மேற்கொள்ள முடியாது.
இவ்வாறு வடக்கு மாகாண சபையில் பக்.28

# வடமாகாண சபையினர் பற்றி முறைப்பாடுகளாய் குவிகின்றன

### இப்போது சொல்கிறார் முதலமைச்சர் விசாரணை நடத்தக் குழுவும் கேட்கிறார்

யாழ். ஜூலை 13
வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்களுக்கு எதிராகப் பல தரப்புகளிடமிருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அவற்றை விசாரணை செய்வதற்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட வேண்டும்.
இவ்வாறு யோசனை முன்வைத்தார் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். இதற்குச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான பிரேரணை வடமாகாண சபையில் முன்வைக்கப்பட்டது.
"முதலமைச்சருக்கு எதிரான முறைப் பக்.28



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேரளா செல்கின்றனர் வடக்கு உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பத்துப் பேர், உள்ளூராட்சி நிர்வாகம், அதிகாரப் பகிர்வு - பரவலாக்கம் தொடர்பான செயலமர்வுக்காக இந்தியாவின் கேரள மாநிலத்துக்குச் செல்லவுள்ளனர்.

'ஏசியன் பவுண்டேசன்' நிறுவனத்தின் ஏற்பாட்டிலேயே இந்தப் பயண ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சி.வி.கே.சிவஞானம், பா.கஜதீபன், க.விந்தன், ச.சுகிர்தன், ம.அன்ரனி ஜெகநாதன், ஜவாஹிர், ப.அரியரட்ணம், வை.தவநாதன், இ.இந்திரராசா, ம.குணசீலன் ஆகியோரே கேரளா செல்கின்றனர். இவர்களுடன் வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் உள்ளிட்ட ஆறு செயலாளர்களும் செல்கின்றனர்.

எதிர்வரும் 24ஆம் திகதி புறப்படும் இவர்கள் 30ஆம் திகதி நாடு திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# சிவில்சார் விவகாரங்களில் தலையிடக்கூடாது ராணுவம்

## 4 மாதங்களினுள் 2ஆவது தீர்மானத்தை நிறைவேற்றியது வடக்கு மாகாண சபை

யாழ்ப்பாணம், ஜூலை 13
**சிவில் விவகாரங்களில் பாதுகாப்புத் தரப்பினர் தலையீடு செய்யக்கூடாது என வலியுறுத்தி** வடக்கு மாகாண சபையினால் நான்கு மாதங்களினுள் இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''முல்லைத்தீவு மீனவர்கள் தொடர்பில் ஜூன் 10ஆம் திகதி நடுவண் அரசின் கடற்றொழில் அமைச்சில் கூட்டம் நடைபெற்றது. இதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் முல்லைத்தீவு மாவட்டக் கட்டளைத் தளபதி மற்றும் கடற்படை அதிகாரி ஆகியோரை நியமித்தது தவறாகும். முல்லை. மாவட்ட மீனவர்கள் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை கட்டளைத் தளபதி அந்தக் கூட்டத்தில் தெரிவித்திருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. முதலமைச்சர் இந்த விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்ற பிரேரணையை ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன் முன்வைத்தார்.

இந்தப் பிரேரணை மீது விவாவதம் நடைபெற்றது. இறுதியில் சபையில் நிறைவேற்றப்படும் போது, சிவில் விவகாரங்களில் பாதுகாப்புத் தரப்பினர் தலையிடக்கூடாது என்ற வடிவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏப்ரல் மாதம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்விலும் இதேபோன்றதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில் வடக்கு மாகாண சிவில் விவகாரங்களில் இராணுவத்தினர் தலையீடு செய்யக்கூடாது என்று குறிப்பிடப்பட்டது. கொக்கிளாய் சிங்களக் குடியேற்றங்களைப் பார்வையிடச் சென்ற கிராம சேவையாளர்களுக்கு இராணுவத்தினர் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பிலான விடயத்திலேயே அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு நான்கு மாதங்களினுள்ளேயே, அதனை ஒத்த இன்னொரு பிரேரணை சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது. (வ-5)

# சீல் வைத்த மருத்துவ நிலையத்தை நேற்றுச் சோதனையிட்டது பொலிஸ்




கிளிநொச்சி, ஜூலை 13
கருக்கலைப்பு இடம்பெற்றதாக குற்றம்சாட்டப்பட்டு நேற்றுமுன்தினம் சீல் வைக்கப்பட்ட தருமபுரம் மருத்துவ நிலையத்தில் நேற்றையதினம் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்றன.

சட்ட வைத்திய அதிகாரி மற்றும் பொலிஸ் தடயவியல் பிரிவினர் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் சோதனைகளை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி நீதிவான் மன்றத்தின் கட்டளைக்கு அமைய கிளிநொச்சி மற்றும் யாழ்பாண சட்ட வைத்திய அதிகாரிகள், பொலிஸ் தடயவியல் (சோக்கோ) பிரிவினர் குறித்த மருத்துவ நிலையத்தில் கருத்தடை சம்பந்தமான ஆதரங்கள் ஏதும் உள்ளனவா எனப் பரிசோதனை செய்தனர். பரிசோதனை பற்றிய அறிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி நீதிமன்றில் முன்வைக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-ரி3)

# சபையின் தீர்மானத்துக்கு ஏதாவது பெறுமதி உண்டா?

## விசனப்பட்ட அவைத்தலைவர்

மாகாணசபைத் தீர்மாணங்களுக்கு என்ன பெறுமதி இருக் கின்றது என்று, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நேற்றுச் சலித்துக் கொண்டார்.

வடக்கு மாகாண சபை அமர்வு நேற்று இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன் முதலில் ஒரு பிரேரணையை முன்வைத்தார். தொடர்ந்து இரண்டாவது பிரேரணையை முன்வைக்க அனுமதி கோரினார். இதன்போது அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பிரேரணைகளுக்கு என்ன பெறுமதி இருக்கின்றது என்று தெரியவில்லை என்றார்.

பொருளாதார வலயம் தாண்டிக் குளத்தில் அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் அதற்குமாறாக, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் செயற்பட்டி ருந்த பின்னணியிலேயே அவைத் தலைவர் நேற்று இவ்வாறு சலித்துக் கொண்டார். (வ-5)

# மின் தடை

மின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை இடைக்காடு, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, வவுனியாகோவில் குளம், சிவன் கோவிலடி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதார வலயம் பற்றிப் பேச ஹரிசனுக்கு அருகதையில்லை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி காட்டம்

அமைச்சர் ஹரிசனுக்கு வடக்கில் அமையவுள்ள பொருளாதார வலயம் தொடர்பில் தேவையில்லாத கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு என்ன அருகதை இருக்கிறது?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

“பொருளாதார வலயத்துக்கு வவுனியா நகரிலிருந்து ஒன்று அல்லது இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் காணி வழங்கப்பட வேண்டும். இழுத்தடிப்பு தொடர்ந்தால் நிதி திறைசேரிக்கு திரும்பும்" என அமைச்சர் ஹரிசன் தெரிவித்தார். அவரின் இந்தக் கருத்துத் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளதாவது:

பொருளாதார வலயம் எங்கே அமைய வேண்டும் என்பதனை தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும்தான் முடிவு செய்யவேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடம் கருத்து வேறுபாடுகள் இருந்தது உண்மைதான். இறுதி முடிவெடுக்கும் அதிகாரத்தை வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை விட்டது. கருத்தை அறிவதற்காக வாக்கெடுப்பு இடம்பெற்றது. 21 பேர் ஓமந்தையினையும், 5 பேர் தாண்டிக் குளத்தையும் தெரிவு செய்தனர்.

அனுராதபுரத்தில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகி, பின்னர் கிராமிய பொருளாதார அமைச்சராக தெரிவான பி.ஹரிசனுக்கு வவுனியா பொருளாதார வலயம் தொடர்பில் தேவையில்லாத கருத்துக்களைத் தெரிவிக்க என்ன அருகதை இருக்கிறது.

பொருளாதார வலயம் வவுனியா நகரில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்துக்குள்தான் அமைய வேண்டும் என்று நிபந்தனை விதிக்க நீங்கள் யார்? தமிழ் மக்களின் முக்கிய அபிவிருத்திப் பணி தொடர்பில் தாங்களே தீர்மானமெடுத்துவிட்டு தமிழ் மக்களிடம் திணிக்கும் அதிகாரத்தை உங்களுக்கு யார் வழங்கியது?

இழுபறிகள் இருந்தாலும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடம் வாக்கெடுப்பு நடத்தி இதற்கொரு முடிவு காணப்பட்டுவிட்டது. அது பேய் உலாவும் இடமாக இருந்தால் என்ன? வடக்கின் பொருளாதார மையம் வடக்கின் மத்தியில்தான் அமைய வேண்டும். ஓமந்தை அல்லது மாங்குளத்தில் அமைந்தால் தமிழ்மக்களுக்கு நன்மை அளிக்கும். குறுகிய நோக்கிலும், அரசியல் ஆதாயத்துக்காக சிந்திப்பவர்களால் தான் தமிழினம் இன்று இன்னல்களை எதிர்கொண்டுள்ளது.

பொருளாதார வலயம் எங்கு அமைய வேண்டும் என்பதனை அனுராதபுரத்தில் இருந்து வந்த ஒருவர் தீர்மானிப்பதை அனுமதிக்க முடியாது. இதனை தீர்மானிப்பதற்கு தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் இருக்கின்றார்கள். இவை எல்லாவற்றையும் தாண்டி நடுவண் அரசின் பொறுப்புள்ளவர்கள் நிபந்தனைகள் விதிப்பதை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது - என்றுள்ளது. (வ-5)

# விக்கி இல்லாத சபையில் தீர்மானங்கள் வேண்டாம்

## ஒரு முறை பட்டதே போதும் என்றார் சுகிர்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 13
முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இல்லாத நேரத்தில் அவருடன் தொடர்புடைய எந்த விடயங்களையும் வடக்கு மாகாண சபையில் எடுக்கவேண்டாம். ஏற்கனவே ஏற்பட்ட கசப்பான அனுபவம்போதும்.

இவ்வாறு சபை அமர்வில் தெரிவித்தார் ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன்.

ஆளும்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதியின் இரண்டு பிரேரணைகள் சபை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இரண்டு பிரேரணைகளும் முதலமைச்சருடன் தொடர்புடையவை. முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதனால், சபையின் நேற்றைய அமர்வில் பங்கெடுக்கவில்லை. இதனால் பிரேரணையை அடுத்த அமர்வில் எடுப்பதாக பிரேரணையை முன்வைத்த உறுப்பினர் பரஞ்சோதி தெரிவித்தார்.

ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின், பிரேரணை எடுக்கப்படாமலேயே தொடர்ந்து கொண்டுபோகும், கடந்த பல அமர்வுகளாக இந்தப் பிரேரணை தொடர்ந்துகொண்டிருக்கின்றது, அமைச்சர் வராவிட்டாலும் சபையில் அதனை எடுக்க முடியும் என்றார். அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பிரேரணையை சபையில் எடுப்பதா இல்லையா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் அதனை முன்வைத்த உறுப்பினருக்குத் தான் உண்டு என்றார்.

பிரேரணை இந்த அமர்வில் எடுக்கவில்லையாயின், அதனை மீளப்பெற்று அடுத்த அமர்வில் முன்வைக்கலாம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார். பிரேரணையை சபை அமர்வில் எடுத்துக் கொள்வதாக பரஞ்சோதி குறிப்பிட்டார்.

ஆளும் கட்சி உறுப்பினர் சர்வேஸ்வரன், “பிரேரணை முன்வைக்கப்பட்டால் விவாதம் நடக்கும். திருத்தங்கள் சொல்லப்படும். அதனைப் பிரேரணை கொண்டு வந்தவர் ஏற்று மாற்றம் செய்யக்கூடும். முதலமைச்சருடன் தொடர்புடைய விடயத்தில் முதலமைச்சர் விளக்கம் கொடுத்து சிலவேளை பிரேரணை முன்வைக்கப்படாமல் விடக்கூடும். எனவே முதலமைச்சர் சபையில் இருக்கும் போது அதனை எடுப்பது பொருத்தமானது" - என்றார்.

“சர்வேஸ்வரன் சொன்னது சரியானது. எங்களுக்கு கசப்பான அனுபவம் இந்த விடயத்தில் இருக்கின்றது. முதலமைச்சர் இல்லாத நிலையில் சபையில் எடுக்கப்பட்ட பொருளாதார வலயத்தீர்மானத்தை, சபையில் நிறைவெண் (கோரம்) போதாமல் இருந்தவேளையிலேயே நிறைவேற்றியதாகத் தெரிவித்தவர் முதலமைச்சர். அன்றைய தினம் கோரம் இருந்தது. சபையின் கௌரவம்தான் இதனால் கேள்விக்கு உள்ளானது. எனவே முதலமைச்சர் சபையில் இருக்கின்றபோது இதனை எடுப்பதே பொருத்தம்" என்றார் சுகிர்தன்.

இறுதியில் பிரேரணையை அடுத்த அமர்வில் எடுப்பதாக ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி குறிப்பிட்டார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரைத் தாக்கியதாக ஆசிரியர் மீது குற்றச்சாட்டு

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை ஒன்றின் அதிபரை, அதே பாடசாலையின் ஆசிரியர் தாக்கியுள்ள தாகக் குற்றஞ்சாட்டப்பட்டுடன் அதிபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. பாடசாலையில்நடந்த சம்பவம் ஒன்று தொடர்பில் அதிபர் கேட்டபோது ஆசிரியர் அவரைத் தாக்கிய தாக கூறப்படுகின்றபோதும், அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.


இது குறித்து அதிபர், வலயக் கல்வி அலுவலகத்தில் முறையிட்ட பின்னர், வீடு செல்ல முற்பட்ட வேளையில் மயக்கடைந்தார். அதனால் அதிபர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(வ-4,10)


## புகைப்படப்பிரதியாக்கம்

4R-8/=
பாஸ்போட், விசா, N.I.C
அளவிலான
புகைப்படப்பிரதிகளையும்
கலர்பிறிண்ட் மற்றும்
டியுறோ.கிளாஸ் பிறேம்களையும்
உடனுக்குடன் பெற்றுக்
கொள்ளலாம்.
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
யாழ் வீதி, மானிப்பாய்.
T.P: 077 949 5065



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியைச் சேர்ந்த
**திருமதி கே.அமிர்தகௌரி** அவர்களின்
அன்புக் கணவர்
**மணியம் கேதீஸ்வரநாதன்**
11.07.2016 திங்கட்கிழமை அகால மரணமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/புனித தெரேசாள் மகளிர்கல்லூரி அச்சுவேலி.**

## கண்ணீர் அஞ்சலி



புத்தூரைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
**மணியம் கேதீஸ்வரநாதன்**
(யாழ் தொழிநுட்பவியல் கல்லூரி உத்தியோகத்தர்)
அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு
12.05.1962

இறப்பு
11.07.2016

**பணிப்பாளர், மேலதிகப் பணிப்பாளர்,**
**உத்தியோகத்தர்கள்,**
**தொழிநுட்பவியல் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

## துயர் பகிர்கின்றோம்



எமது வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபர்
**அந்தோனிமுத்து கிறகோரி**
**ஜெயசீலன்**
அவர்கள் 11.07.2016 அன்று இறைபதமடைந்தமையிட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அஞ்சலி நிகழ்வுகள் இன்று (13.07.2016) காலை 9.00 மணிக்கு எமது வித்தியாலயத்திலும் அதனைத் தொடர்ந்து நல்லடக்க ஆராதனை இரணைமாதா நகர் தேவாலயத்திலும் நடைபெறும்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**கல்வி சாரா ஊழியர்கள்.**
**கிளி/இரணைதீவு றோ.க.த.க. வித்தியாலயம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
10
.
01
.
1944



உதிர்வு
14
.
06
.
2016

### அமரர் வேலுப்பிள்ளை பாலசிங்கம்

(முன்னாள் வித்தியானந்தக் கல்லூரி அதிபர், ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் முல்லைத்தீவு கல்வி வலயம்)
**திதி: 14.07.2016 தசமி**

கடந்த 2016.06.14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் வேலுப்பிள்ளை பாலசிங்கம் அவர்களின் மரணச்செய்தி அறிந்து ஓடோடி வந்து எமக்கு ஆறுதலளித்தோருக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி, மின்னஞ்சல், முகநூல் மூலமும் கண்ணீரஞ்சலிப்பிரசுரங்கள், நினைவஞ்சலிப் பதாகைகள் வெளியிட்டும் தமது துயர்களைப் பகிர்ந்து கொண்டோருக்கும் எமக்கு இதர வழிகளில் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(13.07.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மறுதினமாகிய (14.07.2016) வியாழக்கிழமை நண்பகல் வேளை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

தண்ணீரூற்று,
முள்ளியவளை.

குடும்பத்தினர்.

## உதவியாளர் தேவை

இணுவில் சுன்னாகத்திலே வதியும் இரு வயோதிகப் பெண்களுடன்(சகோதரிகள்) தங்கியிருந்து பணிபுரிய 35 வயதுக்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு.0212240393
0777542174

## வேலையாள்கள் தேவை

மேசன்
கூலி
தொடர்பு.0773549625
0773551631

### பெயர் மாற்றம்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அரிச்சந்திரன் ரதி ஆகிய நான் இன்றிலிருந்து எனதுபெயரை அரிச்சந்திரன் இராசரத்தினம் என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையெப்பம் இடுவேன் என அனைவருக்கும் அறியத்தருகிறேன்.
இராசரத்தினம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர் சேவை தரம்-111 பரீட்சையில் சித்தியடைந்து
கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்
அவர்களிடமிருந்து அதிபர் சேவை தரம்-111
நியமனத்தை 09.05.2016 அன்று பெற்றுக்கொண்ட
எமது கல்லூரி ஆசிரியர்களான








திரு.ந.ஜெயரூபன்
B.BA,PGDE

திரு.க.ஞானராசா
B.A(Hons),PGDE

ஆகியோரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஊழியர் நலன்புரிச் சங்கம்
கிளி/பூநகரி மத்திய கல்லூரி

## முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம்

### பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை தொடர்பான கேள்வி கோரல் 2016/2017

வடமாகாண முத்லமைச்சர் அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் (MPC) அவர்களால் பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

Bid No. NP/05/02/PROC/CLE/2016
*(சுத்திகரிப்புச்சேவை)*

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 12 |
| 2 | கிளிநொச்சி | 03 |
| 3 | முல்லைத்தீவு | 03 |
| 4 | மன்னார் | 04 |
| 5 | வவுனியா | 03 |
| | மொத்தம் | **25** |

Bid No. NP/05/02/PROC/SEC/2016
*(பாதுகாப்புச்சேவை)*

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை பகல் / இரவு |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 24 |
| 2 | கிளிநொச்சி | 04 |
| 3 | முல்லைத்தீவு | 06 |
| 4 | மன்னார் | 07 |
| 5 | வவுனியா | 06 |
| | மொத்தம் | **47** |

1. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களையும், விலைக் கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கண்டி வீதி, கைதடி எனும் முகவரியில் அமைந்துள்ள முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாண அலுவலகத்தில் (தொ.பேசி இல. 021 2057112 / 021 2216115). பெற்றுக்கொள்ளலாம்.
2. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர்கள் வியாபாரப் பதிவுச்சான்றிதழ், கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதம் என்பவற்றினை சமர்ப்பித்து ஒவ்வொரு விலைக் கேள்விப்பத்திரத்திற்கும் ரூபா. 1000.00 மீளளிக்கப்படமுடியாத கேள்வி வைப்புப் பணத்தினை காசாக செலுத்தி அலுவலக நாட்களில் 15.07.2016 ஆம் திகதி தொடக்கம் 02.08.2016 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப.15.00 மணிவரை வடமாகாண முதலமைச்சர் அமைச்சில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விப் பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு விலைக்கேள்விதாரரால் விலைக்கேள்விப் பிணைப் பொறுப்பு பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விவரம் | தொகை ரூபா. | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 165,000.00 | 03.08.2016 - 07.11.2016 |
| 2. | சுத்திகரிப்புச் சேவை | 52,000.00 | 03.08.2016 - 07.11.2016 |

விலைக்கேள்விப் பத்திரங்கள் 03.08.2016 ஆம் திகதி மாலை 15.00 மணிக்கு முன்பதாக இவ்வமைச்சின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக் கேள்விப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பாதுகாப்புச் சேவைக்கான கேள்விப் பத்திரமாயின் "வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் பாதுகாப்புச் சேவைக்கான கேள்வி கோரல் **2016/2017**" எனவும், சுத்திகரிப்புச்சேவைக்கான விலைக் கேள்விப் பத்திரமாயின் "வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் சுத்திகரிப்புச் சேவைக்கான கேள்வி கோரல் **2016/2017**". எனவும் குறிப்பிடப்பட்டு "தலைவர் - பெறுகைக்குழு, முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. சுத்திகரிப்பு சேவைக்கான விலைக்கேள்விப் பத்திரங்கள் 03.08.2016 ஆம் திகதி பி.ப.15.00 மணிக்கும் பாதுகாப்புச் சேவைக்கான விலைக்கேள்விப் பத்திரங்கள் 03.08.2016 ஆம் திகதி பி.ப.15.30 மணிக்கும், முதலமைச்சர் அமைச்சின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

திருமதி.வி.கேதீஸ்வரன்,
தலைவர் - பெறுகைக்குழு,
முதலமைச்சரின் அமைச்சு,
வடமாகாணம்,
கண்டி வீதி,
கைதடி,
யாழ்ப்பாணம்.


(C/24301)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### Lion சரவணமுத்து ஸ்ரீநிவாசன்

(Retired Manager-Bank of Ceylon
Retired Manager -Pan Asia Bank Jaffna )



தோற்றம் 18.10.1944 மறைவு 12.07.2016

ஸ்ரீ மதிவாசா சுதுமலை மத்தியைப் பிறப்பிடமாகவும், ஈஸ்வரிவாசா நவாலி வடக்கையும் கொழும் பையும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து ஸ்ரீநிவாசன் நேற்று (12.07.2016) செவ்வாய்க்கிழமை மதியம் 2மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

**67.3/2 ST Lawrence Road.Wellawatte 0112362805**

தகவல்: **குடும்பத்தினர்.**

### அம்பலம் முத்துக்குமாரு (கொமாண்டர்)



**மலர்வு: 12.07.1932 உதிர்வு: 10.07.2016**

யாழ். நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், செட்டிக்குளம் 2ஆம் பண்ணையை வசிப்பிடமாகவும் இல. 188 திருநாவற்குளத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட அம்பலம் முத்துக்குமாரு (கொமாண்டர்) 10.07.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம்-பார்வதி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-சிவகாமி தம்பதியரின் மூத்த மருமகனும், கண்மணியின் பாசமிகு கணவரும், செல்லையா, அருமைநாயகம், விசாலாட்சி, தையல் அம்மா, தம்பிராசா, மயில்வாகனம் (J.P), தர்மலிங்கம் (J.P) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகம்மா, கந்தையா, சுப்பையா மற்றும் மனோன்மணி, பரமேஸ்வரி, கமலவேணி, றெஜினா, காலஞ்சென்றவர்களான சுப்பையா, கந்தையா மற்றும் பொன்மணி, புஸ்பவதி, இராஜேஸ்வரி, நடராசா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் உருத்திராதேவி (பேபி, வவுனியா) மனோறஞ்சிதம், (பிறின்சி-விஸ்வமடு) விஜயகுமார் (ஜேர்மன்), சாந்தகுமார் (பிரான்ஸ்), விமலாதேவி (இந்தியா) கலையரசி (ஜேர்மன்) உதயகுமார் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சூசைநாதன் (வவுனியா) யேசுதாசன் (விஸ்வமடு) டன்சி (ஜேர்மன்) ஆதிதேவி (பிரான்ஸ்) யோகராசா (பெல்ஜியம்) சிவகரன் (ஜேர்மன்) உஷாந்தா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், மக்ரலின், யூலியஸ், கனகா, காலஞ்சென்ற ஜனனி மற்றும் அனிற்றா, இளங்குமரன், விஜிந்தன், நன்சி, தினேஸ், தானு, நிலா, றம்மியா, சுருதிகா, கஜந்தன், சயந்தன் சஞ்சயன், சுகிர்தன், கீர்த்தனா, சியாம், பிறிந்தன், நிந்துஜா நிவேதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2016) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் திருநாவற்குளம் வவுனியாவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செட்டிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 188, திருநாவற்குளம், வவுனியா.**

தகவல்: **குடும்பத்தினர். 024 56 89 700**


## கேணியில் குதித்து படுகாயமடைந்தவர் முன்தினம் சாவு

தண்ணீரூற்று கேணியில் குளிப்பதற்காக அதற்குள் குதித்தவர் முள்ளந்தண்டு, முண்ணாணில் பாதிப்பு ஏற்பட்டு சிகிச்சை பயனளிக்காது யாழ் போதனா வைத்திய சாலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

முள்ளியவளையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சம்பவத்தில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த மணியம் கேதீஸ்வரநாதன் (வயது- 54) என்பவரே உயிரிழந்தார். கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரியில் உத்தியோகத்தராகவுள்ள குறித்த குடும்பத்தலைவர் சக பணியாளர்களுடன் சேர்ந்து சுற்றுலா சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் கந்தசாமி



மாவிட்ட புரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தசாமி நேற்று (12.07.2016) செவ்வாய் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் பொன்னர்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் பஞ்சவர்ணத்தின் (செல்லக்கிளி) அன்புக் கணவரும் பிறேமநந்தினி, சசிக்குமார் ஆகியோரின் தந்தையும் இரத்தினராசா, றோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும் யதுசன், திலஷ்சன், திலஷ்சி ஆகியோரின் பேரனும் சிவலிங்கத்தின் சகோதரனும் ரஞ்சினியின் மைத்துனரும் சறோஜினி சந்திரதேவி, மகேஸ்வரன், நவமலர், கலாறஞ்சினி,மாங்களேஸ்வரி (ரமா) ஆகி யோரின் உடன் பிறவாச் சகோதரனும் இராசரூபன், ஜெனேந்திரன், டினேஸ்குமார், சுரேஸ்குமார் ஆகியோ ரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2016) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சன்காட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வாளி தொழிற்சாலை வீதி, மாவிட்டபுரம்.**

தகவல்: **குடும்பத்தினர்**

### திருமதி இலட்சுமி கிருஸ்ணபிள்ளை (தங்கம்மா)



மீசாலை தெற்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி கிருஸ்ணபிள்ளை கடந்த (11.07.2016) திங்கட் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான சின்னப்பு-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை(J.P.) அவர்களின் அன்பு மனைவியும் முருகேசு, காலஞ்சென்ற தம்பு மற்றும் நல்லம்மா, கந்தையா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சறோஜா, செல்வராணி, வளர்மதி . சுசீலா, இராஜவ ரோதயம் (இந்தியா), சந்திரவரோதயம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பிறைசூடி , இரத்தினம்,இராசேந்திரம், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, பாரதி (இந்தியா), சுலோசனா (லண்டன்) ஆகி யோரின் அன்பு மாமியாரும் பிரதினி, நாவஸ்கன், கபின் (ஆஸ்திரேலியா), கபிஸ்ரன் (கட்டார்), பிறைசன், இன்பரூபி, ஜெரூபி, சாந்தரூபி,விஜிதரூபி, காலஞ்சென்ற செல்வ ராஜி மற்றும் கிருஷாந் (ஆஸ்திரேலியா), துவாரகா, தர்ஷி, ராஜீவ் (ஆஸ்திரேலியா), கஜன் (இந்தோனேசியா), கஜீபன், ஸ்ரீகோபி, காலஞ்சென்ற வசந்தகோபி மற்றும் கோபிகா (யாழ் பல்கலைக்கழகம் முகாமைத்துவபீடம்), காலஞ்சென்ற வேணி மற்றும் பரணி (இந்தியா), தனுஷன் (இந்தியா), சபீனா (லண்டன்), சயன் (லண்டன்), சவீரன் (லண்டன்), சஜனா (லண்டன்) ஆகியோரின் பேர்த் தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2016) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல்: குடும்பத்தினர் 077 541 5373**

## மரண அறிவித்தல்கள்

### பிரம்மஸ்ரீ சண்முகக்குருக்கள் சோமசுந்தரசர்மா

(நல்லூர் ஸ்ரீ முத்து விநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தா)



யாழ்ப்பாணம் வைமன்வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிராமண வீதி, தும்பளை மேற்கு, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ சண்முகக்குருக்கள் சோமசுந்தரசர்மா கடந்த (11.07.2016) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகக்குருக்கள்-சாரதாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஹேமமாலினி, விஜயமாலினி, குகதாசசர்மா (ராஜன்-ஆசிரியர், யா/அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும் கிருபாகரசர்மா (கனடா), சுவாமிநாதன் (இந்தியா), சௌந்தரி (கிரிஜா), ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசாந்தன், ஆரணி, லதாங்கி, சுபஹரி, நித்திலபிரணவன் ஆகியோரின் தாத்தாவும் இராஜலஷ்மி (இங்கிலாந்து), சண்முகராஜக்குருக்கள்(கொழும்பு) காலஞ்சென்றவர்களான சண்முகரட்ணசர்மா, சுந்தரராஜக்குருக்கள்,சுவாமிரெத்தினசர்மா, சாம்பசிவசர்மா, மீனாம்பிகை, கமலாம்பிகை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் நாளை (14.07.2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிராமணத்தெரு, தும்பளை மேற்கு, பருத்தித்துறை.**

தகவல்: **குகதாசசர்மா (ராஜன்-மகன்)**

### செல்வரத்தினம் பிரதாப் (சங்கர்)



வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் பிரதாப் (சங்கர்) 11.07.2016 திங்கட் கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் (ஆஸ்திரேலியாவில் சிட்னியை வசிப்பிடமாகக் (68 Portico PDE Toongabbie, Nsw 2146. ABA 006)) கொண்ட நாகரத்தினம் செல்வரத்தினம்(செல்வம்) - செஞ்சிலாம்பிகை (அம்பிகா) தம்பதிகளின் ஏகபுத்திரனும், செல்வி கிரிசாந்தினி, பிரசாந்தி (உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - H.N.D.A 2012), நளாயினி (யா/வேம்படி மகளிர் கல்லூரி O/L 2016) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2016) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஐயனார் கோயில்வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

(J/2855) (11,17,18)

தகவல்: **குடும்பத்தினர்.**

## 15 அத்தியாவசிய

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்படும். இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்தது. இது தொடர்பில் அது வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நேற்றுப்பிற்பகல் கூடியது.

சதொச நிறுவனத்தினூடாக நுகர்வோருக்கான அத்தியவசியப் பொருள்களை வழங்குதல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

ஒரு பண்டம் உற்பத்தி செய்யப்பட்டது முதல் நுகர்வோரைச் சென்றடையும் வரை பெருமளவிலான இடைத் தரகர்கள் காணப்படுகின்றனர். இதுவே பண்டங்களின் விலைகள் உயர்வடைவதற்குக் காரணமாய் அமைந்துள்ளது. விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாத்து இதற்கு முறையான ஒரு வேலைத்திட்டத்தைப் பின்பற்றுதல் தொடர்பாக ஆராயப்பட்டது.

வரி அதிகரிப்பினைக் காரணம் காட்டி வரி அறவிடப்படாத பொருள்களையும் அதிக விலைக்கு விற்பனை செய்யும் முயற்சிகள் தொடர்பில் கண்டறிவதற்கு பொலிஸ், நுகர்வோர் அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்து மாறும் கூறப்பட்டது - என்றுள்ளது. (வ-4)

# தொழிற் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் யாழ். மாவட்டத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுடனான தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

காய்ச்சி இணைப்பவர், குழாய் பொருத்துநர், அலுமினியப் பொருத்துநர், மரவேலைதொழில்நுட்பவியலாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகிய கற்கை நெறிகளே ஆரம்பிக்கப் படவுள்ளன. காரைநகர், சுன்னாகம், ஆனைக்கோட்டை, கைதடி ஆகிய பயிற்சி நிலையங்களில் இந்தக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கற்கை நெறிகளை கற்க விரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி வீரசிங்கம் முதலாம் மாடியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் அல்லது வலந்தலைச் சந்தி காரைநகரில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அலுவலக நேரத்தில் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. (ற-ரி)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சின்னையா



தோற்றம் 02.08.1957 மறைவு 12.07.2016

மூளாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மணல்தறை லேன், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சின்னையா நேற்று (12.07.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிவபாக்கியம்,துரைராசா (மிருதங்க ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி) நந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவமலரின் (அம்மன்) அன்பு மாமியாரும் துசிதரன் (புகையிரதத் திணைக்களம்), லதுசன்(கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

28/16, மணல்தறைலேன்,
கந்தர்மடம்.


தகவல்:
குடும்பத்தினர்.

077 719 3673

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற அலுவலக உத்தியோகத்தர்- கிளிநொச்சி மகாவித்தியாலயம்,பரந்தன் மகாவித்தியாலயம்)



பிறப்பு 1949.06.19 இறப்பு 2016.07.12

யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும், இல.75, உதயநகர் மேற்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சிவலிங்கம் நேற்று (12.07.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அருளம்பலம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சின்னத்துரை - இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தவமலரின் பாசமிகு கணவரும், கெங்கஜியின் அருமைத் தந்தையும், தேவதேவாவின் அன்பு மாமனாரும், அபிஷன், அபிநிதன், அபிருத்ரா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, குணபாலசிங்கம், காலஞ்சென்ற இரத்தினராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,இந்துமதி, துரைராஜலிங்கம், தர்மலிங்கம், செல்வநாயகம், கமலாதேவி, அற்புதம், சற்குணநாதன், கந்தசாமி, புஸ்பவதி, சிவலோகநாதன், சத்தியபாமா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2016) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனந்தநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.75, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

(K/101)
(11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

077 114 8153, 077 646 3882

## மரண அறிவித்தல்

### கந்தசாமி நடராசா

(முன்னாள் உரிமையாளர் - ராஜன் புத்தகசாலை
யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.52, பிள்ளையார்வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நடராசா கடந்த (08.07.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - தையல்முத்து தம்பதிகளின் (புங்குடுதீவு -10) அன்பு மருமகனும், இரத்தினாம்பிகையின் அன்புக் கணவரும், பூரணம், காலஞ்சென்ற ராசு மற்றும் தயாபரன் (லண்டன்), கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆனந்தராஜன் (பிரான்ஸ்), அமிர்தராணி (பிரான்ஸ்), அமிர்தாம்பிகை (இலங்கை), அமிர்தப்பிரியா(பிரான்ஸ்), யோகானந்தலக்சுமி (பிரான்ஸ்), யோகநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிவதனி (பிரான்ஸ்), வசந்தன் (பிரான்ஸ்), மோகனதாஸ் (இலங்கை), குணசீலன் (பிரான்ஸ்), நாகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சயந்தன், ஹருனிகா, ஹரிஷ், ரோஸ்னி, கரினிகா, அனோயா, அபிநயா, அஞ்யை, சந்தோஷ், வினுஷன், ஜிலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2016) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(J/2839)

தொடர்பு: 077 087 8304



அன்னை மடியில் 31.05.1945 அரனாரின் அடியில் 08.07.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமன்னிப்புக் கொடுத்து 14,000 பேர் படைகளில் இருந்து நீக்கப்பட்டனர்

கொழும்பு, ஜூலை 13
பொதுமன்னிப்புக் காலத்தின்போது முப் படைகளிலிருந்து தப்பிச் சென்ற சுமார் 14 ஆயிரம் படையினர் உத்தியோகபூர்வ மாக சேவையிலிருந்து நீங்கப்பட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சின் தக வல்கள் தெரி வித்தன.

சேவையைக் கைவிட்டு தப்பிச் சென்ற முப்படை யினர் மீண்டும் சேவையில் இணைந்து கொள்ள வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலம் இன்றுடன் முடிவடைந்தது.

கடந்த திங்கட்கிழமை வரையில் 12 ஆயி ரத்து 347 இராணுவத்தினரும், 544 விமானப்படையினரும், 756 கடற்படை யினரும் சட்டரீதியாக சேவையிலிருந்து விலகியுள்ளனர் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விடுமுறையின்றி கட மைக்கு சமுகமளிக்காத இராணுவத்தினர், அவர்கள் பணியாற்றிய இராணுவ படைப் பிரிவுக்கும், விமானப்படையினர் விமா னப்படை தலைமையகத்துக்கும், கடற் படையினர் வெலிசறை கடற்படை முகா முக்கும் சேவை அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் இரு நகல் பிரதிகள் சகிதம் வரவேண்டும் என்றும் அறிவுறுத் தப்பட்டது.

இதேவளை- பொது மன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி சட்டரீதியாக சேவையிலிருந்து விலகத் தவறும் படையினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என் றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## அதிபர் சேவை தரம் IIIக்கு உள்ளீர்ப்பதற்குப் பரீட்சை

கொழும்பு, ஜூலை 13
இலங்கை அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்த அதிபர்களை இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III க்கு உள்ளீர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட் டிப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடை பெறவுள்ளது.

சேவை அனுபவம், தகைமை அடிப்படை யிலான பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு இடம் பெறவுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இல் நிலவும் பொது மற்றும் விசேட சேவை பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நேற்று முன்தினம் 10 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது.

இலங்கை கல்வி நிர்வாக தரம் III இல் நிலவுகின்ற 852 வெற்றிடங்களை நிரப்பு வதற்கு தகைமையான உத்தியோகதர் களிடமிருந்து மூன்று முறைகளில் ஆட்சேர்ப்பு விண் ணப்பங்களை கல்வியமைச்சு கோரியிருந்தது.

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை, திறந்த பரீட்சை மற்றும் சேவை அனுபவ, தகைமை அடிப் படையிலான பரீட் சைகள் மூலம் ஆட்சேர்ப்பு இடம் பெறவுள்ளது.

திறந்த போட்டிப் பரீட்சை கடந்த மாதம் முடிந்தது. மட்டுப்படுத்தப் பட்ட பரீட்சை கடந்த வாரம் இடம் பெற்றது. சேவை மூப்புக்கான பரீட் சையே எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ற-4)

## பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

இளங் கலைஞர் மன்றத்தில் எதிர் வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற விருந்த ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என மன்றச் செயலாளர் தெரிவித்தார். (ற-ரி)

**கண்ணீர் அஞ்சலி**

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் தாபனக்கிளையில்
பொது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்
திருமதி மேரி ஜெசில்டா பெனடிக்றன்
அவர்களின் அன்பு மாமனார்
**அருளப்பு மரியானந்தம் அல்லேலூயா**
அவர்களின் இழப்பால் துயருறும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், தென்மராட்சி.
(சி.24195) (13.18)

**2 ஆம் ஆண்டு நினைவு**



மலர்வு 16 . 05 . 1937
உதிர்வு 06 . 07 . 2014
**சிதம்பரம் கந்தசாமி**
(ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்)
அன்போடு எங்களை வளர்த்த
தெய்வமே ஐயா
பராசக்தி வீதி,
பழை, தெல்லிப்பழை.
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

**மோட்சதீப கிரியை அழைப்பு**



நிகழும் துர்முகி
வருடம்
ஆனித்திங்கள்
14ஆம் நாள்
(28.06.2016)
அச்சுவினி
நட்சத்திரத்தில்
சிவபதமடைந்த
எமது குடும்பத்
தலைவர்
**அமரர் நடராசஐயா சின்னையா**
அவர்களின் ஆத்மசாந்தி (சிவபூஜை) வழிபாடு இன்று 29ஆம்
நாள் (13.07.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில்
அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும்
வருகை தந்து அவரின் சிவபூசை வழிபாட்டிலும் தொடர்ந்து
நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
கச்சார்வெளி, பளை.
குடும்பத்தினர்.

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**



மண்ணில் மலர்வு
11.02.1940
விண்ணில் ஒளிர்வு
28.06.2012
**அமரர் செல்லப்பா திருஞானயோகநாதன்**
நான்காண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை எம் இதயம் அன்பும் பாசமும்
நிறைந்த பொக்கிஷம் எங்கள் தந்தை
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
இராசவீதி, தோப்பு,
அச்சுவேலி.
(ஜே.2741) (13.18)
உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

**விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம் 16 . 08 . 1935
மறைவு 13 . 06 . 2016
**சந்தியா பெனடிற்**
பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அப்பா!
செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



அன்னையின் மடியில் 29 . 06 . 1958
ஆண்டவன் அடியில் 13 . 06 . 2016
**அமரர் இராசரத்தினம் ஞானபண்டிதன்**
அன்பின் உருவமாய் அறிவின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் பண்பில் பரந்தாமனாய்
ஞானத்தின் ஒளியாய் ஞாலத்தில் உதித்த பண்டிதரே!
இயற்கையின் நியதியால்
இறைபதம் எய்திய எங்கள் குலவிளக்கே!
மாண்டார் வருவதில்லை மாநிலத்தே
மறுமுறை காண்பதுவும் இயலாத நிலையுமன்றோ!
கண்கலங்கித் தவிக்கின்றோம் காலனவனின் சதியினால்
நீண்டு வரும் காலமாற்றங்கள் வந்தாலும் எப்போதும்
நீங்காது இருக்குமே உங்களின் நினைவுகள்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஞான வைரவரை வேண்டுகின்றோம்
கடந்த 13.06.2016 இறையடியெய்திய எங்கள் குலவிளக்கின் இறுதிக்கிரியைகளில் கனடாவில் கலந்து கொண்டு உதவி புரிந்தவர்களுக்கும் எங்கள் இல்லத்தில் வந்து துக்கம் பகிர்ந்துகொண்டோருக்கும் ஆறுதல் கூறியோர்க்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் பகிர்ந்தோர்க்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் இன்று (13.07.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன் புடன் அழைக்கின்றோம்.
இராசவீதி, கிறேசரடி ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
077 103 6413

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் கடவைக் காப்பாளர்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது

## ஜனாதிபதியின் செயலாளரின் உறுதிமொழியை அடுத்து




வவுனியா, ஜூலை 13
வவுனியா மாவட்ட ரயில் கடவைக் காப்பாளர்களின் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று மதியத்துடன் முடிவுக்கு வந்தது. இன்று அவர்கள் பணிக்குத் திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

நிரந்தர நியமனம், சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று தெரிவித்து வவுனியா மாவட்ட ரயில் கடவைக் காப்பாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். நேற்று முற்பகல் அவர்கள் வவுனியா ரயில் நிலையத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதியின் செயலாளர் சுமந்தகாரிய பெரும கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குக் கால அவகாசம் கோரினார். இதனால் ரயில் கடவைக் காப்பாளர்கள் தற்காலிகமாக உணவு தவிர்ப்புப் போராட்டை நிறுத்தினர். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குளிர்பானம் கொடுத்து போராட்டத்தை முடித்து வைத்தார்.

"3 ஆண்டுகளாக எமது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடுகின்றோம். இன்னமும் அவை நிறைவேற்றப்படவில்லை. இன்று (நேற்று) ஜனாதிபதியின் செயலாளருடன் தொடர்பு கொண்டோம். ஒரு வாரத்துக்குள் சாதகமான முடிவைப் பெற்றுத் தருகின்றேன் என்றார். தற்காலிகமாகப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளோம். நிரந்தர நியமனம், சம்பள உயர்வு என்பவற்றில் சாதகமான முடிவு கிடைக்காவிட்டால் போராட்டம் தொடரும்" - என்று வட மாகாண ரயில் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் ஜே. றோகாண்ராஸ் குமார் தெரிவித்தார். (ற-4,402)

## போரால் அழிந்த வாகனங்களுக்கு இழப்பீடு பெறுவது குறித்துக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
போரால் அழிவடைந்த வாகனங்களுக்குரிய காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அரசுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள அனைவரும் இன்று புதன்கிழமை நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்துக்கு வரவேண்டும். இவ்வாறு யாழ். முகாமையாளர் சம்மேளன இணைப்பாளர் வி.நிரஞ்சன் தெரிவித்தார்.

போரின் இறுதியில் கைவிடப்பட்ட வாகனங்களில் பெரும்பாலானவை அழிந்தன. ஒரு தொகுதி வாகனங்களே மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டன. போரால் அழிந்த வாகனங்களுக்குரிய இழப்பீடுகள் காப்புறுதி நிறுவனங்களால் வழங்கப்படவில்லை. இது குறித்துக் கலந்துரையாடவுள்ளோம். அதன் பின்னர் காப்புறுதிப் பணத்தைப் பெற்றுக் கொடுப்பது குறித்து அரசுடன் பேசவுள்ளோம் - என்று அவர் தெரிவித்தார்.

கலந்துரையாடல் பி.ப. 4 மணிக்கு நடைபெறும். எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்ள முடியும். மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 021 222 7012 அல்லது 0773043206 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5,106)

## 2 லட்சம் ரூபா பெறுமதியான முதிரைத் தீராந்திகள் சிக்கின

### வவுனியா பொலிஸாரிடம்



வவுனியா, ஜூலை 13
அனுமதிப் பத்திரம் இன்றிச் சட்டத்துக்கு மாறாகக் கடத்தப்பட்ட முதிரைப் பலகைகள், தீராந்திகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அவற்றை ஏற்றி வந்த 'கப்' ரக வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது. வாகனத்தின் சாரதி சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வவுனியா, நெளுக்குளத்தில் நடந்தது. 30 முதிரைப் பலகைகள், 48 முதிரைத் தீராந்திகள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் பெறுமதி சுமார் 2 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

### சாவு ஊர்வலத்தில் மயங்கி வீழ்ந்தவர் உயிரிழந்தார்

பளை, ஜூலை 13
சாவு ஊர்வலத்தில் கலந்து கொண்ட 34 வயது குடும்பஸ்தர் இடைவழியில் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பளையில் நடந்தது.

இவரது சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பளை செல்வபுரத்தைச் சேர்ந்த உறவினரின் சாவு வீட்டில் கலந்து கொண்ட வன்னியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (ற-9)



மதுபோதை, புகைத்தல், இலஞ்ச ஊழல் போன்றவற்றுக்கு எதிராக நேற்று வவுனியாவில் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. பேரணி கண்டி வீதி வழியாக மணிக் கூட்டுக் கோபுரத்தை அடைந்தது. மத்திய பஸ் நிலையம் முன்பாக அசிங்கமான முகத்தின் அடையாளம் சிகரெட் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (ற-4)

### இந்திய மீனவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13
இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 13 பேருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த 30 ஆம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா நேற்று உத்தரவிட்டார். (ற-56)

### ஸ்தோத்திர ஆராதனை

வவுனியா, இறம்பைக்குளம் ஈஷி சபையின் 25ஆவது ஆண்டை முன்னிட்டு ஸ்தோத்திர ஆராதனை நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமைவரை நடைபெறும்.

தினமும் 5 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை இடம்பெற உள்ள ஸ்தோத்திர ஆராதனையில் பொதுமக்களைக் கலந்து கொள்ளுமாறு பிஷப் என்.இராஜசிங்கம் தெரிவித்தார். (ற)

# தவறுகள் இடம்பெறாது தடுக்கும் வழி ஏற்பட்டால் அதுவே சிறந்தது

## கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 13
தவறு இடம்பெற்ற பின்பு மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கையை விடவும், தவறு இடம்பெறாது தடுக்கும் வழி கிட்டினால் அதுவே சிறந்தது. உங்களுக்குத் தகவல் தந்தவர்கள் பற்றிய விவரங்கள் கோரப்படாது.

இவ்வாறு கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி நீதிவான் மன்றுக்கு உட்பட்ட கிராம அலுவலர்களுக்கான கூட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது. அதில் அவர் தெரிவித்ததாவது:

சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துங்கள். உங்களுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துங்கள். பாடசாலை செல்லாத, செல்ல முடியாத சிறுவர்களின் பிரச்சினைகள் முதல் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் வரை விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கிராம அலுவலர்களுக்கும் உண்டு. உங்களுக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை உடன் உரிய இடத்துக்குக்கொண்டு செல்ல நடவடிக்கை எடுங்கள். உங்களுக்குத் தகவல் வந்த மார்க்கம் கோரப்படமாட்டாது. நீங்கள் பொறுப்பான பதவி வகிப்பவர்கள். அதனால் இதனைத் துணிந்து கூறுங்கள். அவற்றின் மூலம் மாவட்டத்தின் சிறுவர்களை ஆரோக்கியமான முறையில் வளர்த்தெடுக்கமுடியும் - என்றார். (ற-101,ரி3)

### வரணியில் தோல் நோய்கள் தொடர்பான பரிசோதனை

தென்மராட்சி, ஜூலை 13
வரணிப் பிரதேச மக்களுக்கான தோல் பரிசோதனைகள் இன்று மு.ப. 9 மணி தொடக்கம் வரணி வடக்கு சிமிழ் அம்மன் கோவில் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். போதனா வைத்தியசாலை தோல் விசேட சிகிச்சை நிபுணர் கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டு சிகிச்சை வழங்குவார் என்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்தனர். (ற-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குப் பேரவைச் செயலகத்தை முற்றுகையிட்டு மீனவர் போராட்டம்




யாழ்ப்பாணம், ஜூலை 13
வட மாகாண முதலமைச்சர் செயலகம் மற்றும் பேரவைச் செயலகத்தை முற்றுகையிட்டு நேற்று வடக்கு மாகாண மீனவர் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. வடக்குக் கடற்பரப்பில் தொடர்ந்தும் எல்லை தாண்டும் மீனவர்கள் தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறும் மத்திய , மாகாண அரசுகளை அவர்கள் கண்டித்தனர்.

ஆர்ப்பாட்டம் முற்பகல் 9 மணியளவில் ஆரம்பமானது. வடக்கின் நான்கு மீன்பிடி மாவட்டங்களில் இருந்தும் பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணம் என்ன கச்சதீவா தமிழக அரசே பதில் கூறு?, வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் என்ன ரணிலின் மாளிகைச் செலவா? பிரதமரே பதில் கூறுங்கள், தடைசெய் தடைசெய் இழுவைப் படகுகளைத் தடைசெய் , கைதுசெய் கைது செய் எல்லை தாண்டும் மீனவர்களைக் கைதுசெய், தாய்த் தமிழக மீனவர்களே தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு - என்று அவர்கள் கோசங்களை எழுப்பினர்.

வட மாகாண முதலமைச்சரே! மாகாண கடல்வரை பாதுகாப்பு வேண்டும் , இலங்கை அரசே! மீனவரின் வளத்தை விற்று அரசியல் பண்ணாதே, இந்திய மீனவர்களுக்கு வழங்கவுள்ள அனுமதியை நிறுத்து - போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் மாகண அமைச்சர் டெனீஸ்வரனும் , உறுப்பினர்ரவிகரனும்உரையாடினர். "நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றில் கொண்டு வந்த இழுவைமடி தொடர்பான சட்டமூலம் மாகாண சபைகளின் கருத்தறிய அனுப்பப்பட்டது. இரு மாகாண சபைகள் மட்டும் தமது கருத்தையும் உள்வாங்குமாறு அனுப்பியுள்ளன. ஏனைய ஏழு மாகாண சபைகளும் அதனை அவ்வாறே ஏற்றுக் கொண்டுள்ளன. வடக்கு மாகாண சபை உள்ளிட்ட இரு சபைகளாலேயே அந்தச் சட்டமூலம் காலதாமதம் அடைகின்றது" - என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். வட மாகாணசபை உறுப்பினர்களும் தாங்களாக முன்வந்து இது தொடர்பில் கருத்துரைக்க வேண்டும் என்று சத்தமிட்டனர்.

மாகாண சபை உறுப்பினர்களும், அமைச்சர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் ஆர்ப்பாட்டம் நடத்தியோருடன் உரையாடினர். பேரவைச் செயலகத்தால் அனுப்பப்பட்ட 4 பரிந்துரைகள் அடங்கிய கடிதம் தொடர்பில் மீனவர்கள் கேள்வியெழுப்பினர். அதைப் பார்வைக்காகப் பெற்ற உறுப்பினர் சர்வேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா உள்ளிட்டோர் அவ்வாறான ஒரு கருத்து, அமர்வில் முன்வைக்கப்படவில்லை என்று கூறினர். கடிதத்தில் ஒப்பமிட்டு அனுப்பியவர் தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினர்.

மீனவர்களுடன் மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் உரையாடினர். மீனவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய வட மாகாண முதலமைச்சருக்கான ஒரு மனுவை வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிடம் கையளித்தனர். ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

சுமார் ஒரு மணிநேரப் போராட்டத்தின் பின்னர் வடமாகாண சபையின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கலைந்துசென்று தமது கோரிக்கை தொடர்பான மனு ஒன்றை வட மாகாண ஆளுநரிடமும் கையளித்தனர்.

"இந்திய மீனவர் இலங்கைக்குள் மீன்பிடியில் ஈடுபட அனுமதிப்பது தொடர்பில் போர் புரிவதா என்று கேள்வியெழுப்பும் பிரதமர், இந்தியா மீதான பயத்தால் இந்திய மீனவர்களை எமது கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பாரானால் நாடாளுமன்றையும் முற்றுகையிட்டு போராட்டங்களை மேற்கொள்வோம்.

எம் உணர்வுகளை வடக்கு மாகாண சபை முன்பாகக் கொட்டித் தீர்த்துள்ளோம். சிறு அலை இன்று மாகாண சபையைத்தட்டியது. எமது கோரிக்கை நிரா கரிக்கப்படும் அல்லது கைவிடப்படும் பட்சத்தில் மீண்டும் ஒரு மிகப் பெரிய போராட்டத்தை மாகாண சபையின் உள்ளே மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

இந்திய மீனவர்களின் வருகையை எதிர்த்து வடமாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்குத் தெரியப்படுத்தி அழுத்தங்களைக் கொடுங்கள். வட மாகாண சபை எமது கோரிக்கையை ஏற்பார்கள் என நம்புகின்றோம் - என்று வடமாகாண மீனவர் கூட்டுறவு இணையத்தின் தலைவர் எம்.என்.ஆலம் தெரிவித்தார்.

வட மாகாண பேரவைச் செயலகத்தால் நாடாளுமன்றச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் அன்று தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றதே என்று அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானத்திடம் கேட்டபோது அவர் அமர்வின் கன்சாட்டை ஆதாரமாகக் காண்பித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவிடம் கேட்டபோது "கன்சாட்டைப் பார்த்தேன், குறித்த விடயம் தொடர்பில் பேசப்பட்ட விடயம் மாறுபட்ட தன்மையில் உள்ளது" என்றார்.


(ற-101, 106)

## யானைகளின் சரணாலயம் போன்று ஒட்டுசுட்டான் வீதி

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 13
மாங்குளம் - ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் ஒட்டுசுட்டான் நகருக்கு அண்மித்து வீதியோரங்களில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. அந்தப் பகுதி யானைகளின் சர ணாலயம் போன்று காட்சியளிக்கின்றது என்று பொதுமக் கள் தெரிவித்தனர்.

12க்கும் மேற்பட்ட யானைகள் குட்டிகளுடன் கூட்டம் கூட்டமாக வீதியில் நிற்கின்றன என்றும் அதனால் அச்சத்துடன் பயணிக்க வேண்டியுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.



இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரினர். அதேவேளை, வெளியிடங்களில் இருந்து வருவோர் யானைகளை ஒளிப்படம் எடுப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர் என்று தெரிவிக்கபட்டது. சிலர் யானைகளுக்கு அருகில் சென்று செல்பி எடுக்கவும் முயல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-21,102)

## விபத்தை ஏற்படுத்தித் தப்பிய குற்றச்சாட்டில் சாரதி கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13
விபத்தை ஏற்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரின் சாரதி கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சியில் பணியாற்றும் வைத்தியர் திருகோணமலை சென்று திரும்பியுள்ளார். அதன் போதே விபத்து ஏற்பட்டது.

வைத்தியரின் வாகனத்தால் விபத்துக்குள்ளானவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினார். அவரை வைத்தியசாலையில் சேர்க்காது வைத்தியரின் வாகனம் தப்பிச் சென்றது என்றும் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளானவர் உயிரிழந்துள்ள நிலையில் திருகோணமலைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர். விபத்து நடந்த வீதிக்கு அருகில் ஒரு விற்பனை நிலைய பாதுகாப்பு கமராவின் பதிவுகளைக் கொண்டு வைத்தியரின் வாகனம் இனங்காணப்பட்டது.

வைத்தியரின் சாரதி கைது செய்யப்பட்டார். வைத்தியரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தான் உறக்கத்தில் இருந்தமையால் விபத்து ஏற்பட்டது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று வைத்தியர் விசாரணையில் தெரிவித்தார் என்று பொலிஸார் கூறினர்.

வைத்தியரின் வாகனத்தில் திருத்த வேலைகள் நடந்துள்ளன என்றும் அது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-101)

## வெடிக்காத கிளைமோர் மணற்காட்டில் மீட்பு



கரணவாய், ஜூலை 13
பருத்தித்துறை மணற்காட்டுப் பகுதியில் சுமார் 25 கிலோ எடையுடைய கிளைமோர்க் குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை பிரதேச சபைக் குட்டபட்ட இந்தப் பகுதியில் பொழுது போக்கு மையம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான கட்டடத்துக்காக அத்திபாரம் வெட்டும்போதே குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அது மீட்கப்பட்டது.

(ற-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் ஒழிப்புக்கு அடுத்த ஆண்டு புதிய திட்டம்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம் அடுத்த வருடத்தில் புதிய வடிவில் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

புத்தளம் ஆனந்த தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் முற்பகல் 'போதைப்பொருளில் இருந்து விடுதலைபெற்ற நாடு' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஏழாவது கட்ட நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது–

தற்போது எமது நாட்டு மக்கள் மிக ஆபத்தான முறையில் போதைப்பொருள் பாவனைக்கு பழக்கப்படுத்தப்பட்டுள்ளனர். இலங்கையின் சனத்தொகையில் 45 ஆயிரம் பேர் ஹெரோயின் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர்.

சுமார் 2 இலட்சம் பேர் கஞ்சா பயன்படுத்துகின்றனர். இலங்கையில் சிகரெட் பயன்படுத்துபவர்களில் நூற்றுக்கு மூன்று வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சு தெரிவிக் கின்றது. 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி இந்த நாட்டில் புகைபிடிப்போரின் எண்ணிக்கை நூற்றுக்கு 23.4 வீதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளிலிருந்து விடுதலைபெற்ற நாடு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 7 ஆவது நிகழ்ச்சித் திட்டம் புத்தளம் மாவட்டத்தை மையப்படுத்தி நடைபெற்றது. மாவட்டத்தின் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பில், போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் வழிகாட்டலில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

'போதைப்பொருளில் இருந்து விடுதலை பெற்ற நாடு' தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டம் இவ்வருட நிறைவில் 25 நிர்வாக மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்படும். சட்டவிரோதமான போதைப் பொருள்கள் தொடர்பில் தேடுதல்களை மேற்கொள்கின்ற அதிகாரிகளைக் கௌரவித்து அவர்களுக்கு உயர்ந்த விருதுகளை வழங்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டமும் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

போதைப்பொருளிலிருந்து விலகியிருத்தல் தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் எதிர்காலத்தில் மேலும் பலப்படுத்தப்படும்.

இந்தஅனைத்துநடவடிக்கைகள் தொடர்பிலும் முதலாவது முன்மாதிரி அரசியல்வாதிகளிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டும். அரச அதிகாரிகள், பொதுமக்கள் எல்லோரும் இதற்கு நேரடிப் பங்களிப்பை வழங்க வேண்டும்.– என்றார்.

புத்தளம் மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இலங்கைப் பெலிஸார், சுங்க அதிகாரிகள், சிவில் பாதுகாப்புத் திணைக்களங்கள் மற்றும் புத்தளம் மாவட்ட சுகாதாரக் கல்வி அலுவலக அதிகாரிகள் கௌரவிக்கப்பட்டு ஜனாதிபதியால் விருதுகள் வழங்கப்பட்டன. (ந–4)

## மாலபே மருத்துவ கல்லூரி குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூலை 13

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் உட்கா உடன்படிக்கை உள்ளிட்ட 6 விடயங்கள் தொடர்பில் அரச மருத்துவர் சங்கம் ஜனாதிபதியுடன் கலந்ரையாடியுள்ளது. ஜனாதிபதி மாளிகை யில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

மாலபே தனியார் மருத்துவமனையை மக்கள் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அதன் போது தெரிவித்தார்.

எட்கா உடன்படிக்கை தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டன் பின்னரே அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார் என்று மருத்துவர் சங்க இணைப்பாளர் மருத்துவர் நலிந்த கேரத் தெரிவித்தார். (ந–4)

## மாற்று வழி தெரியாததால் அரசு வரியை அதிகரிக்கிறது!

கொழும்பு, ஜூலை 13

மாற்று வழிகள் குறித்த அறிவின்மையாலேயே அரசு கடன் பெறுவதையும், வரி அதிகரிப்பையும் மேற்கொள்கிறது. இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது மக்கள் விடுதலை முன் னணி. பதுளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அந்தக் கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

வற் வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு ஏற்பட்டால் அதனை விடுத்து வேறு வழியைக் கைக்கொள்ள வேண்டும். கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டும். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு அரசு அறிந்த தீர்வு இரண்டே இரண்டுதான். ஒன்று கடன் பெறுவது. மற்றையது வரி பெறுவது.

இவை இரண்டும் மக்களுக்குச் சுமையை ஏற்படுத்துகின்றன. இவற்றை விடுத்து மாற்று வழிகளை ஏற்படுத்த வேண்டும்.– என்று அவர் தெரிவித்தார். (ந–4)

# லஞ்சம், ஏமாற்று, பித்தலாட்டங்களே இலங்கை அரசியலில் மலிந்துள்ளன

## மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 13

இலங்கை அரசியலில் எனக்கு உடன்பாடில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

ஏறாவூர் கலைமகள் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் கலைமகள் சாதனையாளர் விழா நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

இலஞ்சம், ஏமாற்று, பித்தலாட்டம், உழைப்பதற்காக அரசியலைப் பயன்படுத்துவது போன்ற நிலமைகள்தான் அரசியலில் மலிந்து காணப்படுகின்றன. இந்தப் பண்புகளைக் கொண்ட அரசியல்வாதிகள் தம்மை உத்தமர்களாகவும் காட்டிக் கொள்கின்றார்கள்.

இந்த நிலமைகளே இலங்கை அரசியலை வெறுப்படைய வைத்துள்ளன. மாணவர்களே என்னை அரசியலுக்குள் இழுத்து வந்து சேர்த்துவிட்டார்கள்.

இத்தகைய இழி அரசியல் கலாசாரங்களுக்கூடாக நல்லதைச் செய்து தூய்மைப்படுத்த வேண்டும் என்பது எனது அவா. அதனால்தான் தற்போதும் அரசியலில் ஒட்டிக் கொண்டிருக்கிறேன்.

இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் தலைவர் இரா. சம்பந்தன் முன்னின்று உழைத்துக் கொண்டிருக்கிறார். இலங்கை இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்ற நம்பிக்கை பன்னாட்டு ரீதியிலும் தேசிய மட்டத்திலும் இப்பொழுது துளிர்விட ஆரம்பித்துள்ளது. நீண்டகாலமாக புரையோடிப் போயுள்ள இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால்,எம்மைச் சூழ்ந்திருக்கின்ற மற்றைய பிரச்சினைகள் தானாக அல்லது சிறு பிரயத்தனங்களின் மூலம் தீர்க்கலாம்.– என்றார். (ந–4)



## எட்கா குறித்து வாக்கெடுப்பு நடத்துக

### – கம்மன்பில

கொழும்பு, ஜூலை 13

இந்தியாவுடன் மேற்கொள்ளப்படவுள்ள எட்கா உடன்படிக்கை தொடர்பில் அரசு பொதுசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பொருளாதார மற்றும் தொழினுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையான எட்கா வை பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்தியாவுடன் மேற்கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த உடன்படிக்கை நாட்டின் சுதந்திரத்துக்குப் பாதகமாகவே இருக்கும் என்று அவர் தெரிவித்தார். (ந–4)

# டெங்குத் தொற்றால் 40 பேர் உயிரிழப்பு

## வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில்

கொழும்பு, ஜூலை 13

வருடத்தின் இதுவரையான காலத்தில் 22 ஆயிரத்து 799 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். 40 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு சுகாதார அமைச்சு தெரிவித்தது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

> வருடத்தின் இதுவரையான காலத்தில் கொழும்பு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 369 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டனர்.

வருடத்தின் இதுவரையான காலத்தில் கொழும்பு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 369 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டனர். கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, நீர்கொழும்பு வைத்தியசாலை, தேசிய வைத்தியசாலை மற்றும் கண்டி போதனா வைத்தியசாலைகளில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 200 நோயாளர்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். அதில் 25 பேருக்கு டெங்கு காய்ச்சலுக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன என்று கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அதிகபடியாக டெங்கு நோயாளர்கள் உள்ள மாவட்டங்களாக கொழும்பு,கம்பஹா,களுத்துறை, குருநாகல்,கண்டி, மாத் தளை, காலி, மாற்றும் மாத் தறை ஆகிய மாவட்டங்கள் அடையாளங்காணப்பட்டுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ந–4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழரிடம் இருந்து முல்லை மாவட்டம் பறித்து எடுக்கப்படும் பெரும் போக்கு...!

முல்லைத்தீவு மாவட்டம், முற்றுமுழுதாக பெரும்பான்மை இனத்தவர்களின் சொந்த நில மாக்கப்பட்டு விடும் என்ற நிலைமை நாளாந்தம் உயர்ந்து வருகிறது என்று--

அங்கு வாழும் தமிழ் மக்கள் மிகுந்த அச்சம் கொள்கின்றனர்.

இப்போது ஆட்சியில் உள்ள நல்லாட்சி அரசு, தனக்கு உள்ள சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி, நினைத்ததைச் செய்யும் போக்கு உயர்ந்து வருவதாகச் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

மணலாறு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட் பட்ட பிரதேசங்களில் மூவாயிரத்துக்கும் அதிகமான பெரும்பான்மை இனக் குடும் பங்கள் -- அரசின் அனுசரணையுடன் குடியேற் றப்பட்டுள்ளன.

ஆண்டாண்டு காலமாக தமிழ் மீனவர்களின் சொந்த இடங்களாக விளங்கும், கொக்குத் தொடுவாய், நாயாறு கரையோரப் பகுதி களும், எந்த வகைக் கூச்சமும் இன்றி, பெரும் பான்மை இன மீனவர்களால் ஆக்கிரமிக் கப்பட்டு, வாடிகள் அமைக்கப்பட்டு, தமிழர் பிரதேசத்தின் வளம் அள்ளிச் செல்லப்படுகிறது.

மகாவலி வலயம் என்ற போர்வையில், முல்லைத்தீவு - கிழக்குமாகாண எல்லைப் பகுதியில், பல ஏக்கர் நிலங்களில் பெரும் பான்மை இனத்தவர்கள் குடியேற்றப்பட் டமை "பழைய கதை"!

வனப்பிரதேசங்களில் புதிது புதிதாக உயரும் விகாரைகளோ பலப்பல.

ஏ-9 வீதியில் இருந்து இராணுவ முகாம் களுக்குச் செல்லும் குறுக்கு வீதிகள் இப்போதும் மணல் வீதிகளாக இருக்கும் நிலையில், இராணுவ முகாம்களைச் சூழத் தார்ப்படுக்கை வீதிகள் அமைக்கப்பட்டு நிரந்தரமாக்கப் பட்டுள்ளன.

அதேவேளை, இராணுவ முகாம்கள் விஸ்தரிக் கப்பட்டு, பெரும்பான்மையினரது குடி யேற்றத்தை நடத்த வித்திடப்படுகிறது.

தொடர் இராணுவ வலயத்துக்குள், தமிழ் மக்கள் மிகப் பலரின் வாழ்விடங்கள் ஆக்கிர மிக்கப்பட்டுள்ளதாக ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டப்படுகிறது.

இவற்றை விடவும், தமிழர் தம் நிலப்பரப் புக்களை வெவ்வேறு வடிவங்களில் 'கபளீகரம்' செய்யும் செயற்பாடுகள் வீச்சுடன் முன்னெடுக் கப்படுகின்றன.

மேற்போந்தவைக்கு, மகுடம் கட்டும் போக் கில், முல்லைத்தீவு மாவட்டத்தில், நீர்வளம் சுரக்கும் பதினொரு குளங்களும் இராணுவத் தின் ஆக்கிரமிப்பில் உள்ளன.

அதன் பாதக விளைவு, ஏற்கனவே ஆயிரக் கணக்கான ஏக்கர் வளம் மிகுந்திருந்த விவ சாயப் பூமி கண்ணீர் விட்டு அழுகிறது. ஒட்டு மொத்தத்தில் முல்லைத்தீவு வாழ் தமிழ் விவசாயிகள், ஏதும் செய்ய இயலாமல் அந் தரிக்கின்றார்கள்; பெரும் பாவம்!

மொத்தத்தில்,

புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்தும் நிலை நீண்டு வருவது போன்றும்--

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் ஒளித்துப் பிடித்து விளையாடுவது போன்றும்--

முல்லை. மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரங்களும் நல்லாட்சி அரசினால் பிய்த்து எறியப்படுகின்றன.





எம்.ஐ.முபாறக்

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடரின் பின்னர், இலங்கையின் போர்க்குற்ற விசாரணை தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் செய்ய வேண்டிய கட்டாயம் இப்போது இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த விசாரணையை நடத்தப் போகும் உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்குவது தொடர்பான அரசின் நிலைப்பாடும், சர்வதேசத்தின் நிலைப்பாடும் ஒன்றோடொன்று முரண்பட்டு நிற்பதால், இலங்கை அரசு, இப்போது பெரும் தலையிடியை எதிர்கொள்ளத்தொடங்கியுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

> **2009 இல் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து எழுந்த போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உரிய பதிலை வழங்கும் வகையில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தம் சர்வதேசத்தாலும் தமிழர் தரப்பாலும் முன்வைக்கப்பட்டன.**

**நிலைப்பாட்டு மாற்றங்களால் உருவாகும் சிக்கல் நிலை**

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடரின் பின்னர், இலங்கை அரசுக்குள்ளும் இது தொடர்பில் வேறுபட்ட நிலைப்பாடுகள் தோன்றியுள்ள்தால், நிலைமை மேலும் சிக்கலாகும் என்றும், விசாரணை தாமதமாகக்கூடும் என்றும் கொள்ளலாம்.

2009 இல் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து எழுந்த போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உரிய பதிலை வழங்கும் வகையில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தம் சர்வதேசத்தாலும் தமிழர் தரப்பாலும் முன்வைக்கப்பட்டன. அப்போதைய ஜனாதிபதி மகிந்த அந்தக் கோரிக்கையை நிராகரித்து உள்ளக விசாரணையே இடம்பெறுமென அறிவித்தார். இருந்தும், அது தொடர்பில் அவர் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஆட்சியாளர்கள் சர்வதேசத்துடன் ஒத்துப்போகும் நிலைப்பாட்டை எடுத்ததால், சர்வதேசம் அவர்களுக்கு போர்க் குற்ற விசாரணை தொடர்பில் சில சலுகைகளை வழங்கத் தொடங்கியது. அந்த வகையில், சர்வதேசவிசாரணையைத் தவிர்த்து உள்ளக விசாரணையை நடத்தும் அரசின் விருப் பத்துக்கு சர்வதேசம் இடங்கொடுத்தது. இருந்தும், அந்த உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கப்படவேண்டும் என்றொரு நிபந்தனையை விதித்தது. ஆனால், இலங்கை அரசோ சர்வதேச கலப்பற்ற- முற்றுமுழுதானசுதேசியத்தன்மை கொண்ட உள்ளகப் பொறிமுறையையே விரும்புகின்றது.

ஆனால், சர்வதேசமோ, சர்வதேச நீதிபதிகளின் கலப்பு முறைமை என்பதில் உறுதியாகவே நிற்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளது.

இலங்கை அரசின் இந்த நிலைப்பாடானது, விசாரணையை மேலும் தாமதப்படுத்தும் ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்கலாம். சர்வதேசத்தின் விசாரணையைப் புறக்கணித்து நடத்தப்படும் விசாரணை நம்பகத் தன்மை கொண்டதாக இருக்காது என்பதால், இந்த விவகாரத்தில் சர்வதேசம் உறுதியாக இருக்கும் என்றே நம்பப்படுகின்றது.

**அரசுக்குள் மாறுபட்ட நிலைப்பாடுகள்**

அரசு இந்த விவகாரத்தில் என்ன தான் உறுதியாக இருந்தாலும், ஜெனிவா மாநாட்டின் பின்னர் இது தொடர்பில் அரசுக்குள் மாறுபட்ட மூன்று நிலைப்பாடுகள் தோன்றியுள்ளதைக் காணலாம். உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் இருந்து வருவதை அவதானிக்கலாம். ஜெனிவா மாநாட்டின் பின்பும் அவர் இதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றார் என்பதை அவர் நிகழ்த்தி வருகின்ற உரைகளில் இருந்து அறிய முடிகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் தான் இருக்கின்றார். ஆனால், ஜெனிவா மாநாட்டின் பின்பும், அவர் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றாரா என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது. அவர் தொடர்ச்சியாகக் காத்துவரும் மௌனமே இந்தச் சந்தேகத்துக்குக் காரணமாகும்.

மூன்றாவதாக, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் நிலைப்பாடு, சர்வதேச நிலைப்பாட்டுடன் ஒத்துப்போவதைக் காணலாம். மங்களவின் நிலைப்பாடு தான் சரியான நிலைப்பாடாகவும், விசாரணையை நம்பகத்தன்மை மிக்கதாக மாற்றக் கூடியதான நகர்வாகவும் பார்க்கப்படுகின்றது. ஜெனிவா மாநாட்டுக்கு முன்னர் இந்த விடயத்தில் மௌனம் காத்து வந்த மங்கள, அந்த மாநாட்டில் வைத்துத் தமது மௌனத்தைக் கலைத்தார். உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கும் கோரிக்கையை நிராகரிக்க முடியாது என்று அந்த மாநாட்டில் அவர் கூறினார். இதன் மூலம் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்குவதைத் தாம் ஆதரிக்கின்றார் என்பதை அவர் இராஜதந்திர ரீதியில் கூறியுள்ளார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். மங்களவின் இந்த நிலைப்பாடு சரியான நிலைப்பாடாக இருக்கின்றபோதிலும், அரசுக்குள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்குச் செல்லாது குடும்பமாக இருந்த சிறுமி

## பாடசாலையில் இணைப்பதற்கு தேடிச் சென்ற அதிகாரிகள் அதிர்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 13
பாடசாலைக்குச் சமுகமளிக்காத மாணவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் 15 வயது மாணவி ஒருவர் குடும்பமாக வாழ்வதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகளுக்குச் செல்லாத மாணவர்களை இனங்கண்டு மீண்டும் அவர்களைப் பாடசாலைகளில் இணைக்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி நீதிவான் பணிப்புக்கு அமைய செயற்படுத்தப்படுகின்றது.

சில நாள்களாக முன்னர் மலையாளபுரம், பாரதிபுரம், பொன்நகர் கிராமங்களில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நேற்றும் அவ்வாறு சோதனை நடத்தப்பட்டது. 14 சிறுவர்கள் இனங்காணப்பட்டனர். அவர்களை பாடசாலையில் இணைக்கும் செயற்பாடுகள் முன்னகர்த்தப்பட்டன.

பொன்நகர்ப் பகுதியில் 15 வயதுச் சிறுமி பாடசாலை செல்லாதுள்ளார் என்றுதகவல்கிடைத்தது. அதிகாரிகள் அங்கு சென்றபோது அந்தச் சிறுமி 18 வயது இளைஞருடன் குடும்பமாக வாழ்வதைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். குறித்த சிறுமி சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4,10)

# குறை நிவர்த்தி சேவை நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடக்கு மாகாண சபையும், யாழ். மாவட்டச் செயலகமும் இணைந்து குறை நிவர்த்தி நடமாடும் சேவை நடத்தவுள்ளன. நாளை வியாழக்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இது நடைபெறும்.

இந்தச் சேவையில் தேசிய அடையாள அட்டை, பிறப்பு இறப்பு, திருமணப் பதிவாளர் சேவைகளுடன் இலங்கை மின்சாரசபை, நில அளவைத் திணைக்களம், சமுர்த்தி வேலைகள், நீர்ப்பாசனத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொழில் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், இடர் முகாமைத்துவம், புனர்வாழ்வு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு, தொல்பொருள் கரையோரப் பாதுகாப்பு மீன்பிடி உதவிப் பணிப்பாளர் சேவைகள் இடம் பெறும். வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகங்கள் உட்பட சுகாதாரம், கல்வி, விவசாயம், மீன்பிடி அமைச்சுக்களின் திணைக்களங்கள் கலந்து கொள்கின்றன. பொதுமக்கள் இதில் கலந்துகொண்டுதமதுபிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-7)

# பரவிப்பாஞ்சான் கிராம மக்களின் காணி விடயத்தில் சாதக நிலை

## கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 13
பரவிப்பாஞ்சான் காணி விடுவிப்பு தொடர்பில் சாதகமான நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

பரவிப்பாஞ்சானில் இரா ணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குச் சென்றனர். அவர்கள் தமது கோரிக்கை அடங்கிய மனுவை மாவட்டச் செயலாளரிடம் கையளித்தனர். அப்போது மாவட்டச் செயலாளர் தெரிவித்ததாவது:

இடம்பெயர்ந்துள்ள பரவிப்பாஞ்சான் மக்கள் தமது சொந்தக் காணிகளை மீளப் பெற்றுக் கொள்வதற்காக பல முயற்சிகளை எடுத்து வருகின்றனர். அவர்களின் அவலங்களையும் வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களின் பிரச்சினை உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

தற்போது சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் கையளித்த மனுவையும் மேலதிகாரிகளுக்கு அனுப்புவேன். இதற்குரிய நல்ல முடிவை எதிர்பார்க்க முடியும் என்ற செய்தியை என்னால் கூற முடியும் - என்றார்.

தமக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்குள் தீர்வு வழங்கப்படாவிட்டால் மீண்டும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துவோம் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். (ற-4)

BAJAJ RE THREE WHEELER

# இன்றைய காலக்கட்டத்தில் சிறந்த முதலீடு

கையில் பணம் கொஞ்சம் கிடைத்தவுடன் அதனை வளமான ஒன்றில் முதலீடு செய்வதாகும்...
எவ்வளவுதான் முதலீடுகளில் முதலீடு செய்தாலும் பலன் இல்லை அவை எங்களுக்கு சிறந்த பெறுபேறுகளை தராவிட்டால்...
இரு தடவை யோசிக்காமல் உங்கள் கையில் உள்ள பணத்தினை
பஜாஜ் முச்சக்கரவண்டி ஒன்றிற்கு முதலீடு செய்யுங்கள்...





விலை ரூபா 638,500/= இவ்விலை முன்னறிவித்தலின்றி மாறுபடலாம். நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
0114 700 600 | info@dpmco.com | www.dpmco.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு எதிர்க்கட்சியினரை நம்பி மக்கள் ஆபத்தில் சிக்கவேண்டாம்

## சட்டத்தரணி நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

கூட்டு எதிர்க்கட்சியினர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் மகிந்த தரப்பினரின் நிழல் அமைச்சரவை விமர்சனத்துக்கு உட்படும் வகையில் அமைந்துள்ளது. இனவாதத்தை தூண்டி நாட்டைச் சீர்குலைக்க முனைவது கூட்டு எதிர்க் கட்சியின் உறுப்பினர்களான உதய கம்மன்பிலவும் விமல் வீரவன்சவுமே.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி நாமல் ராஜபக்ச.

மருதானையில் அமைந்துள்ள சி. எஸ். ஆர். சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

**பொய்ப் பரப்புரை**

கூட்டு எதிர்க்கட்சியினரின் நிழல் அமைச்சரவை கேளிக்கையான தாக்வும் விமர்சனத்துக்கு உற்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. கூட்டு எதிர்க்கட்சியின் அமைச்சர்கள் சிலர் தாம் கடந்த அரசில் ஒருபோதும் பிழைகளைச் செய்யவில்லை எனப் பல இடங்களில் பரப்புரை செய்து வருகின்றனர். இது உண்மைக்குப் புறம்பானது. கூட்டு எதிர்க்கட்சியில் அங்கத்துவம் பெற்றிருக்கின்ற உறுப்பினர்களான உதய கம்மன்பிலவும் விமல் வீரவன்சவுமே நாட்டில் இனவாதத்தை தூண்டும் விதமாக செயற்படுகின்றனர்.

**16 வழக்குகள்**

கடந்த அரசில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பான 16 வழக்குகள் எம்மிடம் இருக்கின்றன. இந்த வழக்குகளை மிக விரைவில் நாம் ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம் என்ற ரீதியில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்றோம். குறிப்பாகக் கூட்டு எதிர்க்கட்சியின் அமைச்சர்களான உதய கம்மன்பில, மகிந்தானந்த அழுத்கமகே மற்றும் இன்னும் சில அமைச்சர்களுக்கு எதிராக நாம் வழக்கு தொடர இருக்கின்றோம்.

**புலித் தொடர்பு**

மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருக்கலாம் என அமைச்சர் உதய கம்மன்பில சில நாள்களுக்கு முன்னர் கூறியிருந்தார். மத்திய வங்கி ஆளுநர் ஒருபோதும் அவ்வாறு செய்வதற்கான அவசியம் இல்லை. உதய கம்மன்பிலவின் இந்தக் கருத்து கேளிக்கையானதாக இருக்கிறது. உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பணத்தைப் பங்கிட்டுக் கொண்டு மக்களை ஏமாற்றி வீடுகளை அமைத்துத் தருவதாகக் கூறி வஞ்சகங்கள் செய்தது உதய கம்மன்விபிலவும் அவருடன் இருக்கின்ற ஏனைய அரசியல் வாதிகளும்தான் என்பதை மறுப்பதற்கு இல்லை.

**மகிந்த இருந்திருந்தால் நல்லவர்கள் சிறையில்**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தற்போதைய நிலையில், ஆட்சியில் இருந்திருந்தால் நல்ல அரசியல் தலைவர்கள் அனைவரும் சிறையில்தான் இருந்திருக்கவேண்டும். நாடு இனவாதத்தால் பிளவுபட்டு மீண்டும் ஒரு போர் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருந்திருக்கும். ஆனால், கடந்த வருடம் ஜனவரி 8ஆம் திகதி மலர்ந்த நல்லாட்சியால் மட்டும் தான் நாடு சீரான நிலையில் சென்றுக் கொண்டிருக்கின்றது. மக்கள் சரியான ஜனாதிபதியையும் பிரதமரையும் தெரிவு செய்திருக்கிறார்கள்.


கூட்டு எதிர்க்கட்சியின் செயற்பாடுகளை நம்பி மக்கள் ஆபத்துக்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். கூட்டு எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் மக்களின் முகங்களில்சேறுபூசும்செயற்பாடுகளே.

**பழிவாங்கலில்லை**

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் கைது ஒருபோதும் அரசியல் பழிவாங்கல் இல்லை. கிட்டதட்ட ஒன்றரை வருட விசாரணைக்குப் பிறகு அவர் தகுந்த காரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார். சட்டம் தன் கடமையைச் செய்கின்றது. இனிவரும் காலங்களிலும் இவ்வாறான குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் தரப்பினர் கைது செய்யப்படலாம் - என்றார். (ற-4)

# நிழல் அமைச்சரவையிடம் முக்கிய ஆதாரங்களாம்!

### நாடாளுமன்றில் கேள்வியெழுப்புவோம் என்கிறார் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்



கொழும்பு, ஜூலை 13

தேசிய பாதுகாப்பு, மத விவகாரம், அரசியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பில் நிழல் அமைச்சரவைக்கு முக்கிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அடுத்த நடாளுமன்ற அமர்வில் அவை தொடர்பில் துறைசார் அமைச்சர்களிடம் கேள்வியெழுப்புவோம். அதற்கு முன்னர் நிழல் அமைச்சரவையின் கன்னி அமர்வும் ஊடக சந்திப்பும் நடத்தப்படும்.

இவ்வாறு கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வெளிவிவகார அமைச்சருக்கு எதிரான நடவடிக்கை தொடர்பில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்கும் 28 ஆம் திகதி கண்டியில் இருந்து கொழும்பை நோக்கிய பேரணியை வெற்றிகரமாக முன்னெடுக்கவும் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முழுமை பெற்றுள்ளன. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆலோசனைகளின் படி நிழல் அமைச்சரவையின் உறுப் பினர்கள் தமது பணிகளில் தீவிரமாகச் செயற்படுகின்றனர்.

நாளொன்றுக்கு 100க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் நிழல் அமைச்சரவைக்குக் கிடைக்கின்றன. இந்த விடயங்கள் குறித்து அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆராய்கின்றோம். எந்தவிதமான பிரச்சினையும் இன்றி, கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு உரிய பணிகளைச்சிறந்த வகையில் முன்னெடுக்கின்றனர். அனுபவம் உள்ள மூத்த உறுப்பினர்கள் தேவையான வழிநடத்தல்களை வழங்குகின்றனர். எமது தேசியத் தலைவரான மகிந்த ராஜபக்ச நல்லாட்சி அரசின் அமைச்சர்களின் மோசடிகள் தொடர்பாக ஆராய்வதிலும் அவற்றை மக்களுக்கு வெளிப்படுத்துவதிலும் நிழல் அமைச்சரவைக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குகின்றார்.

வெளிவிவகார அமைச்சரின் தன்னிச்சையானதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமான செயற்பாடுகள் குறித்த கூட்டு எதிர்க்கட்சி அவதானித்துள்ளது. சர்வதேச நீதிபதிகளின் உள்ளடக்கம் குறித்து அமைச்சர் மங்கள சமரவீரவின் கருத்துக்கள் கண்டிக்கப்பட வேண்டியவையாகும். ஜனாதிபதியை மீறிச் செயற்படும் அதிகாரம் அவருக்குக் கிடையாது. இந்த விடயம் குறித்து கடினமான நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க எதிர்பார்த்துள்ளோம்.

நல்லாட்சி அரசுக்கு எதிராகவும் மாற்று அரசியல் தேவையை வலியுறுத்தியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்புப் பாதயாத்திரை திட்டமிட்டப்படி எதிர்வரும் 28ஆம் திகதி கண்டியில் இருந்து முன்னெடுக்கப்பட உள்ளது.

அடுத்த நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், நிழல் அமைச்சரவையால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் குறித்துத் துறைசார் அமைச்சர்கள் வாய்மூல பதிலளிப்புக்கான நேரம் சபாநாயகரிடம் கோரப்பட உள்ளது. பொது மக்களுக்கு நிழல் அமைச்சரவையின் செயற்பாடுகள் குறித்து தெளிவுப்படுத்தும் சந்திப்புக்கள் விரைவில் இடம் பெறவுள்ளன-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவரும் வெவ்வேறு நிலைப்பாடுகளில்; வெற்றி பெறுமா சர்வதேசத்தின் காய் நகர்த்தல்?

இது தொடர்பில் மாறுபட்ட நிலைப்பாடுகள் தோன்றுவதற் கும், அவருக்கு எதிராக மகிந்த தரப்பு நம்பிக்கை இல்லாப் பிரே ரணையைக் கொண்டு வருவதற்கு முடி வெடுப்பதற்கும் அவரது மேற்குறித்த நிலைப் பாடுதான் காரணமாக அமைந்துள்ளது.


சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கும் போராட்டத்தில் வெற்றியை அடைவதற் கான காய் நகர்த்தல்களை சர்வதேசம் மேற்கொண்டு வருவதைக் காணலாம்.

திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஷ்வால் நேற்று இலங்கைக்கு வந்துள்ளார். அவரைத் தொடர்ந்து மேலும் பல நாடுகளின் இராஜதந்தி ரிகளும் வரவுள்ளனர். இவர்கள் அனை வரினதும் ஒரேநோக்கம், உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்குவது தொடர்பில் இலங்கை அரசைவழிக்குக் கொண்டுவருவதுதான் என்பதில் சந்தேகமில்லை.

இந்த அரசு சர்வதேசத்துடன் ஒத்துப் போகின்றது என்பதற்காக, சர்வதேசம் இலங்கை அரசுக்கு அதிகம் சலுகை காட்டுகின்றது என்றும், அந்தச் சலுகை கள் தமிழர்களின் நலன்களை பாதிக் கும் வகையில் அமைந்துள்ளன என் றும், தமிழர் தரப்பில் குற்றச்சாட்டுக் கள் முன்வைக்கப்படுகின்றன. இத னால், சர்வதேச நீதிபதிகள் விடயத்தி லாவது சர்வதேசம் இலங்கை அரசுக் குச் சலுகை காட்டக்கூடாது என்பது தமிழர்களின் கோரிக்கையாக இருக் கின்றது.

ஜெனிவா மாநாட்டின் பின்னரான சர்வதேசத்தின் காய் நகர்த்தலைப் பார்க்கும்போது, தமிழர்களின் இந்தக் கோரிக்கை நிறைவேறக்கூடும் என்றே தோன்றுகிறது. இருந்தும், சர்வதேசத் தின் இந்தக் காய் நகர்த் தல் வெற்றி பெறுமா? இல்லையா? என்ப தைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டி யுள்ளது.





> இலங்கை அரசை ஒருமித்த நிலைப்பாட் டுக்கு– சர்வதேசத்தின் நிலைப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்காக தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வால் நேற்று இலங்கைக்கு வந்துள்ளார்.

**குழப்பநிலையால் விசாரணை தாமதப்படலாம்**

இந்தக் குழப்ப நிலைமை உள்ளக விசார ணையை மேலும் தாமதப்படுத்திவிடும் என்று அஞ்சப்படுகின்றது. இருந்தும், இந்த விவகாரம் தொடர்பில் இலங்கை அரசை ஒருமித்த நிலைப் பாட்டுக்கு, சர்வதேசத்தி ன் நிலைப்பாட்டுக் குக் கொண்டு வருவதற்காக தெற்கு மற்றும் மத்

## முள்ளியவளை தபால் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் எப்போது?

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளை தபால்நிலையம் தொடர்ந்தும் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டு 1832 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஓர் உப தபால் நிலையமாக இயங்கி இந்த நிலையம், முள்ளியவளையில் பல இடங்களில் இயங்கியபோதும் இன்றுவரை வாடகை வீட்டி லேயே தனது அலுவலகத்தை நடத்தி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரிவிலேதான் முள்ளியவளை கிராமம் உள்ளது. இங்கே பத்து வட்டாரங்களும், பல சிறிய கிராமங்களான வற்றாப் பளை, கோப்பாபிலவு, கெண்டமடு, கணுக்கேணி, தண்ணீரூற்று, ஊற்றங்கரை மாமூலை, நீலகண்டபுலம், குமாரபுரம், நீராவிப்பிட்டி, கிஜீராபுரம், களிக்காடு உட்பட ஒன்பது கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள குமுழமுனை என்ற கிராமமும், முள்ளியளை தபால்நிலையத்துக்குக் கீழேயே தபால் சேவைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் தபால் நிலையம், உப தபால் நிலையமாக இருந்து, கடந்த 1980 ஆம் ஆண்டு தபால் நிலையமாக தரம் உயர்த்தப்பட்டது. அதன் பின் நிரந்தரக் கட்டடம் ஒன்றும், தபால் அதிபருக்கான தங்குமிடமும் தேவை என்ற கோரிக்கையயடுத்து, தபால் திணைக்களத்தால் முள்ளிவளை பிரதேச சபையின் விளையாட்டு மைதானம், பொது நூலகம், காட்டிலாகா அலுவலகம் ஆகியவற்றின் அருகில் இரண்டு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, நில அளவைச் செயற்பாடுகளும் முடிவுற்று, 1983 ஆம் ஆண்டு அப் போதைய நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.செல்லத்தம்புவால் கட்டடம் அமை க்க வென ஒரு தொகைப்பணமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. காலப்போக்கில் குறிப் பிட்ட விளையாட்டு மைதானம் உட்பட அதனை அண்டிய சகல இடங்களும் படிப் படியாக மாவீரர் துயிலும் இல்லமாக மாற்றப்பட்டன. அதனால் தபால் நிலையம் அமைக்க முடியாததொரு இக்கட்டான நிலை ஏற்பட்டது. இன்று அதே மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது. ஆதலால் குறிப்பிட்ட காணியை மீட்டு, முள்ளியவளையில் நிரந்தரமாகத் தபால் நிலையம் அமைக்கப்பட வேண்டும். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், வடமாகாண சபையும் கவனம் செலுத்தி முள்ளியவளைக்கு நிரந்தரத் தபால் நிலையமொன்று அமைய உதவவேண்டும்.

வே.ம.இந்திரநாதன்

## பூசை வழிபாடுகளை தமிழில் மேற்கொண்டாலென்ன?

இணுவிலில் புதிதாக அமைக்கப்பெற்ற ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இடம் பெற்ற குடமுழுக்கு விழா செந்தமிழில் நடத்தப்பட்டதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது. எமது இந்து ஆலயங்களில் இடம்பெறும் நித்திய பூசை கள் திருவிழாக்களின்போதும், கிரியைகளை எமக்குப் பரிச்சயமான எமது தாய் மொழியாம் தமிழ்மொழியில் மேற்கொண்டாலென்ன என்றதொரு வினா என் மன தைக் கடந்த சில மாதங்களாக குடைந்து வந்தது.

சில மாதங்களுக்கு முன்னர் கிறிஸ்தவ தேவாலயமொன்றில் இடம்பெற்ற எனது நண்பரொருவரது மகனது திருமண நிகழ்வில் கலந்து கொண்டவேளை, அந்த நிகழ்வில் இடம்பெற்ற உரை மற்றும் பிரார்த்தனைப் பாடல்கள் அனைத்தும் தூய தமிழ்மொழியில் இடம்பெற்றவேளை, எனது மனதில் எழுந்த அந்த எண்ணத்துக்கு முன்னுதாரணம் காட்டிச் செயற்படுவதுபோன்றுள்ளது, கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மேற்குறிப்பிடப்பட்டுள்ள குடமுழுக்கு நிகழ்வு.

எனது இந்தக் கருத்து, பலர் மத்தியில் சர்ச்சையைக் கிளப்பும் என்பது நிச்சயம். ஆண்டாண்டு காலமாக இந்துக் கோயில்களில் இடம்பெறும் பூசை வழிபாடுகள் சமஷ்கிருத மொழியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருமுறைகளை வகுத்துத் தந்த எமது முன்னோர்கள், தூய தமிழ்மொழியில் பண்ணோடு அமைந்த தேவார, திருவாசகங்களை உளமுருகப் பாடி ஆண்டவன் அருள் பெற்றமை வரலாறு.

மேற்குறித்த எனது கருத்து உதயனில் வாசகர் திருமுகத்தினூடாக எம்மவர் மத்தி யில் ஒரு தெளிவை உண்டாக்குமென எதிர்பார்க்கிறேன்.

ராசா உடுவில்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 860 டொலர் பெறுமதியான நகப் பூச்சை திருடிய பெண்

வொஷிங்டன், ஜுலை.13
அமெரிக்காவின் மெக்சிக்கோ மாகாணத்தில், நியூ ஓர் லென்ஸ் நகரில் பெண் ஒருவர் 860 அமெரிக்க டொலர் பெறுமதியான நகப் பூச்சை ஒரே நாளில் திருடியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது இலங்கை ரூபாவில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பெறுமதியானதாகும்.
27 வயதான பெண் ஒருவர், மூன்று கடைகளில் தனது கைவரிசையைக் காட்டியுள்ளார். நேற்று முன்தினம் குறித்த பெண் திருட்டுக் குற்றத்துக்காகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அவர் எவ்வாறு, எப்போது திருடினார் என்பது குறித்தும், அவர் எப்படிப் பிடிப்பட்டார் என்பது குறித்தும் பொலிஸார் தகவல் தர மறுத்து விட்டனர்.
திருடப்பட்ட நகப் பூச்சுகள் ஒரு டெரலரில் இருந்து 17 டொலர் வரை பெறுமதியானவை என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

## சிறுவனைத் தாக்கியது கழுகு

சிட்னி,ஜுலை.13
ஆஸ்திரேலியாவில் பறவைகளுக்கு உணவூட்டும் நிகழ்ச்சியில் சிறுவன் ஒருவன் தாக்கப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அலிஸ் பாலைவனப் பூங்காவை 7 வயதுச்சிறுவனும், அவனது குடும்பத்தினரும் பார்வையிடச் சென்றிருந்தனர். அங்கிருந்த கழுகு திடீரெனச் சிறுவனைக் குறிவைத்துத் தாக்கியது.
கழுகு தனது, நகங்கள் மற்றும் அலகினால் சிறுவனைத் தாக்கியதில் முகத்தில் கீறல் காயங்கள் ஏற்பட்டன.
பறவைகளுக்கு இரையூட்டும் நிகழ்வு இடம்பெற்றிருந்த வேளை, சிறுவன் இடையில் எழுந்து தனது ஜக்கட்டின் தலைக்கவசத்தின் சிப்பை இழுத்து மூடியுள்ளான். இதனை அடுத்தே தாக்குதல் இடம்பெற்றது. கழுகு சடுதியாக சிறுவன் மீது தாக்குதல் நடத்தியது என நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். சம்பவம் குறித்துப் பூங்கா அதிகாரிகள் தெரிவிக்கையில், சிறுவனுக்குக் கடுமையான காயங்கள் ஏற்படவில்லை. ஆனாலும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்தனர்.
குறித்த இனக் கழுகு 2.84 மீற்றர் நீளமுடைய இறக்கையைக் கொண்டதாகும். இந்த வகைக் கழுகுகள் உணவுக்காக, முயல், கங்காரு, ஆடு என்பவற்றை வேட்டையாடும் திறன் கொண்டவை. (த-ரி-4)



ஸ்பெய்னின் பாம்பிலோனா பகுதியில் உலகப் புகழ் பெற்ற சான் பெர்மின் என்னும் காளை அடக்கும் திருவிழா கடந்த வாரம் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றது. காளைகள் வீதியில் ஓட விடப்படும். அவற்றை அடக்க விரும்புபவர்கள் அவற்றுடன் ஓடிச் செல்வார்கள். அவர்கள் பாரம்பரிய வெள்ளை உடை அணிந்திருப்பதுடன், சிவப்புக் கைக்குட்டையைக் கையில் கொண்டிருப்பர். (த-ரி4)

# ஒலிம்பிக் ஆரம்ப நிகழ்வு தாமதமாகவே ஒளிபரப்பு

*என்.பி.சி. தொலைக்காட்சி முடிவு*



பிறேசிலியா, ஜுலை.13
பிரேசிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேரடி ஒளிபரப்பு செய்யப்படமாட்டாது என்று என்.பி.சி. தொலைக்காட்சி நிறுவனம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது. சிறப்பான காட்சிப்படுத்தலை மேற்கொள்வதற்காக இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் குறித்த தொலைக்காட்சியின் நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார்.
பெரும்பாலான போட்டி நிகழ்ச்சிகள் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும் எனவும் அவர் கூறினார். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி ஒலிம்பிக் ஆரம்ப நிகழ்வு இடம் பெறவுள்ளது.
ஒலிம்பிக் நிகழ்வுகளை ஒளிபரப்புவதற்கான உரிமத்தை பல பில்லியன் டொலர்கள் செலுத்தி, என்.பி.சி. தொலைக்காட்சி நிறுவனம் பெற்றுக்கொண்டது. விளையாட்டு மைதானத்தில் இயங்குவதற்கும், சிறப்புப் பாதுகாப்புக்கும், விழாவின் படப்பிடிப்புகளுக்கும் அது தனியான செலவுகளை மேற்கொண்டுள்ளது. இந்தப் பணத்தை ஈடு செய்வதற்காகப் பல நிறுவனங்களின் விளம்பரங்களை விளம்பரப்படுத்தவுள்ளன. இதனால் ஒரு மணி நேரத் தாமதம் ஏற்பட்டுள்ளது எனக் காரணங்கள் தெரிவிக்கப்பட்டது.
ஆயினும் இந்த நடவடிக்கை உலக ரசிகர்களின் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-ரி4)

> சிறப்பான காட்சிப்படுத்தலை மேற்கொள்வதற்காக இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் குறித்த தொலைக் காட்சியின் நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார்.

## 1000 பாற் பண்ணைகளை மூடுகின்றது இங்கிலாந்து

லண்டன், ஜுலை.13
இங்கிலாந்தில் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்குள் ஆயிரம் பாற் பண்ணைகள் மூடப்படும் எனத் துறைசார் அமைப்பினர் அறிக்கை வெளியிட்டனர்.
2013 ஆம் ஆண்டில் இருந்து, 10இல் ஒரு பாற் பண்ணை மூடப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பண்ணையாளர்களுக்குப் பாலுக்கான உற்பத்திச் செலவிலும்விடக் கொள்வனவு விலை குறைவு என்பதால் இவ்வாறு மூடும் நிலை ஏற்பட்டுள்ளது.
ஒரு லீற்றர் பாலுக்கு 10 பென்ஸ் பணம் வழங்கப்பட்டு வருகின்றது. இதனை அடுத்துகடந்தவருடம்பண்ணையாளர்கள் போராட்டம் நடத்தினர். கடந்த மூன்று வருடங்களில் மாத்திரம் ஆயிரத்து 22 பண்ணைகள் மூடப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.
பாற் பண்ணைகள் மூடப்பட்டாலும் பசுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஒரு லட்சத்து 13 பசுக்கள் அதிகரித்துள்ளன எனப் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பங்களாதேஷ் பிரதமரைச் சந்தித்தார் நிஷா பிஸ்வால்

# பங்களாதேஷில் நிஷா பிஸ்வால்

## தாக்குதல் குறித்து ஆராய்வு

டாக்கா, ஜூலை.13
அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் டாக்காவுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, பங்களாதேஷின் பாதுகாப்பு குறித்து அந்த நாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் பங்களாதேஷ், இந்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தலைநகர் டாக்காவில் அண்மையில் தாக்குதல் இடம்பெற்ற பகுதியையும் நிஷா பிஸ்வால் சென்று பார்வையிட்டார். இந்தத் தாக்குதலில், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா, இந்தியா மற்றும் பங்களாதேஷை சேர்ந்த 22 பேர் கொல்லப்பட்டனர்.

சம்பவ இடத்தில் 20 நிமிடங்கள் நிஷா பிஸ்வால் நின்று அதிகாரிகளுடன் உரையாடினார். இதனால் அந்தப் பகுதி முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் ரம்ழான் தொழுகையில் 2 லட்சம் பேர் குழுமியிருந்த போது இடம்பெற்ற வெடிப்புச் சம்பவ இடத்தையும் நிஷா சென்று பார்வையிட்டார். பங்களாதேஷ் பிரதமர், வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஆகியோரையும் அவர் சந்தித்தார்.

கடந்த வாரம் அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, போராளிகளுக்கு எதிரான பங்ளாதேஷ் அரசின் நடவடிக்கைகளைப் பாராட்டியதுடன், தேவை ஏற்படின் அமெரிக்கத் திறனாய்வுக் குழுவினரை உதவிக்கு அனுப்புவார் எனவும் தெரிவித்தார். (த-ரி4)

# ஐ.எஸ்ஸை எதிர்கொள்ள மேலும் 560 அமெரிக்கப் படையினர் ஈராக்குக்கு

## விரைவில் அனுப்பப்படுவர் என்று அறிவிப்பு

பக்தாத், ஜூலை 13
ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான ஈராக்கின் போருக்கு உதவும் வகையில் அமெரிக்கா மேலும் 560 படையினரை அனுப்பவுள்ளது என அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ஆஷ் கார்ட்டர் அறிவித்தார்.

பக்தாத்துக்குத் திடீர்ப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே ஆஷ் கார்ட்டர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான நடவடிக்கையின் கவனம், நாட்டின் வடபகுதியில் உள்ள, அதன் கோட்டையான மொசூல் நகரை நோக்கித் திரும்புகையில், அவரது இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



பக்தாத் சென்றுள்ள ஆஷ் கார்ட்டர்

இரண்டு நாள்களுக்கு முன்பு அரச படைகள் ஐ.எஸ். வசமிருந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கய்யாரா விமானத் தளத்தைத் திரும்பக் கைப்பற்றின. அது மொசூல் நகரைத் திரும்பக் கைப்பற்றப் பயன்படும் மையங்களில் ஒன்றாகச் செயற்படும் எனக் கார்ட்டர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளுக்கான ஆயுத தளபாட ஆதரவுகளை அமெரிக்கர்கள் வழங்குவர் எனவும் கார்ட்டர் கூறினார். (த)

# கடவுச் சீட்டின்றி வடகொரியா செல்லச் சீனர்களுக்கு அனுமதி

## *கட்டுப்பாடுகளைச் சீனா தளர்த்தியதை அடுத்து*

பீஜிங், ஜூலை 13
வடகொரியாவுக்கு எதிரான கட்டுப்பாடுகளைச் சீனா தளர்த்தியது. இதன் அடையாளமாகச் சீனச் சுற்றுலாப் பயணிகளைக் கடவுச் சீட்டின்றி அனுமதிப்பதாக வடகொரியா அறிவித்துள்ளது.

வடகொரியாவின் எல்லை நகரமான டாங்டொங்குவின் ஊடாகச் சினூஜூ நகருக்குப் பயணிக்கலாம். சுற்றுலாப் பயணிகள் பயண அனுமதியை டாங்டொங் நகரில் பெற்றால் போதும் என வடகொரியா அறிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணத்துக்காக ஒருவருக்கு 52 அமெரிக்க டொலர் அறவிடப்படுவதுடன், 30 ஆயிரம் சதுர பரப்புள்ள சுற்றலாப் பகுதி சுற்றிக் காட்டப்படும்.

இந்தச் சேவையைத் தனியார் நிறுவனம் ஒன்று வழங்கி வருகின்றது.

"ஒரு நாளைக்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. இந்த மாதம் 9ஆம் திகதியில் இருந்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது" என்று சுற்றுலாப் பயணங்களை ஏற்பாடு செய்யும் நிறுவனம் தெரிவித்தது. (த-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக இசை மழையில் மிதந்த சங்கானை முன்பள்ளிகளின்

# ஆன்மிகத் திருவிழா

கே.எஸ்.சிவஞானராஜா

தெய்வீக இசைமழை ஒன்று, விண்ணுலகில் இருந்து பூமிக்கு இறங்கிவந்ததுபோல, சங்கானைக் கோட்ட முன்பள்ளிக் குழந்தைகளின் ஆன்மிக அணிவகுப்பு உற்சவம் பக்திரசம் ததும்பும் வகையில், சித்தன்கேணி சிவன் ஆலயச் சூழலில் வெகுசிறப்பாக நடைபெற்றது. வீணாகான குருபீடம் நடத்திய இந்த சைவத் தமிழ்க் கலாசார அணிவகுப்புப் போட்டியில் இருநூற்றைம்பது சின்னஞ்சிறு பிஞ்சுக் குழந்தைகள் பங்கு பற்றிச் சிறப்பித்திருந்தனர்.

சங்கானைக் கல்விக்கோட்ட முன்பள்ளிகளையும் அந்தப்பிரதேச மக்களையும் ஒன்றிணைத்த சைவத்தமிழ்க் கலாசார அணிவகுப்புத் திருவிழாப்போன்று, இதுவரை இலங்கையில் எங்கேயும் நிகழ்ந்ததாக சரித்திரம் இல்லை. உலகிலும் நடைபெறவில்லையெனலாம். கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற இந்த விழா மிகவும் பெறுமதியானது. சித்தர்களின் பிரதான மையமாக விளங்கிய சித்தங்கேணி வைரவர் ஆலயத்தில் இருந்து பெரும் ஊர்வலம் கலாசார முறைப்படி ஆரம்பமானது. சித்துக்களும் சித்தர் களும் நிறைந்த கேணியடிச் சூழலில் தெய்வீகம் திகழ்வதும், அற்புதம் நிகழ்வதும், ஆன்மிகம் பொலிவதும், இயற்கையே. எனவே மழலைகளின் ஆன்மிகவிழா என்பது இதிலே நடைபெற வேண்டிய தேவை இருந்ததுபோலும்; கைகூடி விட்டமை, ஆனந்தமே.

### குருபீடம்

வீணாகான குருபீட முதல்வரும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவருமாகிய வித்யாசாகரம் சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ.சபா. வாசுதேவக்குருக்களின் சிந்தனையில் உருவாகிய மழலைகளுக்கான ஆற்றுகைத்திருவிழாவானது, சைவசமய தமிழ்க்கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களுக்குப் பாதை அமைத்துக்கொடுத்ததுபோல சோபித்தது. வழக்கம்பரை சித்தன்கேணி வரையிலான வீதிகூட சில நிமிடங்கள் குழந்தைகளின் அணிவகுப்புக்காய் ஒடுங்கி அடங்கியது. வழிகேட்டு வாகனங்கள் வரம் கேட்டன. இருந்தபோதும் பொலிஸாரின் சீரிய பணியால் நேரிய வியூகம் அமைக்கப்பட்டு பாதைகள் சரி செய்யப்பட்டன. எது எப்படியே வீணாகான குருபீடத்தின் இலக்கு குழந்தைகளின் சைவத்தமிழ்க் கலாசார விழுமியங்களை உயிரோடு பேணச் செய்வதேயாகும். அந்த இலக்கைக் குருபீடம் தொடர்ந்து செய்யவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. செய்யக்கூடிய வல்லமை அதற்குண்டு. செய்யும்!

### விருந்தினர்

இந்தியாவும், இலங்கையும் நெருங்கிய கலாசாரப் பரிவர்த்தனைகளைக் கொண்ட நாடுகளாகும். அதன் பிரகாரம் மேற்படி குழந்தைகளின் அணிவகுப்பை முதன்மை விருந்தினரான இந்தியத் துணைதூதரக யாழ்.வதிவிடப் பிரதிநிதி ஆ.நடராஜனோடு, வணக்கத்துக்குரிய ஜாக்ரத சைத்தன்ய சுவாமிகள் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத் தலைவர் ஆ.பாலவிநாயகன், சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திருமதி அ.சிவகரன், சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலய அதிபர் செல்வி நா.ஜெயராணி, சிவன் களஞ்சிய அதிபர் கேதீஸ்வரன், சுப்றா கல்வி நிறுவனத்தின் நிறுவுநர் ச.ஐங்கரன், ஸ்ரீ சிதம்பரரேஸ்வரர் தேவஸ்தான பரிபாலன சபைத்தலைவர் தி.ராஜ்குமார், ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் பூ.சிவகுமார், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமந்த குணதிலக, முன்பள்ளி ஆசிரிய சேவையில் பொன்விழா கண்ட நாயகி செல்வி லீலாவதி மாரிமுத்து, பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வி நா.நிரஞ்சனா, ஈ.சி.ரி கல்வி நிறுவன நிறுவுநர் லயன் ஜெ.ரஜீவன், சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், ச.கிருபானந் தன், வலிமேற்குப் பிரதேசபை செயலாளர் திருமதி ச.குணவதி, வடமாகாண ஆரம்பப் பிள்ளைப்பருவ அபி விருத்திப் பிரிவுப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, வலி.மேற்குப் பிரதேச செயலர் அ.சோதி நாதன்ஆகியோ ரும் மேற்படி அணிவகுப்பைக் கண்டு பரவசமடைந்தனர், பூரிப்படைந்தனர்.

### அற்புதம்

இருபத்தைந்து முன்பள்ளிகளைச் சேர்ந்த சுமார் இருநூற்றைம்பது (250) குழந்தைகளின் உடலிலும் உள்ளத்திலும் திருவருள் நிரம்பி வழிந்த காரணத்தால் பார்வையாளர்களின் கரங்களும் கைகூப்பித்தொழுது நின்றன. யானும் எனை மறந்து வணங்கலானேன். அப்படி என்னதான் சிறப்பென்றால் இலங்கையில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் அத்தனை தெய்வங்களும் இந்த அணிவகுப்புத் திருவிழாவில் காட்சி தந்தமையேயாகும். இது தெய்வீகமல்லவா? ஆம்!

முழுமுதற் கடவுளான சிவபெருமானின் பற்பல தோற்றங்களைக் கொண்டு இந்த அணிவகுப்பு இடம்பெற்றது. பார்வதி சமேத பரமேஸ்வரனின் பாங்கான வடிவங்களைக் கொண்டவர்கள், ஆனைமுகனாம் ஐந்துகர விநாயகனின் அற்புத வடிவங்களை உடையவர்கள், வள்ளி தெய்வயானை சமேத முருகனின் முகூர்த்த வடிவங்களை உடையவர்கள், நீல வண்ணக் கண்ணனின் வினோத லீலை வடிவங்களுமாகிச் சோபித்தவர்கள்.கலையாத கல்வி தரும் கலைமகளின் வீணாகானப் பேறுடன் ஆயகலை முகூர்த்த வடிவங்களுமாகி வரமருளியவர்கள்,

செல்வத்துக்கு அதிபதியாக விளங்கும் மகாலட்சுமி வடிவங்களுமாகி நிறைந்தவர்கள்.

ஸ்ரீராம ஜெயம் என்ற தாரக மந்திரத்தோடு ஸ்ரீஹனுமான் மரக்கொப்புகளிலிருந்து வீதியிலிறங்கி சீதா இரா மனிடம் சரணடைந்து இராம பக்தர்களுக்கு ஆசிவழங்க அருள்பெற்றவர்கள்.

அந்தணப் புரோகிதர்களாகப் பக்தர்களுக்கு கிரக பாவதோஷத்தை நீக்கி அருள்பாலித்தவர்கள்.

தோடுடைய செவியன் தேவாரம்பாடி மெய்சிலிர்க்கவைத்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடன் அவரது அடியார்கள்,

தலையே நீ வணங்காய் எனப்பாடி எல்லோரையும் வணங்க வைத்த திருநாவுகக்கரசு சுவாமிகளும் அவரது அடியவர்களும் ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே என்று பாடியருளி இறைவனையே வரவழைத்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும், அவரோடிணைந்த அடியவர்களும், வேண்டத்தக்கது அறிந்து வேண்டிய பரிசளித்த மாணிக்கவாசக சுவாமிகளும் அவரின் திருவாசகத்துக்கு உருகியவர்களும்,


முற்றும் துறந்த முனிவர்களும் அவரது சீடர்களுமாக நிலையாமையை எடுத்தியம்பியவர்களும் யாவருமாக,

மொத்தத்தில் ஆன்மிக எழுச்சியை இந்த மண்ணில் விதைத்துவிட்ட குழந்தைச் செல்வங்கள் அனைவருக்கும் கௌரவமும், பாராட்டுதல்களும் வழங்கப்பட்டமை சைவசமய வளர்ச்சிக்கு வித்திட்டது என்று துணிந்து கூறலாம்.

பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இந்த அணிவகுப்பு விழாவில் சுழிபுரம் பாரதி முன்பள்ளிச் சிறார்கள் அற்புதமாக ஆன்மிக எழுச்சியையும் தத்துவரூபமாக தெய்வீக சாம்ராஜ்ய வரப்பிரசாதத்தையும் நல்கியபடியால் முதலாம் இடத்தைப் பெற்று சைவசமயக் கலாசார மகிமைக்குப் பேறளித்தார்கள். பரிசுகள் கூட்டப்படுவது குழந்தைகளை ஊக்குவிக்கும்.

### தேவை

வீணாகான குருபீடத்துக்கு ஸ்ரீசிதம்பரேஸ்வரர் ஆலய சிவாம்சம் நிறைந்திருப்பதால் இது போன்ற கைங்கரியங்கள் பல செய்ய வேண்டியுள்ளன. முன்பள்ளிகளின் ஆற்றுகைகளை மாதம் ஒரு வெள்ளிதோறும் அரங்கேற்றுவதற்கு சிவன் ஆலயம் வரமாக வேண்டும். மேலும் சங்கானைக் கோட்டத்துக்கு அப்பாலும் ஆன்மிக, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணவல்ல போட்டிகளை மிகவும் திட்டமிட்டு நேர்த்தியாகவும் கீர்த்தியாகவும் நடத்துவதற்கு ஆவன செய்வது காலத்தின் தேவையாகும். குருபீடத்தின் அடுத்த நகர்வுக்காய் காலம் விடிகிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனம் கொண்ட இசைப் பேரறிஞர் முருகப்பா பஞ்சாபிகேசன்

சாவகச்சேரியூர் வை.இராசரத்தினம்



செம்மொழியாம் தமிழ்மொழியை முத்தமிழால் வளர்த்த பெருமைக்குரியவர்கள் பலர் இந்தியாவிலும் ஈழத்திலும் தோன்றி இணையில்லாப் பெருமையைப் படைத்துள்ளார்கள். அந்த வகையில் ஈழத்தில் யாழ். குடாநாட்டில் சாவகச்சேரி மண்ணில் தோன்றி நாதஸ்வரக் கலைக்கே மகுடம் சூட்டியவர் நாதஸ்வர இசை மேதை கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசன் ஆவார்.

நிலவளம், நீர்வளத்துடன், இசை வளத்தையும் இனிதே சேர்த்து தென்மராட்சியின் சிறப்பை உரமூட்டி வளர்த்த மு.பஞ்சாபிகேசன் 1924 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி சங்கத்தானையில் பிரபல தவில் வித்துவான் முருகப்பா-சின்னப்பிள்ளை தம்பதியினருக்கு மூத்தமகனாகப் பிறந்து பெருமை சேர்த்தவர். தனது ஆரம்பக்கல்வியை 8 ஆம் வகுப்பு வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயின்று தனது அறிவு ஆற்றலுக்கேற்ப நாதஸ்வரக் கலையைத் தேர்ந்தெடுத்து, அந்தக் கலையை வளர்த்தெடுக்க முனைந்தார். இதன் ஆரம்பமாக நாதஸ்வரக் கலைக்குரிய பயிற்சியை முதலில் சாவகச்சேரியில் சண்முகம்பிள்ளையிடமும், அப்புலிங்கப்பிள்ளையிடமும் பெற்றார்.

இதன் பயனாக தனது 14ஆவது அகவையில் முதற்கச் சேரியை பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலயத்தில் நிகழ்த்தி, பலரின் பாராட்டைப் பெற்றுக்கொண்டார். அன்றிலிருந்தே அவரின் நாதஸ்வரக்கான மழையும் உலகெங்கும் பரவத் தொடங்கியது.

தொடர்ந்து தமது இசைத்துறையில் பயிற்சியைப் பெறுவதற்காக இந்தியா பயணமானார். திருவங்காடுதுறை இராஜரத்தினம் பிள்ளையின் மருகர் திருவாவடுதுறை ரி.ஆர்.நடராசசுந்தரம்பிள்ளையிடமும் பயிற்சியைப் பெற்றார். இரண்டு வருடங்கள் ஐயப்பேட்டை வேணு கோபால்பிள்ளையிடமும், பயிற்சியைப்பெற்று குல வழக்கப்படி சிஷ்யை முடித்து இசை வேளாளர் மரபுக்கே மாண்புற சேவையை வளர்க்கத் தொடங்கிய இசை மேதையாவார்.

நெடிய ஆஜானுபாகுவான தோற்றம், பாரம்பரிய குடுமி, அனைவரையும் கவர்ந்திழுக்கும் புன்சிரிப்பு, நெற்றியிலே எந்நேரமும் விபூதி, சந்தனம், குங்குமத்துடன் கூடிய இலட்சுமிகரம் கொண்டமைந்ததுடன், தன்மையான பேச்சும், குருபக்தியும், பெரியோரைப் பேணி நடக்கும் பண்புள்ளம் கொண்டவராக அவர் வாழ்ந்தமையால் அனைவரையும் கவர்ந்த நாதஸ்வரச் சக்கரவர்த்தியாக விளங்கினார்.

இவ்வாறு நாதஸ்வரக் கலைக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்து சீரிய ஒழுக்கசீலராக வாழ்ந்துவரவே அவரைத்தேடிப் பட்டமும், கௌரவிப்பும் நாடி வரத் தொடங்கின. குறிப்பாக ஆலயங்கள், திருமண நிகழ்வுகள் எனப் பல நிகழ்வுகளிலும்தன் நாதஸ்வர இசையால் அனைத்து உள்ளங்களையும் இசையில் திளைக்க வைத்த தெய்வீகக் கலைஞர் இவர். ஆயிரம்பிறை கண்ட பெருங் கலைஞன். இவரைப் போல ஒரு உத்தம கலைஞனை நாம் இனி ஒருபோதும் காண முடியாது. எந்த நிகழ்வாக இருந்தாலும் குறிப்பிட்ட நேரத்துக்கு வருகை தந்து, ரசிகர்களின் பெருமதிப்பைப் பெற்ற அகம்பாவம் சிறிதும் இல்லாத அடக்க சீலராவார்.

> நெடிய ஆஜானுபாகுவான தோற்றம், பாரம்பரிய குடுமி, அனைவரையும் கவர்ந்திழுக்கும் புன்சிரிப்பு, நெற்றியிலே எந்நேரமும் விபூதி, சந்தனம், குங்குமத்துடன் கூடிய இலட்சுமிகரம் கொண்டமைந்ததுடன், தன்மையான பேச்சும், குரு பக்தியும், பெரியோரை பேணி நடக்கும் பண்புள்ளம் கொண்டவராக அவர் வாழ்ந்தமையால் அனைவரையும் கவர்ந்த நாதஸ்வரச் சக்கரவர்த்தியாக விளங்கினார்

கலாநிதி பஞ்சாபிகேசன் எழுபது வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் இசைக்கு ஆற்றிய சேவையைப் போன்று வேறு எந்தக் கலைஞனுக்கும் கிடைப்பது அரிதாகவே இருக்கும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட கச்சேரிகளை ஈழத்திலும், வெளிநாடுகளிலும் நிகழ்த்தி சாதனை படைத்த இசைப் பேரறிஞராவார்.

குறிப்பாக மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் தொடர்ந்து 40 வருடங்களாக இசைப்பணியாற்றியுள்ளார். இவ்வாலயத்தின் நிர்வாகத்தினரால் இசை வள்ளல், நாதஸ்வரக் கலாமணி என்னும் பட்டத்தை 1970 இல் வழங்கிக் கௌரவித்தனர். 1972இல் கல்வி அமைச்சர் பதியுதீன் முகமதுவால் நாதஸ்வரக் கானவாரிதி எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். 1993 இல் யாழ். கம்பன் கழகத்தால் இசைப் பேரறிஞர் எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1996 இல் அப்போதைய கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியால் கலாபூசணம் பட்டம் வழங்கி மதிப்பளித்தார். 1977 அமைச்சர் செல்லையா இராசதுரையால் 'ஸ்வர ஞான திலகம்' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2002இல் யாழ்ப்பாணம் இந்து கலாசாரப் பேரவையால் சிவகலாபூசணம் எனும் பட்டம் வழங்கப்பட்டது.

மேலும் கொழும்பு கம்பன் கழகத்தினர் 1981 ஆம் ஆண்டு சதாபிசேக பூர்த்தியை முன்னிட்டு முதுபெருங்கலைஞர் கௌரவம் வழங்கிக் கௌரவித்தனர். ஈழத்தின் பல பாகங்களிலும் பஞ்சாபிகேசன் புகழ் பூத்த ஏனைய நாதஸ்வரக் கலைஞர்களுடனும் இந்திய நாதஸ்வரக் கலைஞர்களுடனும் சேர்ந்து நாதஸ்வரம் வாசித்த நிகழ்வுகள் பலவுண்டு. அதே போன்று லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா எனப் பல வெளிநாடுகளிலும் புகழ்பெற்ற கலைஞர்களுடன் சேர்ந்து வாசித்த நிகழ்வுகள் இரசிகப் பெருமக்கள் மனதில் நீங்கா நினைவாக உள்ளன.

இவ்வாறு தன் கலைப் பணியாற்றி வருங் காலத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக 2010 ஆம் ஆண்டு 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் யாழ். பல்கலைக்கழகம் பஞ்சாபிசேகனுக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கி, உன்னத மதிப்பை வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து இசை வேளாளர் குடும்பங்கள் அனைவரும் சேர்ந்து இணுவிலில் ஒன்று கூடிப் பாராட்டு விழா எடுத்து மகிழ்ந்துள்ளனர்.

மேலும், தென்மராட்சி மண்ணுக்கே பெருமையைத் தேடித்தந்த பெருங் கலைஞன் என்ற வகையில் தென்மராட்சி மக்கள் சார்பாக தென்மராட்சிக் கலைமன்ற, கலாசார மண்டபத்தில் பாராட்டு பெருவிழா சிறப்புற நடத்தப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

பஞ்சாபிசேகனின் குடும்ப உறுப்பினர்கள், வடபகுதியில் நாதஸ்வரக்கலைஞர்கள் பேராசிரியர்கள் கல்வியியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு வாழ்த்துக்களை வழங்கியது எல்லோருக்கும் மகிழ்வாக அமைந்தது.

அத்துடன்கலாநிதி மு.பஞ்சாபிசேகனின் கலை வாழ்வைப்போலவே, குடும்ப வாழ்விலும் சிறப்புடன் நன் மக்களைப்பெற்று மகிழ்வடைந்தார். இவர் தம் நற் பணிகளினால் அவருடைய பிள்ளைகளும் நல்ல முறையில் வாழ்கிறார்கள். இவரின் இரண்டு ஆண் பிள்ளைகள் நாதஸ்வரக் கலைஞர்களாகவே பணி புரிந்து வருகின்றனர்.

கலாநிதி மு.பஞ்சாபிசேகன் குடும்பம் நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக கொழும்புக்கு இடம் பெயர்ந்து சென்றமையால் அவர்களின் கச்சேரிகளை இரசிக்கும் ஆர்வம் இருந்த சந்தர்ப்பங்கள் கிடைக்காது போய்விட்டன. இருந்தும் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் பஞ்சாபிகேசனின் மகன்மாரின் நாதஸ்வரக் கச்சேரிகளை நடத்துவதற்கு ஒழுங்கு செய்தும், இறுதி நேரத்தில் கச்சேரியை நடத்த முடியாமல் போய்விட்டது. எவ்வாறு இருப்பினும் பஞ்சாபிகேசனின் பேரப்பிள்ளைகள் இந்தக் கலைப்பணியை நன்கு தொடர்ந்து நடத்தி வருகின்றமை தென்மராட்சி மக்களுக்கு மன நிறைவாக உள்ளது என்றே கூறவேண்டும். சங்கத்தானையில் வசிக்கும் இசை வேளாண் குடிகளின் குலதெய்வமாக விளங்கும் இராக்கச்சியம்மாவை பக்தியோடு உணர்வுபூர்வமாக இன்று வழிபட்டு வருகின்றனர். அவளின் கடைக்கண் பார்வை கலாநிதி பஞ்சாபிகேசனுக்குப் முழுமையாகக் கிடைத்தமையினாலேயே அவரின் தொண்ணூறு ஆண்டு கால வாழ்க்கையில் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக கலைஞானப்பணியை பக்குவமாக ஆற்றினார்.

இசைப் பேரறிஞர் கலாநிதி பஞ்சாபிகேசனின் மறைவு ஓராண்டு கடந்து சென்றாலும் அவரின் நினைவுகளை இரசிகப் பெருமக்களால் மறந்துவிடமுடியாது. நாதஸ்வரக் கலையுலகில் அவர் இசை மூலம் முடிசூடா மன்னனாகவே என்றும் திகழ்வார் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி தந்த அருட் செல்வம் மௌன தவமுனிவர் கைலாசபதி

கே.எஸ்.சிவஞானராஜா

ஆறுமுகநாவலர், பண்டிதமணி, கைலாசபதி போன்றவர்கள் பற்றிய பரிபூரணமான ஆய்வு இன்னுமே இடம்பெறவில்லை என்பதை வாழ்நாள் மொழியியல் பேராசிரியர் சு.சுசீந்திரராஜா மௌன தவமுனிவர் பற்றிய நூலில் குறிப்பிட்டு அறிவுலக மாந்தர்களை விழிப்படையச் செய்தார். இதன் மூலமாக இந்த மூவரின் பெறுமதியை உணரமுடிகிறது. இம்மூவர் பற்றிய ஆய்வுகளை மிகவும் பொறுமையுடன் திட்டமிட்டு முறைப்படி ஆற்றவேண்டியுள்ளது. ஆரவாரத்திலும், வெளிப்பகட்டிலும் அடுத்த பட்டங்களுக்காகவும் பொழுதுகள் விடியவைக்கப்படுகிறதே தவிர மௌன தவமுனிவரது பொக்கிசங்களை வெளிக்கொணர மேடைகள் இன்னுமே அமைக்கப்படவேயில்லை என்று கூறுவதுதான் பொருத்தமானது. சகலதையும் தள்ளித்தான் ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

**பிறப்பு**

அளவெட்டியின் கண் ஆன்மிக வாழ்வில் மூழ்கிய சைவத்திருவேளாண்குடி மரபிலே வீரகத்தியார் பொன்னம்பலம் என்பவருக்கும் பார்பதி என்பவருக்கும் 1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி பிறந்தவர்தான் கைலாசபதி ஆவார். இவருக்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் செல்லப்பா. ஆனால் சந்ததியை வந்தனை செய்யும் முகமாக கைலாசபதி என்ற பெயர் தந்தையாரால் இவருக்கு இடப்பட்டது. அந்தப் பெயரே இவரை உச்சிக்குக் கொண்டு போய் விட்டதெனலாம்.

**கல்வி**

அளவெட்டியில் குருகுலக் கல்வியாக ஆரம்பித்து அளவெட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும், தனியாக வித்துவான் சிவானந்த ஐயரிடமும், வேதாரணியக் குருக்கள்மாரிடமும் பின்னர் அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும், அளவெட்டி ஞானோதயா வித்தியாசாலையிலும், மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையிலும் கல்வியைத் தொடர்ந்தார்.

தெல்லிப்பழை இரத்தினசபாபதி உபாத்தியாரின் கற்பித்தலில் மூழ்கிய கைலாசபதி கணித பாடத்தை அவரிடமே கேட்டு மற்றிக்குலேன் பரீட்சைக்குத் தகுதி பெற்றார். மயிலிட்டி சுவாமிநாதன், புலோலி சிவபாதசுந்தரம் ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம் ஈ.எஸ்.எல்.சி பரீட்சையிலும், மற்றிக்குலேன் பரீட்சையிலும் முதலாம் பிரிவில் 1921 ஆம் ஆண்டு சித்தியடைந்தார். இதன் நிமித்தம் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் ஆசிரியராய் பணியாற்றினார். இவரது காலத்தில் தான் லண்டன் இன்ரர் சயன்ஸ் வகுப்பு ஆரம்பமானது. அந்தப் பரீட்சையிலும் 1924 ஆம் ஆண்டு சித்தியடைந்தார். சமகாலத்தில் பி.எஸ்.சி பரீட்சைக்கும் தயாரானார். 1928ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை ஆரம்பமான போது பொருத்தமான ஓர் ஆசிரியரைத் தேடிக்கொண்டு இருந்தனர். 1930ஆம் ஆண்டு பி.எஸ்.சி பரீட்சையிலும் சித்தியடைந்த காரணத்தால் சைவாசிரிய கலாசாலையின் உபஅதிபராய் நியமனம் பெற்றார்.

பதவிகளும், பரீட்சைகளும் இவரது வருகைக்காய் தவமிருந்தன. தமிழ், சமயம், ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம், உளவியல்கல்வி, தத்துவம், வானியல், சோதிடம் போன்ற இன்னோரன்ன துறைகளில் விசேட பாண்டித்தியம் பெற்ற இவர் ஒரு கலைக் களஞ்சியமாகவே என்றுமே போற்றப்படுகின்றார்.

**திறமை**

கலாசாலை தொடர்பான எவ்வகைச் சிக்கல் வந்தாலும் ஒரு பாற்கோடாது ச்மன் செய்து சீர் தூக்கும் கோல்போல நீ வழங்குவார். அது இரண்டாவது கருத்துக்கும் விமர்சனத்துக்கும் எப்போதும் இடமளிக்கவில்லை.

மேலும் தமிழில் ஒரு சிறிய நோதல் வந்தாலும் அதனை நிவர்த்தி செய்து விடுவார்.

மற்றும் சாத்திரம் எதுவாயினும் நுண்பொருள்களையறியக் கூடிய வாக்குச் சுத்தமும் அநாயாசமான மனோதர்ம உரை வளமும் நிரம்பவே கைவரப்பெற்றவர்.

இதைவிட கலைகளில் ஆர்வமும் பயிற்சியும் போற்றுதலும் நிரம்பவே கொண்டவர். இவருடைய வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு மடம் ஓலையால் வேயப்பட்டு சாணியால் மெழுகப்பட்டது. ஆன்மிக வாலாயம் கொண்டது. இந்த மடத்திலே தான் இந்தியாவிலிருந்து வருகைதந்த ஓதுவார்களும் வேதாரணியக் குருக்கள் மாரும் தங்கியிருந்து அளவெட்டியை ஓர் ஆன்மிகத் திருத்தலமாக மாற்றினர். கைலாசபதியும் மிகுந்த நாட்டமுற்றார்.

**கூட்டுப்பிரார்த்தனை**

அளவெட்டியில் இந்தியா குருக்கள் மாரும், ஓதுவார்களும், பண்டிதர்களும், ஞானிகளும், சித்தர்களும் நிரம்பி வழிந்தனர்.

யோகர் சுவாமிகள், நயினாதீவுச் சாமிகள், வடிவேல் சுவாமிகள், கந்தையாச் சாமிகள், மகாதேவா சுவாமிகள் இவர்களின் வழியில் கைலாசபதியும் தெய்வீக நாம பஜனை செய்வதில் வல்லவரானார்.

கைலாசபதி வேதாரணியக் குருக்கள் ஓதுவார்களுடன் சேர்ந்து தனது பதின்மூன்றாவது வயதிலே (1915) அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்திலே கூட்டுப் பிரார்த்தனை செய்துவந்ததாக ஒரு செய்தி பதிவாகியுள்ளது. இதன் பின்னரே பண்பட்ட, பண்பாடவல்ல தீட்சை பெற்றவர்களின் கூட்டுறவால் அளவெட்டியில் ஒரு தொண்டர் குழாம் (1915 ஆம் ஆண்டு) அமையப்பெற்றது. இதில் மேற்படி ஞானிகளின் குருவருளோடு அந்தணப் பெருமக்களும் இணைந்து திரு விழாக்கள் திருமுறையால் நனைந்தது எனலாம். இதன் பிரகாரம் கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலில் 1916ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே தொண்டர்குழாம் அமைக்கப்பட்டு கூட்டுப்பிரார்த்தனையும் சுவாமி வீதியுலா வரும்போது பஜனையும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனுடைய நூற்றாண்டு வடிவமே தற்போதைய தொண்டர் சபையாகும். இதற்காகத் தன்னை அர்ப்பணித்தவர் கைலாசபதியாவார்.

**பண்டிதமணி**

கைலாசபதியின் தத்துவத்தை முதன் முதலாகக் கண்டுபிடித்தவர் மட்டுமல்ல அதனைப் பிரபல்யப்படுத்தியவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளையே. ஸ்கைலாசபதிக்குச் சீடன்போல அருகிருந்து அவரது சிந்தனைகளை விளங்கியோ, விளங்க ாமலோ எழுதிபதிவுசெய்து கொண்டார். அவரது உள்ளத்தைப் பதிவு செய்த ஒரேயொரு சீவன் பண்டிதமணியே ஆவார். இதனால் போலும் பண்டிதமணியின் உன்னதமான அர்த்தபுஷ்டியான கருத்துக்களுக்கு ஊற்றாக விளங்கியவர் கைலாசபதியே. எனவே பண்டிதமணியை நன்கு அறிந்திடவேண்டுமாயின் கைலாசபதியைப் பற்றி நன்கு அறியவேண்டும். கைலாசபதியை விட்டு பண்டிதமணியை முழுமையாக ஆராய்தல் ஒருபோதும் பயன்தராது.

பெரியவர்களிடத்தே எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்னும் ஆசாரத்தைச் சொல்லச் சொல்ல எழுதிய பண்டிதமணி ஒருமுறை இவ்வாறு வினவியதுண்டு. எப்படியென்றால் எங்கள் மனதிற்கு எட்டாதவைகளை எல்லாம் எதற்கு எங்களுக்கு ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறார்? என்பதே அதுவாகும். அதற்கு கைலாசபதி கூறிய பதில் யாதெனில்,

"சில விதைகளை ஒரு காலத்தில்
முளை கொள்ளலாம் என்று
எறிந்து விடுவதுண்டு"

என்பதை ஆழமாகச் சிந்திக்குமாறு கூறியதாகும். அதனாலே விளங்காதவைகளையும் ஒதுக்காமல் எழுதியதுண்டு. அவர் தொடராத துறைகளே இல்லை. இவ்வளவும் மட்டுமல்ல அப்பாலும் தெரிகிறது என்று அடிக்கடி சொல்லுவார். பண்டிதமணி கைலாசபதி பற்றிய உரைக்கோவைகளை வெளியிட விரும்பிய போதும் சில மாணவர்கள் அந்த நல்ல செயற்பாட்டைத் தடுத்துவிட்டனர். இப்பொழுதும் இவ்வாறான தமிழ் உரைநடை இலக்கிய சிருஷ்டிகளையும், இலக்கிய கர்த்தாக்களையும் ஆழமறிந்து பார்க்க முடியாத நிலையினாலேயே சுதேசிகள் அவர்களை அமுக்கி வைத்திருக்கின்றனர். இந்த நிலை எப்போது மாறுகிறதோ அப்போதுதான் தமிழுக்கு விடுதலை கிடைக்கும். கலியுகத்தில் தமிழையும், சமயத்தையும், கலையையும் ஒரு சிலர் தமது கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்க வேண்டுமென்று அவற்றைப்படுத்திற பாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஜனரஞ்சகத்தோடு சாகசச்சிரிப்போடு வளர்க்கப் பார்க்கிறார்கள். தமிழ், சமயம், கலை மூன்றும் இறைவனால் வளர்க்கப்பட்டே தீரும். ஒருபோதும் இம்மூன்றும் தேய்மானம் அடையப்போவதில்லை. மெல்ல இவை இனி சாகப்போவதுமில்லை. முதற்கண்

மனத்துக்கண் மாசு இலாதவனாய்
அவனிடத்தில் அறம் தழைக்குமாக இருந்தால் தான் தமிழ், சமயம், கலை யாவுமே சித்திக்கும்! பலிக்கும்! இனிக்கும்! சுதந்திரமாக எவரையும் எழுத விடுங்கள். கட்டுப்படுத்தாதீர்கள், புள்ளிகளைக் குறைக்காதீர்கள் பேனாவை முறித்து எறிந்துவிடாதீர்கள். சிவ சிவ என்று சொல்லி கத்தியைத் தீட்டாதீர்கள். புத்தியைத் தீட்டுங்கள். புதுவிதி சமையுங்கள். கைலாசபதி இன்று இருப்பாரேயானால் தமிழர் தலைநிமிர்ந்து நிற்குமளவுக்கு ஆசாரம் மேலோங்கியிருக்கும். அவரது உரைகள் 1994இல் பல்கலைக்கழகத்தால் வெளியிட்டு வைக்கப்பட்டமை தமிழ்த்தொண்டுக்குரியதாகும்.

பதவிகளும், பரீட்சைகளும் இவரது வருகைக்காய் தவமிருந்தன. தமிழ், சமயம், ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம், உளவியல்கல்வி, தத்துவம், வானியல், சோதிடம் போன்ற இன்னோரன்ன துறைகளில் விசேட பாண்டித்தியம் பெற்ற இவர் ஒரு கலைக் களஞ்சியமாகவே என்றுமே போற்றப்படுகின்றார்.

**மௌன தவமுனிவர்**

கைலாசபதியின் சிந்தனைகள் ஒவ்வொருவருடைய மனங்களையும் கிளறிவிட்டு அதிலிருந்து முத்துக்களைப் பொறுக்கி எடுப்பதுபோன்று பெறுமதியாக இருக்கும். விவேகிகளுக்குச் சிறந்த விருந்தாகவும் புத்தகப் பூச்சிகளுக்குப் பெரும் சவாலாகவும் அதே சமயம் நல்லார்வமுள்ள சாதகர்க்கு இனிய வழித்துணைபோலவும் வழுக்கி விழும் அரைகுறைப்படிப்போடு இருப்பவர்க்கு உதவும் ஊன்றுகோல் போலவும் பயன் செய்துவிதம் செய்கின்றன. மௌனமாகத் தவமிருந்து முகிழ்க்கும் கருத்துக்கள் பொன் போன்றதாகும். மௌன தவமுனிவரின் சிந்தனைகளை பண்டிதமணி (32) முப்பத்திரண்டு கொப்பிகளில் எழுதிவைத்திருந்தார். கட்டுவன் ஆசிரியரான அப்புக்குட்டியும் எல்லாவற்றையும் நன்காராய்ந்து பத்திரப்படுத்தி வைத்ததனால் ஆசிரியர் ச.பரநிருபசிங்கம், அதிபர் ஆ.சபாரத்தினம், மயிலங்கூடலூர் நடராஜா, பேராசிரியர் சு.சுசீந்திரராசா, பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், அதிபர் சி.சுவாமிநாதன், அதிபர் இராமநாதபிள்ளை, வே.நடராஜா, பண்டிதை வேதநாயகி, பண்டிதர் இராசையா, பண்டிதர் சுப்பிரமணியம், லலிதாமினி, முருகேசு, இரத்தின சபாபதி, சிவபாதசுந்தரம் ஆகியோரது ஒத்தாசையும் இருந்த காரணத்தால் மௌன தவமுனிவரது வரலாறு ஓர் ஆவணமாகிறது.

1932 ஆம் ஆண்டளவில் கீரிமலை கிருஷ்ணபிள்ளை மடத்திலே பண்டிதமணியும், கைலாசபதியும் தங்கி தொல்காப்பியமும், ஆங்கிலமும் பகிர்ந்து கொள்வதாக ஓர் ஏற்பாடு. பண்டிதமணி ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த தொல்காப்பியச் சுருக்கத்தைச் சொல்லத் தொடங்கினார். சிறிது நேரத்தில் கைலாசபதி பண்டிதமணி சொன்னவற்றிற்கு அப்பால் சொல்லிக் கொண்டு போகத் தொடங்கி விட்டார். பண்டிதமணியோ தொல்காப்பியத்தை கைலாசபதியிடம் கேட்க வேண்டியதாயிற்று. அவர் ஒரு வறுத்தவித்து. பழுத்துக் கனிந்த பழம்.

உலகப் புரட்சிகளில் அள்ளுண்டு போகாமலும் உரையாசிரியர்களின் வலைகளில் சிக்காமலும் தனித்து நின்று சிந்தித்துப் பிரம்மசூத்திரம், தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவையார், திருமந்திரம், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சங்க இலக்கியங்கள், இதிகாசங்கள், திருமுறைகள் யாவற்றிலும் விளைந்த நுண் பொருளை அறிந்து விளக்கக் கூடியதாக இருந்ததினாலேயே கைலாச பதியவர்கள் மௌன தவமுனிவராகப் பிரகாசிக்கின்றார். 114 வருடங்களாக அவரது நாமம் தொடர்ந்து உச்சரிக்கப்படுகிறது.

**தேவை**

இலங்கையில் கலை, கலாசாரம், பண்பாடு, ஆன்மிகம், அரசியல், வைத்தியம், சோதிடம், விவசாயம், மாட்டுச் சவாரி, வண்டில்மாடு எதுவாயினும் அதனதன் வரலாறு எழுதப்படவேண்டுமாயின் அளவெட்டியை விட்டு விட்டு எழுதமுடியாது. அவ்வாறு எழுதப்படுமாயின் அது முழுமையாக அமையாது. அதேபோல கும்பழாவளைப் பிள்ளையார் திருத்தலத்தைக் குறிப்பிடாமல் எந்தவொரு கைங்கரியமும் ஒப்பேற முடியாது ஒப்பேற்றவும் முடியாது.

இன்னும் ஒருபடி மேலே சென்று கூறுவதாக இருந்தால் மௌனதவமுனிவரின் வரலாற்றையும் வரம் பெற்ற பொக்கிசங்களையும் தவிர்த்து அளவெட்டியில் எந்த ஒரு படைப்பும் வெற்றி பெறமுடியாது. கும்பழாவளைத் தொண்டர் சபையின் நூறாவது ஆண்டு நிறைவு விழா அரங்கேறும்போது கைலாசபதி 1915 இல் வேதாரணியக் குருக்கள்மாருடன் சேர்ந்து கும்பழாவளையில் கூட்டுப்பிரார்த்தனை நடத்தியமை ஆன்மிக இசைப்பணியின் தோற்றுவாய் என்பது ஒரு வரலாற்றுத் தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

























# இடைக்காட்டில் முத்தமிழ் விழா

அச்சுவேலி–இடைக்காடு மகா வித்தியாலய முத்தமிழ்க் கலாமன்றம் நடத்திய முத்தமிழ் விழா, பாடசாலையின் பிரதான மண்டபத்தில் முத்தமிழ்க் கலாமன்றத் தலைவர் கு. வஜீதரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய கலா சாலையின் பிரதி முதல்வரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கச் செயலாளருமாகிய ச.லலீசன், கோப்பாய்க் கல்விக் கோட்டப் பணிப்பாளர் நா. சிவனேசன், பாடசாலையின் முன்னாள் அதிபர் அ. அருந்தவநேசன், இந்நாள் அதிபர் கு. வாகீசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கெருடாவில் துளசி குழுவினரின் மங்கல இசை, முத்தமிழ்க் கலாமன்ற உபதலைவர் இ.தேனுஜாவின் வரவேற்புரை, வளலாய் மாணிக்கப்பிள்ளையார் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ க. ஜெயராமக் குருக்களின் ஆசியுரை, முத்தமிழ்க்கலாமன்றச் செயலாளர் ப.இலக்கியாவின் நன்றியுரை என்பன இடம்பெற்றன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச. லலீசன் சங்க இலக்கியங்கள் காட்டும் விழுமியப் பண்புகள் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். பரத நடனம், கிராமிய நடனம், இசைக் கச்சேரி, வில்லிசை என மாணவர்களின் கலை நிகழ்வுகள் பல இடம்பெற்றன.

முத்தமிழ் விழாவையொட்டி பாடசாலையின் இல்லங்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வேலுப்பிள்ளை இல்லம் முதலிடத்தையும், ராஜரட்ணம் இல்லம் இரண்டாம் இடத்தையும், நமசிவாயம் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

நிகழ்வுகளை மன்றக் காப்பாளர் ம. இரங்கநாதன் நெறிப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பழாவளையே கூட்டுப்பிரார்த்தனையின் தோற்றுவாய்

கருடன்

சோழப்பேரரசு இந்தியாவில் நிலை பெற்ற காலமே இலங்கையிலும் சைவ ஆலயங்கள் பல்கிப் பெருகிற்றெனலாம். சகல ஜீவராசிகளும் சிவமாகவே போற்றப்பட்ட காலம். நோயென்பதும் வறுமையென்பதும் யாரையுமே தீண்டாத காலம். இலங்கை சிவபெருமானின் திருவருட்பேறாகவும் ஒரு சஞ்சீவியாகவும் குருவருட் பிரசாதமாகவும் மிளிர்ந்த காலமது. இன்றுவரை திருமுறைகளே சாட்சியாகிறது. சிவபக்தன் இராவணன் இலங்கையை ஆண்ட போது சிவபிரானிடம் வேண்டிக்கொண்ட பெருவரங்களிலொன்று தான் வெந்துயர் தீர்க்கவல்ல திருநீறு. மருந்தாக அணியும் போதும் சாப்பிடும்போதும் நோய் தீரவேண்டும் என்பதுதான் தூயவெண்ணீறு கொண்ட வரம். அதனாலே தான்,
இராவணன் மேலது நீறு என்று திருஞானசம்பந்தர் திருநீற்றுக்கு உயிர் கொடுத்துள்ளார். அளவெட்டி என்ற கிராமமானது திருநீற்றுக்கும் திருநீறு ஆக்குவதற்கும் சிவசிவ என்று போற்றுவதற்கும் திருச்சிற்றம்பலம் என்று சொல்லி கூட்டுப்பிராத்தனை செய்வதற்கும் வழிகோலிற்று. இதற்காகவன்றி ஆலய கைங்கரியங்கள் சித்திப்பதற்காகவும் வருத்தங்களைத் தணிப்பதற்காகவும் கூட்டுப்பிரார்த்தனை மூலம் மனப்பாரங்களைக் குறைப்பதற்காகவும் எல்லாமே நீதானப்பா என்றிருந்த கும்பழாவளையில் தூரநோக்கிலே அப்போதிருந்த தொண்டர்கள் தம்மை அர்ப்பணித்தனர். பிள்ளையாரை மகிழ்வித்தனர். வீட்டுக்கொரு பசு, வீட்டுக்கொரு தென்னை, வீட்டுக்கொரு தொண்டர், வீட்டுக்கொருபிடி அரிசி என்று அளவெட்டியில் ஆன்மிகம் செழித்தோங்கியது.

**கும்பல்+ஆ+வளை**

மா+இழி+திட்டி= மாவிழிதிட்டி என்ற காரணமும் கும்பலாய் வளை என்ற காரணமும் கும்பழாவளை எனப் பெயர் கொள்ளக்காரணமாயிற்று. கும்பல்= கூட்டம். ஆ=பசுக்கள், வளை = பெருகுதல். எனவே பசுக் கூட்டங்கள் நிரம்பி மகிழ்ந்த இடம் என்பது ஒரு கருத்து. இதனருகே குமாரத்தி குளம் பசுக்களின் தாகத்தைத் தீர்த்தது மட்டுமல்ல மாருதப்புரவீகவல்லியானவள் இந்தக் குளத்திலேயே நீராடி விநாயகரை வணங்கியபடியால் மாவிழிதொட்டி மாவிழிதிட்டியாயிற்று. மேலும், மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகச் சாயலும், குன்ம நோயும் கும்பழாவளைப்பதியிலே முற்றாக நீங்கிய காரணத்தால் (மா=குதிரை இழி = நீங்குதல் திட்டி= மேட்டிடம்) மாவிழி திட்டியாயிற்று. சோழ சாம்ராம்ஜ்ஜியம் குமாரத்தியின் குதிரை முகம் நீங்கியதால் அளவெட்டியையும் மகிழ்வித்த தெனலாம்.

**வேதாரணியம்**

வேதாரணியத்திலிருந்து வேதம் ஆகமம், பண் தெரிந்த மறைக்காடர்கள் மாருதப்புரவீகவல்லியின் பெற்றோர்கள் மூலம் அளவெட்டிக்கு வரவழைக்கப்பட்டனர். மாருதப்புரவீகவல்லியால் நேர்த்தியாகத் தாபிக்கப்பட்ட கொல்லன்கலட்டி வரத்தலை அளவோலை. கும்பழாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை ஆகிய ஸப்த தலங்களில் வேதவல்லுநர்களான மறைக்காடர்களால் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்த்தப்பெற்றது. இதன் ஆரம்பத் தலமாகவும், மத்திய தலமாகவும் விளங்கிய கும்பழாவளையிலிருந்துதான் வேதபாராயணம் ஒலித்ததென இராமலிங்க ஐயரின் பரம்பரைச் சந்ததி வாயிலாக அறிய முடிகிறது. 1847 ஆம் ஆண்டு எழுதப்பட்ட தோம்பொன்றில் இராசதுங்க முதலியார் பழனிப்பிள்ளை சுப்பையர், கணபதியாச்சாரியார்கள் இவ்வாலய பாரம்பரிய வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்தும் பேணி வந்ததை கோபுரச் சான்றுகள் கைகொடுத்துதவுகின்றன.



**அளவெட்டி என்ற கிராமமானது திருநீற்றுக்கும் திருநீறு ஆக்குவதற்கும் சிவசிவ என்று போற்றுவதற்கும் திருச்சிற்றம்பலம் என்று சொல்லி கூட்டுப்பிராத்தனை செய்வதற்கும் வழிகோலிற்று. இதற்காகவன்றி ஆலய கைங்கரியங்கள் சித்திப்பதற்காகவும் வருத்தங்களைத் தணிப்பதற்காகவும் கூட்டுப்பிரார்த்தனை மூலம் மனப்பாரங்களைக் குறைப்பதற்காகவும் எல்லாமே நீதானப்பா என்றிருந்த கும்பழாவளையில் தூரநோக்கிலே அப்போதிருந்த தொண்டர்கள் தம்மை அர்ப்பணித்தனர்.**

**கைலாசபதி**

கும்பழாவளை தொடர்பான சகல வரலாறுகளையும் துருவி ஆராய்ந்தவர்களுள் முதன்மையானவர் அளவெட்டிக்கு வரம் சேர்த்த மௌன தவமுனிவர் கைலாசபதியாவார். இவர் வாழ்ந்த அளவெட்டி வீட்டுக்கருகே ஒருமடம் மண்ணால் கட்டப்பெற்று, ஓலையால் வேயப்பெற்று, சாணியால் மெழுகப்பெற்ற இந்த மடத்தில் தான் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டவேதாரணியக் குருக்கள்மாரும் ஓதுவார்களும் தங்கியிருந்து அளவெட்டியில் அருள்சுரக்கும் ஆலயங்களில் பணிபுரிந்திருக்கின்றார்கள். இவ்வாறு பணிபுரிந்த ஓதுவார்களுடன் சேர்ந்து மௌனதவ முனிவர் கைலாசபதியும் கும்பழாவளையில் 1914, 1915 ஆம் ஆண்டுகளில் கூட்டுப்பிரார்த்தனை ஆற்றியுள்ளமை மடாதிபதிகளினால் உறுதி செய்யப்பட்டுள்ளது.
1916 ஆம் ஆண்டு கும்பழாவளைத் தொண்டர்சபை உருவாவதற்கும் இந்தப் பின்னணியே ஆதாரசுருதியாக அமைந்துள்ளது. இந்தக் கருத்தை ஆசிரியர் பரநிருபசிங்கம், ஆசிரியர் சிதம்பரப்பிள்ளை, ஆசிரியர் விஸ்வநாதன், ஆசிரியர் சிற்றம்பலம், ஆசிரியர் செல்லையா, ஆசிரியர் நாகலிங்கம், ஆசிரியர் நாகநாதர், ஆசிரியர் மயில்வாகனம், ஆசிரியர் தம்பிப்பிள்ளை, ஆசிரியர் பொன்னம்பலம், ஆசிரியர் சிவ சுப்பிரமணியம், ஆசிரியர் மாணிக்கம், ஆசிரியர் சிவசம்பு, ஆசிரியர் சுந்தரம்பிள்ளை, ஆசிரியர் வல்லிபுரம், ஆசிரியர் அருளம்பலம் போன்ற யாவருமே மறுப்பின்றி அங்கீகரித்திருக்கின்றனர். இந்தக் கருத்துக்களே கூட்டுப் பிரார்த்தனைக்கான தோற்றுவாயை இலங்கையில் பதிவுசெய்கிறது.

**நயினைச் சுவாமிகள்**

கும்பழாவளை கொம்பனின் ஈர்ப்புச் சக்தியால் சித்தர்களும், ஞானிகளும், முனிவர்களும் அளவெட்டியில் நிறைந்தனர். நயினை முத்துக்குமார சுவாமிகள் கைலாசபதியின் சமகாலத்தில் வாழ்ந்தவராகப் பலமுறை அளவெட்டிக்கு வருகைதந்து கும்பழாவளையானைப் போற்றி வாழி பட்டதுண்டு. இவரும் கூட்டுப்பிரார்த்தனையில் அனைவரையும் சேர்த்து அளவெட்டியை வளப்படுத்தியதுண்டு. இவரது கூட்டுப்பிரார்த்தனையில் காசியப்பா, சின்னப்பர், நாகமுத்து, அருணர், கணபதிப்பிள்ளை, அம் பலம், சரவணமுத்து, தாமு அப்பா சற்குணசிங்கம் எனப் பல அடியவர்கள் சேர்ந்து விநாயக மகிமையை மேம்படுத்தியதாக அறியக்கிடக்கிறது. இற்றைக்கு நூறு வருடங்களுக்கு மேலாக நயினாதீவு முத்துக்குமார சுவாமிகளால் பாடியும், சேர்ந்தும் பாடப்பெற்ற ஓர் அற்புதமான பாடல் அளவெட்டியில் இன்றும் பாடப் படுகிறது. பாடுவோமாக.

அழகேச னிந்திரன் திருமார்ப
னோடயன்
அவரவர்க ளரசிருப்பு உன்
அடிபேணுமடியவர்க்
கடிபேணினார்பெறும்
ஆக்கத்தி னொன்றென்னவே
உளமீதி னொருபொழுது
மறவாமலே நினைந்
துருகி யுள்ளே நினைந்தால்
ஓங்கார ரூபநீ யன்றிநல்
லுறவுயிர்க்
குண்டோ உரைப்பதற்கு
பழமோதகங் கடலை அவலெள்
சருக்கரை
பருப்புக் கருப்பு மிளநீர்
பலகாரமும் பிரிய போதகக் கன்றே
பயம் தவிர்த்தாள வருவாய்
வளமேவு கும்பழா வளையிலுறை
வாசனே
வல்லவாம்பிகை நேசனே
வானாதி பூதசராசரம்
தழைக்குமுயர்
மாரியே அருள்வாரியே.

இற்றைவரை கூட்டுப்பிரார்த்தனை பஜனை, புராணபடனம்யாவுமே தொண்டர்களால் பேணப்பட்டு வளர்க்கப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை மாத ராசி பலன்கள்




## துலாம்

### சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதம்

எதையும் எதிர்த்து நின்று சமாளிக்கும் திறமை உடைய துலாம் ராசியினரே உங்கள் மனம் குழப்பம் இன்றி தெளிவாக இருக்கும். இந்த மாதம் தன ஸ்தானத்தில் வக்கிர நிவர்த்தி பெற்ற செவ்வாய் - சனி, பஞ்சமபூர்வ புண்ணிய ஸ்தானத் தில் கேது, பாக்கிய ஸ்தானத்தில் சூரியன் - புதன் - ராசிநாதன் சுக்கிரன், லாபஸ்தானத்தில் குரு - ராகு என கிரகங்களின் இருப்பு இருக்கிறார்கள். ராசிநாதன் சுக்கிரன் பாக்கியஸ்தானத்தில் சூரியனுடன் சேர்க்கை பெற்று இருப்பது நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டுச் செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள்.

தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் இலாபம் கிடைக்க வழிசெய்யும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும்.

குடும்பத்தில் இருப்பவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வது அமைதியைத் தரும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகளால் குடும்ப விடயங்கள் சாதகமாக நடக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெண்களுக்கு மற்றவர்கள் உதவியுடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். சிக்கனத்தை கடை பிடிப்பது நல்லது.

மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற நண்பர்களின் உதவி கிடைக்கும். வீண் செலவைக் குறைப்பது நல்லது.

**பரிகாரம்:** காளி தேவியை வழிபட்டு வர நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பண வரத்து கூடும்.

**சித்திரை 3, 4 பாதம் :**
தொழில் வியாபாரத்தில் புத்திசாதூரியத்தால் முன்னேற்றம் காண்பீர்கள். சரக்குகளை அனுப்பும் போது கூடுதல் கவனம் தேவை.
உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். உழைப்பு அதிகரிக்கும்.

**சுவாதி :** குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செல்வதன்மூலம் மகிழ்ச்சி உண்டாகும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காகப் பாடுபடுவீர்கள். உறவினர் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**விசாகம் 1, 2, 3ஆம் பாதம்:**
எந்தவொரு வேலையைச் செய்யும் போதும் கூடுதல் கவனத்துடன் செய்வது நல்லது. செலவு அதிகரிக்கும். எந்தக் காரியத்தைச் செய்தாலும் தடை, தாமதம் ஏற்படலாம். பணவரத்து குறையும். உடல் சோர்வு ஏற்படும்.

(தொடரும்)

# ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு
# பயன்தரும் துரித கணிதப் பயிற்சித் திட்டம்

தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா



(நேற்றையதினம் தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களின் கணிதக் கணித்தல் திறன்களை விருத்தி செய்யும் செயற்றிட்டம் தொடர்பாக விளக்கங்கள் தரப்பட்டன. இன்று மாணவர்களுக்குரிய பயிற்சிகள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தரப்படுகின்றன)

**IMaCS பயிற்சிகள் தரத்துக்கேற்ப பின்வருமாறு தயாரிக்கப்படும்**

1. எல்லைக்குள் நிறந்தீட்டல் (ஒருநிறம்)
2. ஒத்த உருக்களை இனங்கண்டு அவற்றுக்கு ஒரேமாதிரி பலவர்ணங்கள் தீட்டுதல்.
3. உருக்களை எண்ணுதல், எழுதுதல்
4. கூட்டல்களை சத்தமாக உரத்துச் சொல்லுதல்.
5. இலக்கங்களை முறைப்படி எழுதுதல்.
6. நிரல், நிரைக் கூட்டல்கள்
7. 3x3, 4 x4 பெட்டிகளில் கூட்டல் அறிமுகம் இவை தினமொரு பயிற்சியாக செய்யப்பட்டு பிள்ளை களுடன் கலந்துரையாட வேண்டும். நேரக்கணிப்பு அவசியமில்லை.

**தரம் 2 தரம் 2 மாணவர்களுக்கு கூட்டல், கழித்தல் பயிற்சிகள் ஆரம்பமாகும்**

1. உருக்களை எண்ணி எழுதுதல்
2. எண்சோடிகளை கூட்டி நிரப்புதல்
3. நிரல், நிரைக் கூட்டல்கள்(தனி எண்கள்)
4. சதுரப் பெட்டிக் கூட்டல்கள் 2 x5 , 3 x 5 ...... பேணல்
5. நிரல், நிரைக் கழித்தல்கள் (20க்கு உட்பட)
6. சதுரப்பெட்டிக் கழித்தல்கள்(20க்கு உட்பட) 2 x5 , 3x5........

தினமொரு பயிற்சி செய்து திருத்தப்படவேண்டும்.

**தரம் 3**

தரம் 3 மாணவர்களுக்கு கூட்டல், கழித்தல்,பெருக்கல் பயிற்சிகள் ஆரம்பமாகும்

1. நிரல் நிரை கூட்டல், கழித்தல், பெருக்கல்
2. சதுரப்பெட்டிக் கூட்டல், கழித்தல், பெருக்கல் 3x5, 4x5 பெட்டி
3. 10X10 = 100 பெட்டி (100 Box) கூட்டல், கழித்தல், பெருக்கல்.

தினமொரு பயிற்சி செய்து திருத்தப்பட வேண்டும், நேரக்கணிப்பு அவசியம்.
100 கணித்தல்களை மூன்று நிமிடத்துள் செய்து முடிக்கும் திறன் விருத்தியாக வேண்டும்.

**தரம் 4**

1.தரம் 3 இல் உள்ள படி கூட்டல், கழித்தல், பெருக்கல் மேலதிகமாக பிரித்தல் கணக்கு(நிரை) வழங்கப்படும்.
2. A வகைப் பிரித்தல் (மீதிவராதது) 50 ஐ மூன்று நிமிடத்துள் முடிக்கும் திறன் விருத்தியாக வேண்டும். (உ+ம் 60 ÷ 12 = 5)
3. தினமொரு பயிற்சி செய்து நேரடிக்கணிப்புடன் திருத்தி பின்னூட்டல் செய்யப்பட வேண்டும்.

**தரம் 5**

தரம் 5மாணவருக்கு தரம் 4 இற்கு மேலதிகமாக
1.B,C வகைப் பிரித்தல்
B வகை 1 மீதி பெறப்படும். உ+ம் 31 ÷ 6= 5 மீதி 1
C வகை ஒன்றுக்கு மேற்பட்ட மீதி பெறப்படும் உ+ம் 34 ÷ 6 =5மீதி 4
2. நெடும்பெருக்கல், நெடும்பிரித்தல்
உ+ம் 123
x32 23 324

தினமொரு பயிற்சி வழங்கி நேரக் கணிப்புடன் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

**புள்ளியிடல்**

கூட்டல், கழித்தல், பெருக்கலுக்கு 1 புள்ளியும் பிரித்தலுக்கு 2 புள்ளியும் நெடும் பெருக்கல் பிரித்தலுக்கு தக்கவாறும் புள்ளி வழங்கப்படும்.

**பரீட்சை**

1. வினாத்தாள் வழங்கியதும் பார்வையிட்டு சுட்டெண் இட்டு வினாத்தாளை மறுபக்கம் திருப்பி வைக்க வேண்டும்.
2. ஆரம்பிக்கும்படி கட்டளையிடப்பட்டதும் விரைவாகவும் செம்மையாகவும் கவனவீனப் பிழைகளைத் தவிர்த்தும் செயற்பட வேண்டும்.
3. விடையெழுதி முடிந்ததும் எழுந்து நிற்க பரீட்சகர் வருகை தந்து நேரத்தை விடைத்தாளில் குறிப்பிட்டு, விடைத்தாளைப் பொறுப்பேற்பார். 4. 3 நிமிடம் (180 செக்கன்) இலக்கு நேரமாயின் பின்வருமாறு புள்ளியிடப்படும்.

**உதாரணமாக**

ஒரு பிழைவிட்டு 100 கணித்தல்களை 110 செக்கனை நிறைவு செய்த ஒரு வருக்கு

| | |
|---|---|
| சரிகளுக்கான புள்ளி | 99 |
| நேரபோணஸ் புள்ளி (180-110) | 70 |
| மொத்தப் புள்ளி | 169 |

தினமும் ஒரு பயிற்சி IMaCS செய்து கொண்டுவர கவனவீனப் பிழைகள் இல்லாதொழிந்து கணிதச் செய்கைகள் விரைவுபடும். ஆரம்பக் கல்விப் பருவப் பிள்ளைகளுக்கு கணிதச் செய்கைகள் வாழ்வோடிணைந்துவிடும், வாழ்வு சிறக்கும்.
இவைகளை மையப்படுத்தி ஒரு மாதத்துக்கான 18 நாள் பயிற்சிக் கையேடுகளை பதினைந்து ரூபாவுக்கு விநியோகம் செய்கிறேன். கையேட்டிலுள்ள எல்லாப் பயிற்சிகளையும் ஒரே நாளில் செய்து முடிப்பதால் எந்தவித பயனும் ஏற்படாது. நேரக்கணிப்பு மிக அவசியம். தொடர் பயிற்சி உயர்ச்சியைத் தரும். இடைநிலைக் கல்வி மாணவர் களும் இந்தப் பயிற்சியை மேற்கொள்ளலாம். நீண்ட நாள் பயிற்சி விவேகத்தை வெல்லக்கூடியது. தொடர் முயற்சி யால் ஆமை முயலை முந்திய கதையை நினைவு கூர்வோம்.)

(முற்றும்)

கட்டுரையாளர்
ஓய்வுநிலை ஆரம்பக் கல்வி
உதவிக் கல்விப் பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.எஸ்.சிவதாசனின் ஓவியக் கண்காட்சி















ஓவியக்கலையானது மனித நாகரிக வளர்ச்சியில் ஆரம்பகாலம் முதல் முதன்மை பெற்று வருகின்ற கலைவடிவமாக விளங்குகின்றது. வேட்டையாடச்சென்ற மனிதன், தான் சந்தித்த அனுபவங்களை தத்ரூபமாக உள்ளத்து உணர்வுகளை ஓவியங்களாகப் படைத்ததாக வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றுக்குச் சான்றாக குகை ஓவியங்கள் விளங்குகின்றன. இந்த ஓவியங்கள் காலமாற்றங்களுக்கு ஏற்ப, தமது வளர்ச்சிப்போக்கில் மாற்றங்களைக் கொண்டமைந்த வகையில் மரபு சார்ந்த ஓவியங்கள், நவீன ஓவியங்கள் என்பதாக அமைகின்றன. இந்த வகையில் ஓவிய ஆசிரியர் எம்.எஸ். சிவதாசனால், கடந்த ஆறு ஆண்டு கால உழைப்பினால் வரையப்பட்ட ஓவியங்கள் தொடர்பான கண்காட்சி நிகழ்வானது ஐந்து நாள்களாக (2.07.16-06.07.16) திருமறைக்கலாமன்றத்தின் ஓவியக் கலைக்கூடத்தில் இடம்பெற்றது. கண்காட்சியில் மரபு சார்ந்த வகையிலான ஓவியங்கள் நவீனம் சார்ந்த வகையிலான குறியீட்டு ஓவியங்கள் ஆகியன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

கலைஞர்கள், அரசியல்வாதிகள் போன்றவர்களது பிரதிமை ஓவியங்கள் மக்களது வாழ்வியலைப் பிரதிபலிக்கும் ஓவியங்கள் என 36 ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. போர் தந்த வடுக்களைப் பிரதிபலிக்கின்ற வகையிலும், கடந்தகால பசுமை நிறைந்த வாழ்வியலை நினைவுபடுத்துகின்ற வகையிலும், இந்த ஓவியங்கள் படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஓவியத்துறை ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர், தன்னிடம் கற்கின்ற மாணவர்களது ஓவியங்களின் தொகுப்பை இரண்டு ஆண்டுக்கு ஒருதடவை ஓவியக்கண்காட்சியாக வெளிப்படுத்தி வருகின்றார். மேலும் நீண்ட கற்பித்தல் அனுபவமும், படைப்பியல் அனுபவத்தின் முதிர்ச்சியும் இவரது ஓவியங்களது ஊடுவெளிகளில் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.






## நூல் அறிமுக நிகழ்வு

கடந்த புதன்கிழமை தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெற்ற "செ.கதிர்காமநாதனின் படைப்புக்கள்" என்ற நூலின் அறிமுக நிகழ்வில் எழுத்தாளர்களான க. தணிகாசலம், ஐ. சாந்தன், கரவெட்டி பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, த.அஜந்தகுமார், சட்டநாதன், சிவகரன் ஆகியோரும், பெருமளவு பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு சிற்பி ஒரு கல்லை கடவுள் சிலையாக்குகிறார். இதில் கற்சிலை என்பது கர்மம். சிலையில் மந்திர ஆவாகனம் செய்து அதை தெய்வமாக்குவது கர்மயோகம். வினோபா அடிகள் கர்ம யோகத்துக்கு அற்புதமான ஒரு விளக்கம் தந்திருக்கிறார். கர்மத்தைச் செய்யும்போது எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராமல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவனுக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தும் அவன் கேட்கும் முன்பே வந்து சேரும் என்கிறார் அவர்.**



# நாம் வாழ வழி காட்டும்

## கீதையின் கர்ம யோகம்

அராலியூர் கலாபூசணம்
வ.செல்வரத்தினம்

வாழ்க்கையில் அடிப்படை வசதிகளைத் தேடி நிம்மதியாக வாழ கீதையில் கர்மயோகத்தில் நாலு வழி சொல்லப்பட்டிருக்கிறது.

அவையாவன :

முதலாவது மனிதனுக்குச் செயலாற்றும் திறமை மிகவும் அவசியம். இதை எமது இந்து மதம் இறைவன் தரும் பிரசாதமாகவே கருதுகிறது.

ஒரு மனிதன் செயலாற்றுவதற்குரிய ஊனமில்லாத உடம்பு அமைப்புடன் பிறக்க வேண்டும். பிறந்த பின்பும் நோய் நொடி இல்லாமல் வளர வேண்டும். வளர்ந்த பிறகும் செயலாற்றுவதற்குத் தேவையான அறிவையும், திறமையையும், உடல் பலத்தையும் பெறவேண்டும். இவ்வளவும் இருந்த பிறகும் மனதில் நல்ல காரியங்களையே செய்ய வேண்டும் என்ற சிந்தனை இருக்க வேண்டும். இவையாவும் இறைவன் அருளால் நாம் பெற வேண்டியவைகளே.

இரண்டாவது:

நாம் செய்யும் காரியங்களை, மகிழ்ச்சியுடனும் ஊக்கத்துடனும் நன்கு செய்ய வேண்டும். அத்துடன் செய்யும் காரியங்கள் தவறில்லாமலும் கணக்குப் பிசகாமலும் இருக்க வேண்டும்.

மேலும் அவை குறித்த காலத்திலும் சீராக செய்ய வேண்டும். மேலும் நாம் செய்யும் காரியங்கள் அதிக செலவுமில்லாமல் நல்ல முறையில் ஓரளவு புதுமையாகவும் இருக்க வேண்டும்.

மூன்றாவது:

நாம் செய்யும் காரியங்களில் பற்றில்லாத ஆன்மிக மனப்பான்மையாக இருக்க வேண்டும். சாதாரன மனிதன் தனக்காகவும் தன் குடும்பத்துக்காகவும் மட்டுமே உழைக்கிறான். ஆனால் சமூகத்துக்காகவும் பாடுபடுபவர்களே புகழ் பெறுகிறார்கள்.

நீ எதைச் செய்தாலும் எதை உண்டாலும், எதைக் கொடுத்தாலும், எதைச் சிக்கன மாக சீராகச் செய்ய முற்பட்டாலும், அதை எனக்கு அர்ப்பணமாக வைக் கும் மனப்பான்மை உனக்கு இருக்க வேண்டும் என்று பகவான் கிருஷ்ணர் பார்த்தனிடம் கூறியிருக்கிறார்.

நான்காவது:

நமக்கு இறைவன் கொடுத்த செயல் வேகக் திறமையும், இறைவனின் படைப்பாக உலகில் இருக்கும் உயிரினங்களுக்குப் பயன்பட வேண்டும். அதாவது நமது காரியங்களால் செய்யும் பயனை எல்லோரும் பகிர்ந்து நன்மைகளை பெறும்படி அமைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் சில எடுத்துக் காட்டு,

நாமே சமைத்து நாம் மட்டும் தனித்துச் சாப்பிடுவது கர்மம். சமைத்த உணவை மற்றவர்களுக்கு சந்தோத்துடன் கொடுத்துச் சாப்பிடுவது கர்மயோகம். பணத்தைத் திரட்டி வங்கியில் போட்டு வைப்பது கர்மம். அந்தப் பணத்தைப் பிறருக்கு உதவும் வகையில் செலவிடுவது கர்மயோகம்.

ஒரு சிற்பி ஒரு கல்லை கடவுள் சிலையாக்குகிறார். இதில் கற்சிலை என்பது கர்மம். சிலையில் மந்திர ஆவாகனம் செய்து அதை தெய்வமாக்குவது கர்மயோகம். வினோபா அடிகள் கர்மயோகத்துக்கு அற்புதமான ஒரு விளக்கம் தந்திருக்கிறார்.

கர்மத்தை செய்யும்போது எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராமல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவனுக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தும் அவன்கேட்கும்முன்பேவந்து சேரும் என்கிறார் அவர்.

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு, என்று திருவள்ளுவர் கர்மயோகத்தைப் பற்றி சொல்லுகிறார்.

உங்கள் கைகள் சமுதாயத்துக்கு உதவட்டும் உங்கள் தலை இறைவன் திருவடிகளில் பதியட்டும் என்பது கர்மவீரர் சுவாமி விவேகானதரின் வாக்கு.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவனுக்கு என்று, உயிர் குலத்துக்கு என்று அர்ப்பணிக்கும்போது அது கர்மயோகமாகி விடுகிறது.

காரியம் என்பது வெறும் கர்மம். காரியத்தில் உள்ள மனோபாவனை உள்ளக் கனிவு காரியத்தை விட முக்கியமாகிறது. அப்போது அது கர்மயோகமாகிறது.

கர்மயோகம் என்பது கடமை, அதை வரையறை செய்தவர் எவருமில்லை.

இல்லறத்தானின் கடமை தாய் தந்தையைப் பேணுவது, மனைவியைக் காப்பது, சுற்றத்தாரைப் பேணுவது, விருந் தோம்புவது என்று வேதம் கூறுகிறது. கடமையில் உயர்வு தாழ்வு பார்க்காமல், பயன் கருதாமல் தெய்வ கர்மத்தை செய்தால் அது கர்மயோகமாகிறது.

மகாகவி பாரதியார் எழுத்து தெய்வம்! எழுது கோலும் தெய்வம் என்கிறார் . பாரதியார் ஆற்றி வந்த பணியைக் கர்மயோகமாகவே செய்து வந்தார்.

கர்மயோகி பயனைக் கருதாமல் இருந்து விடுவதால் அளவில் அடங்காத புனிதமான பயனைப் பெறுகிறார்.

கர்மயோகியின் வேலையால் இன்றும் ஒரு சிறந்த பயனும் வருகிறது. அதாவது சமூகத்துக்கு அது ஒரு எடுத்துக் காட்டாக அமைகிறது. சமூகத்திலிருந்து ஆடம்பரமும், மோசடியும் நீங்க உதவுகிறது.

எனவே எல்லோரும் கர்மயோகியாக வாழ வேண்டும்.



ஒரு மனிதன் செயலாற்றுவதற்குரிய ஊனமில்லாத உடம்பு அமைப்புடன் பிறக்க வேண்டும். பிறந்த பின்பும் நோய் நொடி இல்லாமல் வளர வேண்டும். வளர்ந்த பிறகும் செயலாற்றுவதற்குத் தேவையான அறிவையும், திறமையையும், உடற்பலத்தையும் பெற வேண்டும். இவ்வளவும் இருந்த பிறகும் மனதில் நல்ல காரியங்களையே செய்ய வேண்டும் என்ற சிந்தனை இருக்க வேண்டும். இவை யாவும்இறைவன்அருளால்நாம்பெறவேண்டியவைகளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொழும்பு | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 80 | 120 | 80 | 40 | – | 30 |
| கத்தரி | 160 | 120 | 140 | 140 | 120 | 100 | – | 70 |
| கரட் | 200 | 240 | 260 | 180 | 200 | 200 | – | 140 |
| மரவள்ளி | 120 | 90 | 100 | 80 | 100 | 100 | – | 50 |
| பயிற்றை | 140 | 120 | 180 | 120 | 160 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 250 | 240 | 200 | 220 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 180 | – | 140 | 160 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 90 | 90 | 80 | 100 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 140 | 120 | – | 100 |
| பூசணி | 150 | 140 | 160 | 140 | 160 | 140 | – | 130 |
| தக்காளி | 200 | 200 | 220 | 260 | 180 | 250 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 120 | 120 | 80 | – | 50 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 20 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 800 | 600 | 600 | 600 | – | 600 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 | 80 | 60 | – | 60 |
| கோவா | 150 | 140 | 180 | 120 | 140 | 180 | – | 120 |
| வெண்டி | 120 | 80 | 100 | 120 | 100 | 80 | – | 60 |
| போஞ்சி | 200 | 160 | 160 | 240 | 200 | 180 | – | 140 |
| லீக்ஸ் | 170 | 160 | 150 | 240 | 160 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 40 | 40 | 25–30 | 30 | 30 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 80 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 150 | 150 | 160 | 160 | 140 | 80 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 250 | 240 | 300 | – | 240 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 300 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 450 | 280 | 280 | 600 | – | 300 |



## பின்னல் தொப்பி

இது புதுசு

பெரிய பின்னல் தொப்பிகள் அறிமுகமாகியுள்ளன. பல் வேறு நிறங்களிலும், டிசைன்களிலும் இவை விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 300 ரூபா தொடக்கம் 350 ரூபா வரையிலாகும்.

## கருவாட்டு சம்பல்



தேவையான பொருள்கள்
துண்டுக்கருவாடு – 4 துண்டுகள்
பச்சை மிளகாய் – 3
வெங்காயம் – 8
தேசிக்காய் – பாதி

### செய்முறை

கருவாட்டுத் துண்டுகளை நெருப்புத் தணலில் சுடவேண்டும். சுட்ட பின்னர் கருவாட்டின் தோல் என்பவற்றை அகற்ற வேண்டும். பின்னர் கருவாட்டில் முட்களை நீக்கவேண்டும். நறுக்கி வைத்துள்ள பச்சை மிளகாய், வெங்காயம் என்பவற்றை முட்கள் நீக்கப்பட்ட கருவாட்டுடன் சேர்த்து இலேசாகப் பிசையவேண்டும். பின்னர் சுவைக்கு தேசிக்காய்ச் சாறு சேர்த்து பரிமாறலாம். சில நிமிடங்களில் இதனைத் தயாரிக்க முடியும்.



## தெரியாதவை

- நறுக்கி வைத்த வெங்காயத்தில் சிறிதளவு வெண்ணெய் கலந்து வைத்தால் நீண்ட நேரம் பிரஷ்ஷாக இருக்கும்.
- தேங்காய் முடியைத் தண்ணீரில் வைத்தால் அல்லது முடியில் சிறிது உப்பைத் தடவி வைத்தால் கெடாமல் இருக்கும்.
- நகைகளைப் பஞ்சில் சுற்றி வைத்தால் புதுப்பொலிவுடன் இருக்கும்.
- வீட்டு ஜன்னல்களுக்குக் கரும் பச்சை, கருநீலத்தினால் ஆன திரைச் சீலைகளைப் பயன்படுத்தினால் வெயிலின் உஷ்ணம் உள்ளே வராது.
- சமைக்கும்போது எரிபொருள் சிக்கனம் செய்ய வேண்டும். கீரையைத் தவிர எது சமைத்தாலும் பாத்திரத்தை மூடி வையுங்கள்.
- சமையலறையிலுள்ள பாத்திரம் கழுவும் தொட்டியைச் சுத்தப் படுத்த, பழைய செய்தித்தாள்களைக் கொண்டு தேய்த்தால் அழுக்கு நீங்கி சுத்தமாக இருக்கும்.
- கத்தியைச் சூடாக்கி ரொட்டியை வெட்டினால் பிசிறு இல்லாமல் நினைத்த படி வெட்டலாம்.
- மீன் பாத்திரத்தில் மீன் வாடை இருந்தால் சீயக்காய்த் தூளையும், புளியையும் சேர்த்துப் பாத்திரத்தைத் துலக்கினால் மீன் வாடை போய்விடும்.
- எலுமிச்சம்பழம் உலர்ந்து விட்டால் கொதிநீரில் ஐந்து நிமிடம் போட்டு பிறகு சாறு பிழிந்தால் நிறையச் சாறு கிடைக்கும்.

## நாளை

ஆனி-30
வியாழக்கிழமை
-14.07.2016
திதி: தசமி
பி.இ.12.31 வரை
நட்சத்திரம்: சுவாதி
கா.07.52
ராகுகாலம்:
07.30-09.00 வரை

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 150 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 550 | 410 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 1000 | 600 |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 500 | 300 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 450 | 500 | 420 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 150 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 150 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 200 | 160 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 500 | 700 | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 500 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 400 | – | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறைச் சரி செய்வீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிரியால் இருந்த தொல்லை குறையும்.

**இடபம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். நண்பர்களிடம் சந்தோசத்தை பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிப்பதால், சேமிப்பு உயரும்.

**மிதுனம்:** மனதில் சஞ்சலம் ஏற்படலாம். பெற்றோர் ஆலோசனையால் பிரச்சினை தீரும். தொழில், வியாபாரத்தில் உள்ள நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது அவசியம். குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. பாதுகாப்பு குறைந்த இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**சிங்கம்:** கடந்த கால உழைப்புக்கு நற்பலன் பெறுவீர்கள். தொழிலில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.

**கன்னி:** பொறுப்புணர்வுடன் பணியாற்றி வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். முக்கிய தேவைக்காக கடன் பெற நேரிடலாம். நேரத்திற்கு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும்.

**துலாம்:** நண்பரிடம் அன்பு பாராட்டி மகிழ்வீர்கள். தொழிலில் குறிப்பிட்ட வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். உபரி வருமானம் வந்து சேரும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்:** சிறு செயல் கூட கடினமாக தோன்றலாம். கூடுதல் உழைப்பு, தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மையை பாதுகாக்கும். மிதமான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**தனுசு:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபார நடைமுறையில் இருந்த மந்தகதி விலகும். வருமானம் படிப்படியாக உயரும். பயனுள்ள பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** நட்பின் பெருமையை எண்ணி மகிழ்வீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.

**கும்பம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மீனம்:** வழக்கத்துக்கு மாறான பணி உருவாகி, தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான, மூலதனம் போதும். இலாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்களுக்குப் பாதுகாப்பில் கவனம் தேவை.

ஒரு கணவனும் மனைவியும் துணிக் கடையில் மின்தூக்கியில் மாடிக்குச் சென்றார்கள். ஒரு அழகிய பெண்ணும் அதிலேயே வந்தாள். கணவன் அழகிய பெண்ணை ஒட்டியவாறு நிற்க, திடீரென அழகி அவனை அறைந்தாள். கணவன் அதிர்ச்சியடைந்து "ஏன் இப்ப அறைஞ்சே..?" என்று கேட்க "எதுக்கு என் இடுப்பை கிள்ளினே..?" என்றாள். கணவனுக்கோ ஒன்றும் புரியல. மனைவிக்கு முன் இப்படி நடந்து விட்டதே என்று அவமானம். அதோட பயங்கர குழப்பம் வேற, மின்தூக்கி நின்று எல்லோரும் வெளியேற மனைவி குசுகுசுன்னு சொன்னாள், "அதையே யோசிச்சுட்டு இருக்காதீங்க. உங்க ஜொள்ளைப் பார்த்து எரிச்சல்ல, நான்தான் அவளைக் கிள்ளினேன்."



# தமிழ் சினிமாவில் அறிமுகமாகிறார் மோனிகா சிவா

குழந்தை நட்சத்திரங்களாக நடித்த பலர் எதிர்காலத்தில் பெரிய நட்சத்திரங்களாகியுள்ளனர். இதற்கு கமல்ஹாசன், ஸ்ரீதேவி, விஜய், சிம்பு, ஷாலினி, ஷாமிலி எனப் பலரை உதாரணமாகச் சொல்லலாம். இந்த வரிசையில் மற்றுமொரு குழந்தை நட்சத்திரம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகிறார். அவர் பெயர் மோனிகா சிவா. சென்னையில் படித்து வரும் மோனிகா சிவா தற்போது விஜய்யின் 60, சங்கு சக்கரம், சிபிராஜின் கட்டப்பாவை காணோம், ஜெய்யுடன் ஒரு படம், சித்தார்த் நடிக்கும் ஒரு படம் எனப் பல படங்களில் நடித்து வருகிறார். மோனிகாவிடம், விஜய் 60 படத்தில் "யாருக்கு மகளாக நடிக்கிறேன்" என்று கேட்டால், உதட்டின் மீது விரல் வைத்து உஷ்; சொல்லக்கூடாது என்று சஸ்பென்ஸ் தருகிறார்!

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 4 | | | | | |
| 4 | | | | 7 | 9 | 2 | | |
| 7 | 5 | | | 1 | | 4 | | |
| 2 | | 3 | | | | | | |
| | | | 8 | | 5 | | | |
| | | | | | | 7 | | 3 |
| | | 1 | | 4 | | | 8 | 5 |
| | | 5 | 6 | 9 | | | | 7 |
| | | | | | 3 | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 1 | 7 | 3 | 6 | 9 | 5 |
| 3 | 7 | 9 | 5 | 6 | 2 | 1 | 8 | 4 |
| 6 | 5 | 1 | 8 | 4 | 9 | 3 | 2 | 7 |
| 2 | 6 | 3 | 7 | 1 | 4 | 9 | 5 | 8 |
| 1 | 4 | 5 | 6 | 9 | 8 | 2 | 7 | 3 |
| 7 | 9 | 8 | 3 | 2 | 5 | 4 | 6 | 1 |
| 5 | 8 | 6 | 9 | 3 | 1 | 7 | 4 | 2 |
| 9 | 1 | 2 | 4 | 5 | 7 | 8 | 3 | 6 |
| 4 | 3 | 7 | 2 | 8 | 6 | 5 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச்சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## செல்லக்குழந்தை

முன்னேற்றத்தை நோக்கி நாம் ஒரு அடி எடுத்து வைத்து முன்னேறினால், ஏமாற்றம் எம்மை இரண்டடி இழுத்துக் கொள்கிறது தன்வசம்.



பசுவின் கோமயத்தில் தங்கம் உள்ளது.

செய்தி

இந்தா சேட்டு, இந்த ஒரு லீற்றர் கோமயத்தை வச்சிக்கிட்டு ஒரு ஆயிரம் ரூபா குடு.



ஒரு பிளேட்டுக்கு ஆறு பானிப் பூரி குடுப்பான், இன்றைக்கு அஞ்சுதான் குடுத்தான். என்னெண்டு கேட்குறதுக்கு ஹிந்தி தெரியல, அதனால பேசாம, வந்துட்டன்



கணவன்: பசிக்குதடி... சாப்பாடு ரெடியா?
மனைவி: கொஞ்சம் இருங்க, போட்டோ எடுத்து முகநூலில போட்டிட்டு வாறன்.
(சிறிது நேரம் கழித்து)
கணவன்: என்னடி... சாப்பாடு நல்லாவே இல்லை.
மனைவி: நல்லா இல்லையா! 100 லைக் விழுந்திருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாம்பல்

இன்று காலையிலிருந்து (நேற்று) பொலிஸ் பாதுகாப்புடன் விகாரை அமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்" என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் சுரேஷ் தெரிவித்தார்.

திருகோணமலை – முல்லைத்தீவு முதன்மை வீதியில், நகரிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் சாம்பல் தீவு உள்ளது. இந்தப் பகுதி உட்பட சுற்றியுள்ள கிராமங்கள் அனைத்தும் தமிழ் மக்கள் பரம்பரையாக வாழ்ந்து வரும் பகுதிகள். புத்தர் சிலை வைக்கப்படும் இடத்திலிருந்து நூறு மீற்றர் தொலைவில் லக்சுமி நாராயணன் கோயில் அமைந்துள்ளது. புல்லைக்குளம் பாலத்தின் அருகில் 20 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரின் சோதனைச் சாவடி அமைந்திருந்தது. இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த காலப் பகுதியில் அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையை வைத்து வழிபாடு நடத்தி வந்தனர். இராணுவத்தினர் கடந்த மாதம் 10ஆம் திகதி அங்கிருந்து வெளியேறினர். தமது முகாம்களை அகற்றிக் கொண்டு செல்லும் போது, புத்தர்சிலையையும் கூடவே எடுத்துச் சென்றனர்.

புத்தர் சிலை இருந்த இடத்தில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தப்பட்டு வந்தன. மறுநாள் காலையில் பிள்ளையார் சிலை அடித்து நொறுக்கப்பட்டிருந்தது. கடந்த 9ஆம் திகதி மீளவும் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டது. அந்தச் சிலையும் இனந்தெரியாதோரால் உடைத்து அகற்றப்பட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தர் சிலை இருந்த அரச மரம் இனந்தெரியாதோரினால் தறித்து வீழ்த்தப்பட்டது. வெற்றிடமாக்கப்பட்ட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் 4 அடி புத்தர் சிலை நிறுவப்பட்டது. கொழும்பு மற்றும் கண்டியிலிருந்து வருகை தந்த பௌத்த பிக்குகளும், திருகோணமலையிலுள்ள பெரும்பான்மையினத்தவர்களும் ஒன்றுதிரண்டு சிலையை நிறுவினர். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இந்தச் சிலையை நிறுவும் பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தப் பகுதியில் பௌத்த கொடிகளையும் கட்டி பெரும் எடுப்பில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

அந்தப்பகுதியிலுள்ள தமிழர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் பொலிஸாரின் பாதுகாப்புடன் சிலை நிறுவும் நடவடிக்கைகள் எந்தத் தடங்கலும் இல்லாமல் முன்னெடுக்கப்பட்டன. நேற்றுக் காலை புத்தர் சிலை நிறுவப்பட்ட பகுதியில் விகாரை நிர்மாணிக்கும் பணிகளும் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டன. நிலாவெளிப் பொலிஸாரின் தொடர் பாதுகாப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

"விகாரை நிர்மாணிப்புக்கு பட்டணமும் சூழலும் பிரதேச சபையிடம் அனுமதி பெறப்படவில்லை. ஆனால் பிரதேசசபைச் செயலாளர் இந்த நடவடிக்கைக்கு எதிராக எதுவும் மேற்கொள்ளவில்லை" என்று முன்னாள் உப தவிசாளர் சுரேஷ் குற்றம் சுமத்தினார்.

பொலிஸ் பாதுகாப்புடன் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கையை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தும் சுரேஷ், இந்த விவகாரம் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கு தெரியப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி இரவோடு இரவாக திருகோணமலை பஸ் நிலையப் பகுதியில் புத்தர் சிலை ஒன்றை பெரும்பான்மை இனத்தவர்க்ள் நிறுவியதால், பெரும் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது. இப்போது அதேபோன்றதொரு நிலை மீண்டும் ஏற்பட்டுள்ளது.

(வ-5)

## பன்னாட்டு

தீர்மானத்தில் இந்த விவகாரம் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. தீர்மானத்தின் செயற்படு பந்தி ஆறில், போர்க்குற்ற விசாரணையில் பொது நலவாய மற்றும் ஏனைய நாடுகளின் நீதிபதிகள், பன்னாட்டு வழக்குத் தொடுநர்கள், பன்னாட்டு விசாரணையாளர்கள், பன்னாட்டுச் சட்டத்தரணிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. இதனைவிடப் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை கலப்பு நீதிமன்றப் பொறிமுறையாக இருக்கவேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் பரிந்துரைத்தார். அந்தப் பரிந்துரையை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த ஊக்குவிப்பதாக இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேறிய தீர்மானத்தின் முதலாவது செயற்படு பந்தி கூறுகின்றது.

இவை இரண்டும் தெளிவாகப் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பைத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றை ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்துவதாகத் தெரிவித்து, தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணையும் வழங்கியது. இப்போது அதனை மறுப்பதானது, தீர்மானத்தை ஒரு தலைப்பட்சமாக மீறும் செயற்பாடு – என்றார். (வ-5)

## மக்களுக்கு

வடக்கு மாகாண வாழ்வாதார அபிவிருத்திநியதிச்சட்ட வரைவை அமைச்சர் த.குருகுலராஜா முன்வைத்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வழங்கல், அதனை ஒருங்கிணைத்தலை நோக்காகக்கொண்டுதயாரிக்கப்பட்டது இந்த நியதிச்சட்டம் என்று அமைச்சர் கூறினார். பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான உதவிகள் வழங்கல் இதில் முன்னிலைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த நியதிச் சட்டத்தின் ஊடாக உதவிகள்வழங்குவதற்கு மாகாண சபையின் நிதி பயன்படுத்தப்படும் எனச் சட்ட வரைவில் குறிப்பிடப் பட்டுள்ளது. (வ-5)

## ஓகஸ்ட்

முறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வற் வரி அதிகரிக்கப்படாதுள்ள நிலையிலும், எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ள நிலையிலும் பஸ் கட்டணங்களை 6 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான அனுமதியை அரசு வழங்கியது.

ஆகக் குறைந்த கட்டணம் 8 ரூபாவிலிருந்து 9 ரூபாவாக அதிகரிக்கப்படுவதுடன், ஏனைய கட்டணங்களும் 6 சதவீதம் அதிகரிக்கப்படும். போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

வருடாந்த கட்டண திருத்தத்திற்கு அமைவாக நிபுணர் குழுவினரால் அதிகரிப்பு வீதம் தயாரிக்கப்பட்டதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது. (வ-4)

பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. குணசிங்கம்
லெனின்குமார்
B.A. Dip in Teach,
PGDE, SLPS III
கடந்த 17.06.2016 அன்று கொழும்பு
டி.எஸ். சேனநாயக்கா கல்லூரியில்
கௌரவ கல்வி அமைச்சர்
அகிலவிராஜ் காரியவசம்
அவர்களிடம் அதிபர் தரம் III
பதவிக்கான நியமனத்தினை பெற்றுக்
கொண்ட எமது ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அங்கத்தவரும்
விளையாட்டு வீரனும் ஆகிய குணசிங்கம் லெனின்குமார்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர்வுகளைப்
பெற்று நீடூழிகாலம் வாழ வாழ்த்துகிறோம்.
வாழ்த்துவோர்: ஸ்ரான்லி விளையாட்டுக் கழக நிர்வாகம்
அங்கத்தவர்கள், விளையாட்டு வீரர்கள் (ஜே.2861) (13.16)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

யாழ். இந்துக் கல்லூரியில் 2016 ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ.உயர்தர பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களுக்கான அனுமதி அட்டை நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு வழங்கப்படவுள்ளது என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

அனுமதி அட்டை பெற வரும் மாணவர்கள் சீருடையுடனும் பெற்றோருடனும் வர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

**TV கள் மலிவு விற்பனை**

Sony wega Flat TV கள் 14" -7000/=
21"-10000/= முதல்.
25" - 17000/=, 29"- 19000/=
தொடர்பு: 077 044 0570
சோனி ரேற் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56,K.K.S. வீதி,சுன்னாகம்.

**சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆள்சேர்ப்பு**

**யாழ்.மாவட்ட சென்.ஜோன் அம்புலன்ஸில் கீழ்க்குறிப்பிடும் சேவைகளுக்கு ஆள்சேர்ப்பு**

1. **அம்புலன்ஸ் சாரதி** (A தர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அவசியம்)
2. **ஆண், பெண்** நோயாளர் பராமரிப்புத் தொண்டர்கள் (ஆண், பெண் தொண்டர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1500/= ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது.)
3. எழுதுவினைஞர் (கணினி அனுபவம் அவசியம்)

தகுதியானோர் உரிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் **செவ்வாய்க்கிழமை 19.07.2016 பிற்பகல் 3 மணிக்கு இல.161. முதலாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் அமைந்துள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்துக்கு சமுகம் தரவும்.

மேலதிக விபரங்களுக்கு அவசர அம்புலன்ஸ் சேவை தொ.பே.இல:
**021 321 4444**

மாவட்ட ஆணையாளர், சென்ஜோன் அம்புலன்ஸ், யாழ்.மாவட்டம்.

**80GSM FSC PHOTO COPY PAPER CLEARANCE**

**ONLY Rs.420/- (Wholesale Only)**




**Pettah: 2323057, 2435073**

## வட மாகாண

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடு களையும் அந்தக் குழு விசாரணை செய்யும் வகையில் பிரேரணையில் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட வேண் டும்" என்று ஆளும் கட்சி உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார்.

"வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் பற்றிப் பல முறைப்பாடுகள் பொதுமக்கள், அமைப்புக்கள், சபை உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கின்றன. இவை தொடர்பாக ஆராய்ந்து - விசாரித்து, அவற்றின் உண்மைத் தன்மையைக் கண்டறிவதற்கும், அது தொடர்பில் எடுக்கக்கூடிய மேல் நடவடிக்கைகள் பற்றி விதந்துரைப்பதற்கும் விசாரணைக்குழு அமைக்கப்படவேண்டும்.

ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருவரையும், ஓய்வு பெற்ற இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த மூத்த உத்தியோகத்தர் ஒருவரையும் விசாரணைக்குழுவில் நியமிக்கவேண்டும். அவர்களால் கண்டறியப்பட்டு அறிக்கையிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேல் நடவடிக்கை எடுப்பதற்கும், இந்த விசாரணைக் குழுவுக்குத் தேவையான நிதி, நிர்வாக நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கும் முதலமைச்சருக்கு சபை அனுமதியளிக்கின்றது" என்று பிரேரணையில் தெரிவிக்கப்பட்டது.

சபைக்கு முதலமைச்சர் நேற்று வருகை தரவில்லை. இந்தப் பிரேரணையை முதலமைச்சருக்குப் பதிலாக கல்வி அமைச்சர் த.குருகுலராஜா சபையில் முன்வைக்கத் திட்டம் இருந்து. அதற்கு முன்பாக பிரேரணை தொடர்பில் சபை நடவடிக்கைக் குழுவில் ஆராயப்பட்டது.

அதன் பின்னர் சபை அமர்வில் இந்தப் பிரேரணை தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் த.குருகுலராஜா, "சபை நடவடிக்கைக் குழுவில் பிரேரணை பற்றிப் பேசப்பட்டது. உறுப்பினர்களின் சிறப்புரிமையைப் பிரேரணை மீறுவதாக இருப்பது குறித்துக் கரிசனை காட்டப்பட்டது. எனவே அது குறித்து கலந்துரையாடிய பின்னர் அடுத்த அமர்வில் முன்வைக்கலாம்" என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், "முதலமைச்சர் தொடர்பில் சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களையும், இந்தக் குழு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு நம்பிக்கை வரும்" எனத் தெரிவித்தார்.

"உறுப்பினர்களை விசாரணை செய்வதற்கு முதலமைச்சருக்கு எந்தச் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டது? மாகாண சபையின் எந்தச் சட்டத்தினூடாக இதனைச் செய்ய முற்படுகின்றார்?" என்று ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

"உறுப்பினர்கள் மீது கட்சிதான் நடவடிக்கை எடுக்க முடியும். நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நாடாளுமன்ற தெரிவுக் குழு தான் விசாரணை செய்யமுடியும். வெளியார் யாரும் செய்ய முடியாது. மேலும் இந்த விசாரணைகளை முதலமைச்சர் செய்வதே பொருத்தமானதாக இருக்கும். அவர் நீதியரசராக இருந்தவர்" என்றார் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்.

இதனை அடுத்துப் பிரேரணை நேற்றைய அமர்வில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. (வ-5)

## தாண்டிக்குளம்தான்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அறிவித்தார் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்.

வடக்கு மாகாண சபையின் 56ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, உறுப்பினர் ஜெயதிலக எழுப்பிய விடயத்தை சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

"எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில், உறுப்பினர் ஜெயதிலக மேற்கொண்ட முறைப்பாட்டை சபையில் தெரிவிக்கின்றேன். வவுனியா பொருளாதார வலயம் தொடர்பாகச் சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதற்குப் புறம்பாகக் கட்சி ரீதியிலான வாக்களிப்பு இடம்பெற்றது. இதில் இந்தச் சபையின் உறுப்பினர் முழுமையாகப் பங்குபற்றவில்லை. சபையில் எடுக்கப்படும் தீர்மானம் தொடர்பில் கட்சி ரீதியில் ஆராய்ந்து எவ்வாறு முடிவெடுக்க முடியும். சபையில் எடுக்கும் முடிவுகளை கட்சி ரீதியாக ஆராய்ந்து மாற்ற முடியுமா?" என்றார் தவராசா.

அவைத் தலைவர் பதில் வழங்கினார். "சபையில் எடுக்கப்படுகின்ற தீர்மானமேவலுவானது. சபையின் நடைமுறை விதி 66 (1), (2) அடிப்படையில், சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீண்டும் பரிசீலிக்கவோ, மேல் தீர்மானம் எடுக்கவோ முடியாது. சபைக்கு வெளியே நடக்கின்ற நடவடிக்கைகள் சபையைப் பாதிக்காது" - என்றார் அவைத் தலைவர்.

"சபைக்கு வெளியில் எடுக்கப்படும் முடிவுகள் சபைக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் நிலை இருக்கின்றதா?" என்று கேள்வி எழுப்பினார் ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன். அதற்கு அவைத் தலைவர், "சபைக்குத் தெரிவிக்கப்படவில்லை. சபை முடிவே இறுதியானது" - என்றார். (வ-5)

## கேள்விகோருதல்
## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. தலைவர், மாவட்டசெயலகபெறுகைக் குழு சார்பில் மாவட்டசெயலகம் யாழ்ப்பாணம், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளிற்கான, தற்போதுதகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடுசெய்யப்பபட்ட கேள்விகளைகோருகின்றனர்.

2. கேள்வியானது தேசியபோட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), வீதி நிர்மாணிப்பதற்கு C 8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தினைக்கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016 இற்கு அமைவாக இவ் விலைமனுக்கோரலானது தகுந்த வியாபாரஅல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. அக்கறைகொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்டதிட்டமிடல் செயலகத்தில் (தொலைபேசி இல. 021 222 2427) பெற்றுக்கொள்ளலாம் எனபதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 மணிவரைஅலுவலக நாள்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்

5. அக்கறைகொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணதொகுதி ஒன்றினை **மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம்**. என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து 13.07.2016 முதல் 02.08.2016 வரை 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபாஆயிரம் (ரூபா 1000.00)பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளமுடியும்.

6.கேள்விகள் 03.08.2016 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்குமுன்னர் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்டசெயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்படவேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகைதந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படிமுகவரியில் கேள்விகோரல் முடிவுற்ற உடனே யேதிறக்கப்படும்.

7.கேள்வி தொடர்பான முற்கேள்விச் சபைக் கூட்டம் மாவட்டசெயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 27.07.2016 அன்று 15:00 மணிக்குநடைபெறும்.

| இல | கேள்விஅடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணைவிபரம். | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 01 | JF/DPS/Pro./IDB/VI/05/2016. | காமாட்சிஅம்பாள் இரும்புத் தொழிற்சாலைபுனரமைப்பு | 2.38 | C8 | 23,850.00 | 03.12.2016 | 120 days |

நா. வேதநாயகன்,
அரசஅதிபர் /மாவட்டச் செயலாளர்,
யாழ் மாவட்டம்.

**பொதுக்கூட்ட அழைப்பு**

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர்சபை ஆண்டுப் பொதுக்கூட்டம் 24.07.2016 பிற்பகல் 5 மணிக்கு தொண்டர்சபை காரியாலயத்தில் இடம்பெறும். அங்கத்தவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
தொண்டர் சபை.

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் மூக சீராக்கல் (Consultant Orthodontist)
- மூக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## போதனை சாரா ஊழியர்கள் போராட்டம்

யாழ்.பல்கலைக் கழகம் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் போதனை சாரா ஊழியர்கள் 6 அம்சங்களை முன்வைத்து இன்றும் நாளையும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். இன்று கொழும்பில் ஊர்வலமும், கண்டனஆர்ப்பாட்டமும் நாளை நாடளாவிய ரீதியிலுள்ள பல்கலைக் கழகங்களில் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப் படும். (வ-4)




## மரண அறிவித்தல்

### மணியம் கேதீஸ்வரநாதன் (தொழில்நுட்பக் கல்லூரி ஊழியர்)



புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மணியம் கேதீஸ்வரநாதன் 11.07.2016 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மணியம் மற்றும் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், கந்தசாமி - மாணிக்கம் தம்பதி களின் அன்பு மருமகனும், அமிர்த கௌரியின் (புனித தெரேசா மகளிர் கல்லூரி - அச்சுவேலி) பாசமிகு கணவரும், தனுசியன் (பிரான்ஸ்), டயானா (நோர்வே), நிரூஜிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவயோகநாதன் (ஜேர்மனி), தெய்வேந்திரநாதன், ரவீந்திரநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2016) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திராணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு,புத்தூர்.

(J/2870)
(11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

077 224 7816

## மரண அறிவித்தல்



### சின்னப்பா செல்லத்துரை

கணபதியப்புலம், கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா செல்லத்துரை நேற்று (12.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்தளான சின்னப்பா-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்பாபிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவசோதி, இராஜேஸ்வரி, சத்தியசோதி, சந்திராதேவி, வசந்தாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகாதேவன் (சந்திரன்) மற்றும் ஸ்ரீகாந்தசெல்வம் (ஸ்ரீ), சிவலோகநாதன் (கிச்சி), குபேந்திரசிங்கம் (இந்திரன்) ஆகியோரின் மாமனாரும், றஜினா-மனோரஞ்சன், சுகிதா-குகதாஸ், சாந்தினி, கவிதா-தவபாலன், நவநீதா-கிருபாகரன், சோபா-காண்டீபன், யசோதா,ரவீந்திரா, சத்தியசீலன், சர்மிளா, தயாபரன், யாமினி-சுரேஸ்குமார், கிருபா-இராஜகாந்தன், தனுசா பிரதீப், சகிலா-சிவதாசன், பிரியதர்சன், பிரியதர்சினி ஆகியோரின் பேரனும், வைஸ்ணபவன், ஜிந்துயா, டிலக்சன், யான்சிகா, ஜானுசன், அபிரன், அபிஷா, அபிசன், சாருகா, சாரங்கா சஞ்சீவ், சிவலக்சன், பிரியங்கா, தரணிகா, சதுர்சிகன், மதுசாலினி பன்சிகா, யுவேக்கா, பவிசாந், அனோஜிகா, அபினுகா, யதுர்சிகா, பிறின்சிகா, தனுப்பிரியா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2016) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணபதியப்புலம், கோப்பாய் மத்தி,
கோப்பாய்.


(J/2876)
(10,17)

தகவல்: குடும்பத்தினர்.
077 5091643

## மரண அறிவித்தல்

### கிறிஸ்தோப்பிள்ளை அன்ரனிராஜ்

பிறப்பு
28 . 09 . 1954



இறப்பு
12 . 07 . 2016

ஊர்காவற்துறை நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பிள்ளை அன்ரனிராஜ் நேற்று (12.07.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பிள்ளை-திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் (வசாவிளான்)-இயவேற்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி ஜெயவனிதாவின் அன்புக் கணவரும் ராஜ்குமாரின் (தொழிநுட்ப உதவியாளர் விவசாயத் திணைக்களம்) பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், ஸ்ரனிஸ்லாஸ், மேரிஸ்ரெலா, மேரிமெக்ரலின் மற்றும் றாஜேஸ்வரி (யாழ்ப்பாணம்), அல்விஸ்ரன் (ஜேர்மனி), இராசநாஜகம் (கிளிநொச்சி-மசு தங்கும் விடுதி), மேரி பிலோமினா (நாரந்தனை), மேரி அசுந்தா (நீர்கொழும்பு), பீற்றர்போல்(யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவராசாவின் (பெரியதம்பி-இராமநாதபுரம்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று(13.07.2016) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கரவெட்டி பரலோகமாதா தேவாலயத்தில்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கரவெட்டி கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஜெயவனிதா(மனைவி)
ராஜ்குமார் (மகன்)
077 691 3371

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

மலர்வு
27 . 07 . 1950



உதிர்வு
07 . 07 . 2016

ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும் ஆலடி உடுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் கடந்த (07.07.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் சிவகணேசன்(பிரான்ஸ்), ஜெய கணேசன்(பிரான்ஸ்), ராஜகணேசன்(பிரான்ஸ்), செல்வகணேசன்(பிரான்ஸ்), செந்தில் கணேஷ்(பிரான்ஸ்), ஜெயவதனி(B.A பட்டதாரி யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி, நாகேஸ்வரி, குமாரசாமி, சண்முகராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிறேமினி, சாரதா, யசோதா, சந்யா, ஜலகோபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ்பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுஷன், நிதுஷன், விதுஷன், அக்ஷயா, அஷ்ரிகன், அக்ஷரா, தக்ஷானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2016) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி, உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

(J 2753)
(14.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு : 077 7351 948, 021 225 5409

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குக், ரூட் இருவரைத் தவிர இங்கிலாந்தில் ஒன்றுமில்லை

*ரியாஸ் தெரிவிப்பு*

அலிஸ்டர் குக், ஜோ ரூட் இருவரையும் தவிர இங்கிலாந்தின் துடுப்பாட்ட வரிசையில் வேறொன்றும் இல்லை எனத் தெரிவித்தார் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளரான வகாப் ரியாஸ்.

இங்கிலாந்து அணியைப் பொறுத்தமட்டில் குக், ரூட் இருவருமே பாகிஸ்தானின் பந்துவீச்சுக்கு சவால் தருவார்கள். இருவரையும் வீழ்த்தி விட்டால் இங்கிலாந்தில் துடுப்பாட்ட வரிசை ஒன்றுமில்லாமல் போய்விடும். இலங்கைக்கு எதிரான தொடரில் பரிஸ்ரௌவ், மொயின் அலி ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டதால் எமக்கு எதிரான தொடருக்காக அவர்களை கருத்திற்கொள்ள வேண்டுமென்றில்லை என ரியாஸ் மேலும் தெரிவித்தார். (ம)




# வாழ்வின் ஆகச் சிறந்த தருணம்; ரொனால்டோ நெகிழ்ச்சிப் பேச்சு

யூரோக் கிண்ணத்தை தனது கையிலேந்திய தருணம்தான் வாழ்வின் ஆகச் சிறந்த தருணம் எனத் தெரிவித்தார் போர்த்துக்கலின் தலைவரான ரொனால்டோ.

2004ஆம் ஆண்டு யூரோக் கிண்ணத் தொடரில் தனது 17 ஆவது வயதில் போர்த்துக்கல் அணியில் அறிமுகமானார் ரொனால்டோ. ரொனால்டோ வந்த அதிஷ்டமோ என்னமோ அதுவரை பன்னாட்டு மதிப்பு பெற்ற தொடர்களில் அரையிறுதிக்குக்கூட முன்னேறாத போர்த்துக்கல் அந்தத் தொடரில் இறுதிக்குத் தகுதிபெற்றது. ஆனால் கிரேக்கத்திடம் கிண் ணத்தை தவறவிட்டது. இதன் பின்னர் போர்த்துக்கல் இறுதிக்குத் தகுதி பெற்றது நடப்பு வருட யூரோக் கிண்ணத்தில் ரொனால்டோவின் தலைமையில்தான். ஆனால் இம்முறை இலக்கு தவறவில்லை. பன்னாட்டு மதிப்பு பெற்ற தொடரை முதன்முறையாக கைப்பற்றியது. ஆட்டத்தின் பின்னர் உரையாற்றுகையில், கிண்ணத்தை கையிலேந்திய தருணமே தனது வாழ்வின் சிறந்த தருணம் என ரொனால்டோ தெரிவித்தார்.

கவலையையும் மகிழ்ச்சியையும் நான் உணர்ந்தேன். எனது வாழ்வின் மிக மகிழ்ச்சியான தரு ணங்களில் யூரோவைக் கையிலேந்தியது ஆகச் சிறந்தது என்று என்னால் உறுதியாகத் தெரிவிக்க முடியும். என் தேசியம் சம்பியனாகியுள்ளது. கோடிக்கணக்கான மக்களின் கனவு நிறைவேறியது. இன்று (நேற்றுமுன்தினம்) என் மக்கள் பலர் அழுவார்கள். நானும் கதறி அழுதேன். ஆனால் இது மகிழ்ச்சியின் அழுகை, வெற்றியின் அழுகை என ரொனால்டோ மேலும் தெரிவித்தார். (ம)

# மெஸ்ஸிக்கு ஆதரவாம்

வரி ஏய்ப்பு விவகாரத்தில் 21 மாதங்கள் சிறை விதிக்கப்பட்டுள்ள பார்சிலோனாவின் நட்சத்திர வீரரான மெஸ்ஸிக்கு ஆதரவான பரப்புரையை பார்சிலோனா கழகம் ஆரம்பித்தது.

குறித்த வழக்கில் மெஸ்ஸிக்கு ஆதரவாக பார்சிலோனா கழகம் செயற்படவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. மட்டுமல்லாமல், மெஸ்ஸி பார்சிலோனாவை விட்டு வெளியேப்போகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே மெஸ்ஸிக்கு ஆதரவான பரப்புரையை பார்சிலோனா ஆரம்பித்தது.

இது தொடர்பாக பார்சிலோனா வெளியிட்ட அறிக்கையில், மெஸ்ஸி தனியாக இல்லை என்பதை நாம் அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். அவரது ரசிகர்கள் அனைவரும் சமூக வலைத்தளங்களில் மெஸ்ஸிக்கான ஆதரவை தெரிவிக்க வேண்டும் என்று அந்தக் கழகம் கேட்டுள்ளது. (ம)

# ஆட்டம் ஆரம்பம்; முர்ரே தெரிவிப்பு

நடப்பு வருட விம்பிள்டன் தொடரைக் கைப்பற்றிய முர்ரே தனது ஆட்டம் இனிமேல்தான் ஆரம்பம் என்று தெரிவித்தார்.

ரென்னிஸ் உலகில் 2000 ஆம் ஆண்டுகளில் பெடரர், ரபேல் நடால் இருவரின் ஆதிக்கம் காணப்பட்டது. பின்னர் பெடரரின் போர்ம் இழப்பு, நடாலின் உபாதைகளைத் தொடர்ந்து, ஜோக்கோவிக்கால் முழுமையாக ஆதிக்கம் செலுத்தப்படும் ஒன்றாக, ஆண்கள் ஒற்றையர் ரென்னிஸ் மாறியுள்ளது. மிக நீண்ட காலமாகவே, ரென்னிஸ் உலகத்தை ஆதிக்கம் செலுத்தும் ஒருவராகக் கருதப்பட்டிருக்காத அன்டி முர்ரே, அண்மைக்காலத்தில் முன்னேற்றங்களை வெளிப்படுத்தியுள்ளார். விம்பிள்டனில் இம்முறை சம்பியன் பட்டத்தையும் வென்றிருந்தார். இந்த நிலையிலேயே முர்ரே இவ்வாறு தெரிவித்தார்.

எனது சிறந்த ரென்னிஸ் இனிமேல்தான் உள்ளது. ஒவ்வொருவருடைய நேரமும் வெவ்வேறான பருவங்களில் வரும். எனக்கு இனிமேல் தான் என நான் நம்புகிறேன். எனது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஜோகோவிக், பெடரர், நடால் எனும் வீரர்களை சமாளிக்க வேண்டியிருக்கும். நிச்சயமாக சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என முர்ரே மேலும் தெரிவித்தார். (ம)

# யூரோ இறுதியாட்டத்திலும் வெடித்தது ரசிகர்கள் மோதல்

ஐரோப்பிய கால்பந்து தொடரின் இறுதி ஆட்டத்தை காண்பதற்காக குவிந்த ரசிகர்கள் மத்தியில் மோதல் வெடித்தது பரபரப்பை ஏற்படுத்தியது.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் தொடர் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் பிரான்ஸ், போர்த்துக்கல் அணிகள் மோதின. 1:0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் சம்பியனானது. ஆட்டத்தை நேரில் காணமுடியாத ரசிகர்களுக்கு ஈபிள் கோபுரத்தின் கீழ் பெரிய திரை அமைத்து நேரலையின் மூலம் காண்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 90 ஆயிரம் ரசிகர்களையே திரை அமைக்கப்பட்ட இடம் கொள்ளும். ஆனால் அதற்கும் அதிகமான ரசிகர்கள் குவிந்ததால் ஏனையவர்களை பொலிஸார் வெளியேற்றினார். இதனால் பொலிஸாருக்கும் ரசிகர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுப் பின்னர் அது கைகலப்பாக மாறியது. ரசிகர்கள் பொலிஸார் மீது கண்ணாடிப் போத்தல்களையும் தீப் பந்தங்களையும் விட்டெறிந்தனர். பொலிஸார் தண்ணீர் பீச்சியடித்து ரசிகர்களை விரட்டினர். கலவரத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 40 பேர் கைது செய்யப்பட்டனர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண தடகளத் தொடர் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை கோலாகல ஆரம்பம்



பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடர் நாளை முதல் ஐந்து தினங்கள் வரை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை முடிவடைந்த போட்டிகளின் அடிப்படையில் ஒட்டுமொத்தமாக 1,056 புள்ளிகளைப் பெற்று யாழ். கல்வி வலயம் முதலிடத்தில் உள்ளது. 547 புள்ளிகளைப் பெற்று வலிகாமம் கல்வி வலயம் இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்த இரு வலயங்களுக்கும் இடையே கிட்டத்தட்ட 500 புள்ளிகள் வித்தியாசம் காணப்படுகிறது. வடமராட்சி கல்வி வலயம் 401 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் உள்ளது. கிளிநொச்சி கல்வி வலயம் 157 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், 154 புள்ளிகளுடன் வவுனியா தெற்கு கல்வி வலயம் ஐந்தாம் இடத்திலும் உள்ளன. ஆறு முதல் பன்னிரண்டு வரையிலான இடங்களில் முறையே தென்மராட்சி கல்வி வலயம், துணுக்காய் கல்வி வலயம், மன்னார் கல்வி வலயம், முல்லைத்தீவு கல்வி வலயம், வவுனியா வடக்கு கல்வி வலயம், தீவக கல்வி வலயம், மடு கல்வி வலயம் ஆகியன உள்ளன.

முதல் நாள் போட்டிகள் மு.ப. 10.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளன. இதன்படி முதல் நாளில் 13 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல், 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதல், 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல், 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல், 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல், 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல், 21 வயதுக் குட்பட்ட பெண்களுக்கான குண்டு போடுதல், 13 வயது, 15 வயது, 17 வயது, 19 வயது, 21 வயது இருபாலாருக் குமான 200 மீற்றர் தெரிவும், அரையிறுதிப் போட்டிகளும், 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறில், 17 வயதுக்குட்பட்ட, 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல், 19 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தல், 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல், 17 வயதுக்குட்பட்ட, 19 வயதுக்குட்பட்ட, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 800 மீற்றர் தெரிவுப் போட்டி, 17 வயதுக் குட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதல் ஆகியன நடைபெறவுள்ளன. வடமாகாண மீன்பிடி அமைச்சின் பதில் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத்தூதர் ஏ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-422)



## மாகாண கரப்பந்தாட்டத் தொடரில் சோமஸ்கந்தா கிண்ணம் வென்றது


யாழ்ப்பாணம், ஜூலை 13

பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி சம்பியனானது.

நெல்லியடி மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி அணி மோதியது.

இதில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது சோமஸ்கந்தா கல்லூரி அணி. மூன்றாமிடத்தை கிளிநொச்சி வேரவில் இந்துக் கல்லூரி அணி தனதாக்கியது. (ம-422)

## இளையோர் கூடைப்பந்தில் சம்பியனானது யாழ். மத்தி



யாழ்ப்பாணம் ஜூலை 13

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம நடத்திய தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதியது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 53:48 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

## உருத்திரபுரம் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூலை 13

முரசுமோட்டை விளைபூ விளையாட்டுக் கழகம் நட திய விலகல் முறையில காலபந்தாட்டத் தொட உருத்திரபுரம் அணி ச னானது.

விளைபூமி விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தளிர் அணி மோதியது. இதில் உருத்திரபுரம் அணி 2:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது. சிறந்த வீரனாக உருத்திரபுரம் அணியின் ஜனகன், [illegible] [illegible] காப்பாளராக குணேஸ் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)




ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் 4 ஏக்கர் பரப்பளவுள்ள விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. அரச ஊழியர்கள். உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடும் முகமாகவே இந்த மைதானம் அமைக்கப்படுகிறது. (ம-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPOKEN ENGLISH

இளைஞர் யுவதிகள், O/L, A/L எழுதியோர், தொழில் தேடுவோர் அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 17.07.2016

1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00

வாரநாள் வகுப்புகள் [செவ்வாய், வியாழன்] காலை 10-12

SAMSON
021 320 3313
077 1570 486

# வேலை வாய்ப்புக்கள்

* Sales Assistant-03
* Personal Assistant-04
* Drivers-02
* Graphic Designers-01
* Ware house helpers-01
* Managment Coordinators-01
* Farm Workers-05
* waiters-10
* Advertising Models-02
* Pharmacist-02
* Cashier-02
* Supervisore-02
* Export Managers-02
* Receptionist-01
* Travel Excecutive-01
* Office Admisistrative-01
* Electrical Engineer-01
* Site supervisors-01

நீங்கள் விரும்பும் வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள புகைப்படத்துடன் கூடிய சுயவிபரக் கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளுங்கள்.

இவ் வருடம் எம் மூலமாக நூற்றுக்கும் அதிகமானவர்கள் வேலை பெற்றுச் சென்றுள்ளனர்.

WINSTAR JOB BANK
#106, தபாற்பெட்டிச்சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
T. 021 3202789 (10am-4pm)
fb:winstarjaffna web:www.winstarjaffna.com

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

FRENCH பிரெஞ்சுமொழி

0212228093 61, கச்சேரி-நல்லூர், வீதி, யாழ்ப்பாணம்.

EB EXAM இற்கு உரிய துரித வழிகாட்டல் வகுப்புக்கள்-2016

DEVELOPMENT OFFICER மற்றும் PMA ஆகிய பதவிகளில் மத்திய அரசில் கடமையாற்றும் அலுவலகர்களுக்கு நடத்தப் படவுள்ள மேற்படி பரீட்சைக்குரிய துரித வழிகாட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இடம்: GAS-மக்கள் வங்கி அருகில், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில்
வளவாளர்கள்:
FR- திரு K. பிரதீபன் (SLAUS)
IT- பிரபல விரிவுரையாளர்
AR- திரு ஆ. சத்தியமூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர்)

தொடர்பு: 077 8448709

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல: 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

A/L 2016
விசேட செயலமர்வு
15,16 திகதிகளில்
தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்
17,18 திகதிகளில்
I.C.T, விவசாயம், புவியியல்

* எதிர்பார்க்கை வினாக்களும் விடைகளும், கையேடுகளும் வழங்கப்படும்.

நேரம் காலை 8.30 - 1.30

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்
கட்டணம் அறவிடப்படும்
தொடர்புகளுக்கு 0772487774

## சிக்கியது கென்யா



கென்ய நாட்டில் உள்ள பிரபல பயிற்சிக் கூடமொன்றில் ஊக்கமருந்துப் பயன்பாடு தற்போதும் உள்ளமை கண்டறியப்பட்டது. ஜேர்மனிய தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றே இதை வெளிப்படுத்தியது. இதன்படி கென்யாவின் ஐடன் நகரிலுள்ள முன்னணி வீரர்களுக்கான பயிற்சிக் கூடத்துக்கு விளையாட்டு வீரர் போன்று சென்ற ஊடகவியலாளர் ஒருவர், மறைக்கப்பட்ட கமரா மூலம் அங்கு நடப்பவற்றைப் படம்பிடித்துள்ளார். அதில், ஊக்கமருந்துகள் மிக இலகுவாகக் கிடைக்கப்பெறச் செய்யப்பட்டுள்ளமை பதிவானது. அத்துடன் அங்கு விளையாட்டு வீரராக நடிக்கும் ஊடகவியலாளருக்கு மருத்துவர்கள் ஊக்கமருந்துகளை வழங்க முன்வருவதும் படம்பிடிக்கப் பட்டது. அதிலொரு மருத்துவர், பிரித் தானியாவைச் சேர்ந்த தடகள வீரர்கள் உள்ளிட்ட 50 பேருக்கு ஊக்கமருந்துகளை வழங்கியுள்ளதாகக் கூறுவதோடு, மூன்று மாதங்களுக்குள் உயர்வான பெறுபேறுகளைப் பெற முடியுமெனவும் தெரிவித்தமையும் பதிவாகியுள்ளது. இவை தற்போது குறித்த தொலைக்காட்சி அலைவரிசையால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதே அலைவரிசைதான் ரஷ்யாவின் தில்லுமுல்லுகளையும் அம்பலப்படுத்தி அந்த அணிக்குத் தடையைப் பெற்றுக் கொடுத்தது. (ம)

றோயல் மெடிக்கல் சென்ரர்
திறப்பு விழா அழைப்பு

இதுவரை இல.454, யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த
றோயல் மெடிக்கல் சென்ரர்
நாளை (14.07.2016) வியாழக்கிழமை முதல் நவீன வசதிகளுடன் இல.458, யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புதிய கட்டடத் தொகுதியில் Dr.P. சத்தியகுமார் (பல், முக சீராக்கல் - வைத்திய நிபுணர் - யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களால் காலை 8.20 மணியளவில் உள்ள சுபவேளையில் மங்கலகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது.

எமது சேவைகள்
* வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
* பற்சிகிச்சை நிபுணர்களின் சேவை
* மருத்துவ ஆய்வுகூட சேவை
* பாமசி

றோயல் மெடிக்கல் சென்ரர்
இல.458, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
021 320 2300, 021 221 [illegible]

உரிமையாளர்களும், பணியாளர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.